பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 28 வெள்ளிக்கிழமை (11.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 197

11 JUN 2010

# வெனிசுலாவின் ஆதரவைப் பெற விடுதலைப் புலிகள் முயற்சியாம்!

## இலங்கை அரசின் பிரதிநிதி அங்கு அவசரமாக விஜயம்

கொழும்பு, ஜூன் 11

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு வெனிசுலா அரசின் தார்மீக ஆதரவைப் பெறுவதற்கு வெளிநாடுகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று இலங்கை அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இதனால் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு, புலிகளின் முயற்சியை முறியடிப்பதற்காக கியூபாவுக்கான இலங்கைத் தூதர் தமாரா குணநாயகத்தை இலங்கை அரசு அவசர அவசரமாக வெனிசுலாவுக்கு அனுப்பியிருக்கிறது.



இலங்கை அரசின் உத்தரவின் பேரில் வெனிசுலாவுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ள தூதர் தமாரா குணநாயகம் அந்நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இந்தத் தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

(23ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோக் காட்சிகளை போனில் வைத்திருந்தவர் வவுனியாவில் கைது

கொழும்பு, ஜூன் 11

வவுனியா, பாவற்குடாச் சேனைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான காட்சிகள் அடங்கிய வீடியோப் படங்களை கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த ஒருவர் அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிய காட்சிகள், புகைப்படங்கள், பாடல்கள் என்பன அந்தக் கையடக்கத் தொலைபேசியில்(24ஆம் பக்கம் பார்க்க)

### பனடோல் மாத்திரை கூட இல்லை

## வன்னியில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நடமாடும் வைத்திய சேவை நடத்துக

### செல்வம் எம்.பி. அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் நடமாடும் வைத்தியசேவையை நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.யான செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வைத்தியசேவை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் வைத்தியசேவைக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. பனடோல் மாத்திரைகூட அங்கு இல்லை. அங்கு நடமாடும் வைத்தியசேவை ஒன்று நடத்தப்படவேண்டும்.

வைத்தியர்கள் அங்கு தங்கிச் சேவை செய்வதற்கு அரசு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் அங்கு சேவை செய்ய மனமிருந்தாலும் அவர்கள் தங்குவதற்கு இடமில்லை.

வன்னியில் தங்கி அம்மக்களுக்கு சேவை செய்யவிரும்பும் வைத்தியர்களுக்கு அரசு முன்னுரிமை வழங்கவேண்டும். அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் வன்னி மக்களுக்கான இந்தச் சேவையைப் பெற்றுக்கொடுக்கமுடியும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி நிலைமை மோசமடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை

### இந்தியா, பாகிஸ்தான் நாடுகளும் அதே நிலையில்

கொழும்பு, ஜூன் 11

அமைதி நிலைமை மிக மோசமான கட்டத்தில் இருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் பொருளியல் மற்றும் அமைதிக்கான ஸ்தாபனத்தின் வருடாந்த கணிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் அமைதி நிலை எப்படி இருக்கின்றது என்று இந்த அமைப்பு வருடாந்தம் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிடுவது வழமையாகும். 149 நாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தி இந்த ஆண்டும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நாடுகளில் கடந்த வருடம் நிலவிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸை கைது செய்யக் கோரும் மனு சென்னை நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு



### எதனையும் எதிர்கொள்ளத் தயார் என்கிறார் அவர்

சென்னை, ஜூன் 11

இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விவரங்கள் குறித்து டில்லிப் பொலிஸாரிடம் தகவல் கோரியுள்ளோம். அங்கிருந்து விவரங்கள் கிடைத்ததும் அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் ரி. ராஜேந்திரன்.

இலங்கை அமைச்சரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக மக்கள் உரிமைக் கழகத்தின் செயலாளர் ப. புகழேந்தி சார்பில் வழக்கறிஞர் எம். ராதாகிருஷ்ணன் சமர்ப்பித்த மனு இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. அது குறித்து பொலிஸ்தரப்பு வேகமாகச் செயற்படுவதாகவும் ராஜேந்திரன் சொன்னார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் இருந்த போது சென்னையின் சூளைமேட்டுப் பகுதியில் 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய – இலங்கை ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்துக

### திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இந்திய விஜயத்தின்போது, அந்நாட்டுடன் கையெழுத்திட்ட உடன்படிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் குறித்து நாடாளுமன்றில் தெளிவுபடுத்த வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இந்திய விஜயத்தின்போது கையெழுத்திட்ட 7 உடன்படிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் குறித்த விவரத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளவை குறித்து நாடாளுமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படவில்லை. அவை தொடர்பான எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை என்றும் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக்(24ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களுக்கு வன்னியில் சேவையாற்ற இடமில்லையாம்

கொழும்பு, ஜூன் 11

வெளிநாட்டு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங் களுக்கு வன்னியில் சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

வன்னியில் தொண்டுகளை மேற்கொள்ள வெளிநாட்டு அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை, ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க மஹிந்தவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 11

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை [illegible] விட்டு, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் உரிய அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்றும், அவர் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் இந்தியாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான 'எக்கொனமிக் ரைம்ஸ்' வலியுறுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி இப்பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டி உள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதை வியாபாரிகள் 24 பேர் பொலிஸாரின் வேட்டையில் சிக்கினர்

## பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.நகரப்பகுதியில் தடை செய்யப்பட்ட இடங்களில் நடைபாதைக் கடைகளை அமைத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட 24 வியாபாரிகள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 17 பேர் யாழ்.நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ்.நகரப் பகுதியில் மக்களுக்கு இடைஞ்சல் செய்யும் வகையில் நடைபாதைகளை அமைத்து வியாபாரம் செய்து வந்த 24 பேர் யாழ்.மாநகர சபை அதிகாரிகளின் உதவியுடன் யாழ்.பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களின் விற்பனைப் பொருள்களும் அள்ளி ஏற்றிச் செல்லப்பட்டன.

நானாவிதப் பொருள்கள் மற்றும் பழவகைகள் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன. இவர்களில் முதலில் ஆஜர் செய்யப்பட்ட எட்டுப் பேருக்கும் தலா 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சில பொருள்கள் மீள ஒப்படைக்கப்பட்டன. சில பொருள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் 9பேர் நேற்று மாலை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இன்று மேலும் 7பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருக்கின்றனர். (ஒ-1)

### சிறப்புக் கருத்தரங்கு

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் யாழ்.சேகரத்தின் ஏற்பாட்டில் அருட்திரு. யோசுவாரட்ணம் அடிகளாரின் வழிகாட்டலில் வாலிபர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் வேம்படி வீதியில் அமைந்துள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

பி.ப.3.30 மணிக்கு அருட்திரு.யோசுவாரட்ணம் அடிகளாரின் 'இரத்தினச் சிந்தனைகள்' என்னும் நூல் வெளியீடும், 'இயேசுநாமம் போற்றுவோம்' இறுவட்டு வெளியீடும் இடம் பெறவுள்ளதால் அனைத்துக் கிறிஸ்தவ கலை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-1)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

யாழ்.மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட 20 - 25 வயதுக்கு இடைப்பட்ட விற்பனைப் பிரதிநிதி தேவை. முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0773283372

Berlux Paints (Pvt) LTD

20 A, பண்டாரநாயக்க மாவத்த, மஹபாகே, ராகம.

Fax: 0112 959645

# சமூக அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க ஆர்வலர்களை அழைக்கிறார் மேயர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (நெல்சிப்) யாழ். மாநகர அபிவிருத்திக்கு மக்கள் பங்கேற்புடனான சமூக அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக சமூக ஆர்வலர்களை இணைந்துகொள்ளுமாறு மாநகர முதல்வர் கேட்டுள்ளார்.

யாழ். மாநகர அபிவிருத்தித் திட்டத்திற்கு ''நெல்சிப்'' திட்டத்தின் ஊடாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வேண்டுதலிற்கமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய மாநகர முதல்வர் தலைமையில் மாநகர பிரதேசத்தில் 23 வட்டாரங்களும் 9 கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் காணப்படும் பிரச்சினைகளை மக்கள் பங்கேற்புடன் இனங்கண்டு திட்டவரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

எனவே,மக்கள் பங்கேற்புடனான சமூக அபிவிருத்தித் திட்டத்தைச் சிறந்த முறையில் தயாரிக்க யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், நேரிய சிந்தனையுடன் இப்பணியில் இணைந்து கொள்ளுமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா கேட்டுள்ளார். (ஒ-10)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA NO1 குஞ்சுகள் 12.06.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொ.பே:0212223270 திருமகள் களஞ்சியம்,
சிவலிங்கப்புளியடி.
0213737647 702, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடை ஒன்றில் கண்ணாடி அலுமாரிகள், இரும்புப் பெட்டகம் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0775443203 (99311)

**தளபாடங்கள் விற்பனைக்குண்டு**

கடைக்குப் பாவிக்கக் கூடிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சுசில் புடைவையகம்,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

**வீடு, காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு சமீபமாக (200m) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 043852, 0773313104 (99327)

## 45ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 23 ★ 01 ★ 1981

ஆண்டவன் அடியில் 28 ★ 04 ★ 2010



### செல்வி வீமராஜா மாதுமையாள் (ராஜி)

ராஜி, ராஜி என்றழைத்து ராசியானவள் என்றிருக்க
கால் வழியில் நீரும் கானகம் சென்றதேனம்மா
அம்மா, அம்மா என்று அடிக்கொருதரம் அழைப்பவளே
உன் அம்மாவை விட்டு அரைநொடியில் சென்றதேனம்மா
பூவாய் மலருவாய் என்று நாம் எல்லோரும் காத்திருக்க,
கருகிய மொட்டாகி கடுகதியாய் சென்றதேனம்மா
எல்லோருக்கும் நல்லபிள்ளை எங்களுக்கு செல்லப்பிள்ளை
பாசமழை பொழிந்தவளே பறந்து நீ சென்றதேனம்மா
பல்கலையில் பட்டம் வாங்கும்வரை காத்திருந்த
பொல்லாத காலன் உனைக் கவர்ந்து சென்றதென்ன
ஊரெல்லாம் இடிக்கும் இடிக்கு எம்வீடும் தப்பாதென
உன்தலையில்தான் இடித்து ஆகுதியாய் கொண்டதென்ன
நாம் அழுதகண்ணீர் போதவில்லையென்றோ
விண்மகளும் உனக்காக கண்ணீர் உகுத்தாளோ
நீ இருந்த இடம், நின்ற இடம், நடந்த இடம் வெறிச்சோடிக் கிடக்குதம்மா
உன் நினைவலைகள் மட்டும் நிழலாய்தொடருதம்மா.
அழகுத்திருமுகம் எங்கே, அணி சேர்க்கும் சிரிப்பெங்கே
மேன்மையான பேச்செங்கே மகளே இப்பிறவியில் காண்போமா இனி.
எம் எல்லோரையும் தவிக்கவிட்டு தனிவழியே சென்றவளே
என்னையாம் பதியுறையும் வாலாம்பிகை சமேத
வைத்தீஸ்வரர் பாதங்களில் என்றும் அமர்ந்திருக்க அவர்களை இறைஞ்சுகின்றோம்.

எமது அன்பு மகள் இறைபதம் அடைந்தபோது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள், யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், சகஉத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர் அஞ்சலி செலுத்திய யாழ். பல்கலைக்கழக விவசாய பீட 14ஆம்,15ஆம் அணி மாணவர்கள், விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO), CRISTIAN AID நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

463/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சீ/568313) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா சுப்பிரமணியம்



அராலியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய செல்லப்பா சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) நேற்றுமுன்தினம் (09.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,பண்டத்தரிப்பு. (99330) தகவல்: மனைவி.

## இராசையா சசிகலா



அலுக்கை, அளவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசையா சசிகலா நேற்று (10.06.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் தவராசா, ஸ்ரீரங்கன், உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அலுக்கை,
அளவெட்டி கிழக்கு. (99328) தகவல்: குடும்பத்தினர்.

## மோசேஸ் மரியமோட்சமுத்து



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மோசேஸ் மரியமோட்சமுத்து நேற்று (10.06.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மோசேஸ்ஸின் அன்பு மனைவியும் பவுலஸ் பாக்கியநாதன் (வலோஸ்), றோசலின், றிச்சேட், ஞானமலர், காலஞ்சென்ற தாசியஸ் (ராசன்) மற்றும் மைக்கல் கொலின் (துரை), எட்வின் அல்ரின் (அன்ரன்) ஆகியோரின் பாசமிகு தாயும் அற்புதா, ஜேம்ஸ்தாஸ், ஜெயந்தினி, விமலதாசன், சந்திரகுமாரி, யசிநிலானி ஆகியோரது அன்பு மாமியும் ஜெறோ, ஜெறின், றொபினா, டொறினா, லெயோனா, மொமீனா, சஜி, சுவி, றொஜி, றொக்ஷி, லக்ஷி, டொறஸ்கா, அலன்பீற், யூட், கயதாஸ் ஆகியோரது அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம். (99332) தகவல்: குடும்பத்தினர்.

**STR COMPUTER SYSTEM**

Head Office 385, Galle Road, Colombo - 06.

384, Navalar Road, Nallur, Jaffna.

T.P : 021-222 4459, 0774192275, Fax : 021-222 4460

**COMPUTER ACCESSORIES PRICES**

Intel 31 Chipset Mother Board = 5250, Intel Dual Core 2.7GHz Processor = 8500, 250 GB Sata Hard Disk = 5250, DVD Writer Sata = 2900, 1 GB- DDR II Kingston Ram 4000, Casing – Atx Tower Model = 2450, 16" LCD Monitor = 12,650, 12A & 35A Original Toner = 7750, USB Wireless Dongle = 2500, PCI Wifi Card = 2500, Original Webcam 5.0 Mega Pixels = 2200, 1.3 Mega Pixels = 650, Original Laptop Power Adaptor (HP, TOSHIBA = 3750, Kaspersky Internet Security (3 User) = 2900, 16GB Flash Drive = 2250, 32GB Flash Drive = 3250, Sony Optiacal Mouse = 400, Key Board = 500, Head Phone = 600.

Complete System 42,850/= Warranty 3Year

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இது சரியா, நியாயந்தானா?

வன்னியில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் வீடுகள் போரின்போது அழிந்துள்ளன. ஒரு வீட்டை நிர்மாணிக்க மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபா தேவை. அதனால் அவற்றைப் புதிதாக நிர்மாணிக்கப் பெருந்தொகையான நிதி தேவை. அந்தளவு பெருந்தொகை நிதியை அரசாங்கத்தினால் வழங்க முடியாது.

ஆகையால் வீடுகளை அரசாங்கம் நிர்மாணித்துக் கொடுப்பது என்பது இயலாத காரியம். பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்க்கையை நடத்த சகல வசதிகளையும் அரசு செய்துகொடுத்தால் மக்கள் தாமாகவே அவர்களுக்குரிய வீடுகளை நிர்மாணிக்க முடி யும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. அவர் கூறுவது தர்க்கரீதியாகச் சரியாக இருக்கலாம். ஆனால் அது நடைமுறைச் சாத்தியமானதா என்பது முழுக்க முழுக்கச் சந்தேகமே.

அவர் முற்றும் முழுதாக, அமைச்சர் என்ற நிலையில் நின்று இந்தத் தர்க்கத்தை முன்வைத்திருக்கிறார். பாதிக்கப்பட்ட மக்கள் உழைப்பாளிகளாக மாறுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். அதற்குத் தேவையான பணத்தை அரசு உடனடியாக கொட்டிக் கொடுக்கும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

ஆண்டி மடம் கட்டும் கதைபோன்று, அமைச்சர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைக்கும் பதிலளித்து, வெகு கெட்டித்தனமாக தப்பிக் கொள்ள முயற்சிக்கிறார்.

ஷெல் வீச்சிலும் மோட்டார் தாக்குதல்களிலுமே வன்னியில் பெரும் எண்ணிக்கையான வீடுகள் நிர்மூலமாகின. ஆகையால், நாசமாகிய வீடுகளை மக்களுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியதற்கு மழுப்பலான பதில் ஒன்றை முன்வைத்திருக்கிறார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

வன்னிப் பிரதேசத்தில் 80 முதல் 90 சதவீதமான வீடுகளை அழித்து நிர்மூலமாக்கியபோது - மக்களைப் பற்றியோ அவர்களின் ஏனைய சொத்துக்கள் குறித்தோ கிஞ்சித்தும் கவலைப்படாமல் அரசாங்கம் - அரசாங்கப் படைகள் - அழித்தபோது, அதனால் ஏற்படப்போகும் நட்டத்தை தானே ஏற்றுக்கொள்ள நேரிடும் என அரசால் உய்த்துணர முடியவில்லை. காரணம், தமிழ் மக்கள் செத்து ஒழிந்தால் என்ன அவர்களின் சொத்துக்கள் நாசமாகினால் என்ன போரில் வெற்றிகொண்டால் போதும் என்ற 'வெறி' யுடன் அரச தரப்பு அவ்வேளை செயற்பட்டது. அதன் பொருட்டு கழிவிரக்கம் கொள்வதற்குக் கூட அரசு தயாரில்லை என்பதனையே அமைச்சர் பஸிலின் இப்போதைய பதில் வெளிப்படுத்துகிறது.

ஏனைய உட்கட்டுமானங்களின் தேவைக்கு வெளிநாட்டு நிதிஉதவிக்குக் கையேந்தும் அரசாங்கம், தானே அழித்த தமிழ்மக்களின் வீடுகளைக் கட்டிக்கொடுக்க அதனை நாடுவது வெட்கம் என்று நினைக்கிறதா?

பில்லியன், பில்லியன் என்று கணக்குப் பார்க்காமல் போருக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவித்த அரசினால், தமிழர்களின் அடிப்படைத் தேவையான வீட்டு வசதியைச் செய்வதற்கு உதவி கோருவதற்கு வெட்கமாக இருக்கின்றதோ...? உலகநாடுகளின் நிதி உதவிக்கான அளவைத் தாண்டும் அளவுக்குப் போருக்கும் ஏனைய வீண்செலவுகளுக்கும் ஏற்கனவே கடன்பட்டாயிற்றோ....?

ஈழத் தமிழ்மக்கள் தனது பிரஜைகள். அதனால் அவர்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்; உயிரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதாலேயே போரின் உச்சக்கட்டத்தில் தாக்குதல் இடைநிறுத்தமொன்றை மேற்கொண்டதாகக் கூறிய அரசு -

தனது இரக்க சுபாவத்தால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிர்பிழைத்தார்கள். (அகதிகளானார்கள்) என்று கூறும் அரசு -

வீட்டு வசதி போன்ற அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை உருவாக்கிக்கொடுத்தால் மட்டுமே அவர்களின் உயிர்களை தக்கவைத்ததன் பெறுமதியை, பெருமையைத் தேடிக்கொள்ள முடியும். இல்லையேல் மொத்தத்தில் எல்லாமே வெறும் பொய்மையும் பம்மாத்தும் வேஷமும் ஆகிவிடும் என்பதனை அரசு உணராதிருப்பது ஏனோ?

# நயினை நாகபூஷணி அம்மனுக்கு நாளை கொடி; திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

### நாளாந்தம் 30 படகுச் சேவைகள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன்11


வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை இரவு முத்துச் சப்பறமும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கைலாய வாகனக் காட்சியும் 21ஆம் திகதி திங்கட்கிழமை இரவு திருமஞ்சமும் இடம்பெறும்.

24ஆம் திகதி வியாழக்கிழமை 13ஆம் திருவிழாவான சப்பறமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதேவேளை - நயினை அம்மனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு மக்களின் நலன்கருதி குறிகாட்டுவான் இறங்கு துறையில் இருந்து நயினாதீவுவரை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை 30 படகுகள் சேவையில் ஈடுபடும் என படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. மேலும் ஏழு படகுகளை சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று யாழ்.நகரில் இருந்து தினமும் போக்குவரத்துச் சபையின் 10 சேவைகள் நடத்தப்படவுள்ளன. திருவிழாக் காலத்தில் கோயிலின் சுற்றுச் சூழல் பகுதியில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரையும் மாலை 4.30 தொடக்கம் இரவு 11 மணி வரையும் சகல வாகனப் போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஆலயத்தை அண்டிய பகுதியில் மக்கள் இளைப்பாறுவதற்கு மண்டபங்கள் அமைக் கப்படுவதுடன் மக்களுக்கான சேவையில் கிராம அலுவலர்கள், பொலிஸார், தொண்டர் படையினரும் சேவையில் ஈடுபடவுள்ளனர். குறிகாட்டுவான் இறங்குதுறையில் குடிதண்ணீர், சுகாதார வசதிகள் என்பனவும் செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வரும் பக்கதர்களுக்கு வழமை போன்று அமுத சுரபி அன்னதான சபை சேவையாற்றும். அதேசமயம் பக்தர்களை தங்க நகைகளை அணிந்துவர வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-6-111-224)

## ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கணித, உயிரியல் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன் 11

மொறட்டுவ பல்கலைக் கழக பொறியியல் பீட இரண்டாம் வருட தமிழ் மாணவர்கள் இவ்வாண்டு ஜி.சீ.ஈ. உயர்தர கணித, உயிரியல் மாணவர்களுக்காக நடத்தும் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் பின்வரும் கல்வி நிலையங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூ சயன்ஸ் ஹோல், வி.சி.எம். இன்ஸ்ரிரியூட் (யாழ்ப்பாணம்), நியூ சயன்ஸ் அக்கடமி (சாவகச்சேரி), பீக்கொன் கல்வி நிலையம் (நெல்லியடி).

பதிவு செய்யும் மாணவர்களுக்கான பரீட்சைகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி மத்திய கல்லூரிகளில் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை இணைந்த கணிதம் I, உயிரியல் I, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இணைந்த கணிதம் II, உயிரியல் II.

15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பௌதிகவியல் I, 16 ஆம் திகதி புதன்கிழமை பௌதிகவியல் II, 17ஆம் திகதி வியாழக்கிழமை இரசாயனவியல் I, 19ஆம் திகதி சனிக்கிழமை இரசாயனவியல் II ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறும்.

(ஒ-6)

## உயர் வகுப்பு மாணவர்களுக்கு சங்கீத, நடன, சித்திர பாடக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன்11

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினால் ஜி.சீ.ஈ. (உ/த) மாணவர்களுக்கான சங்கீத, நடன, சித்திர பாடங்களுக்கான கருத்தரங்குகள் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்குகள் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 2மணி வரை நடைபெறவுள்ளன.

சங்கீத பாடத்துக்கான கருத்தரங்கு யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் சித்திர, நடன பாடங்களுக்கான கருத்தரங்குகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

எனவே இந்த வருடம் ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் குறிப்பிடப்பட்ட பாடங்களைக் கற்கும் மாணவர்கள் கருத்தரங்குகளில் பங்கு பற்றி பயன்பெறுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஒ-10)

## கிளிநொச்சி ம.வி. இரு மாடிக் கட்டடத்தை திறக்க இன்று வருகிறார் கல்வி அமைச்சர்

கிளிநொச்சி, ஜூன்11

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா ஒருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று கிளிநொச்சிக்கு வருகிறார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தையும் கணனி அறையையும் அமைச்சர் திறந்து வைக்கவிருக்கிறார்.

கடந்த ஜனவரி மாதம் மீள ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் 35 லட்சம் ரூபா செலவில் இரு மாடிக் கட்டடமும் கணனி அறையும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சை சேர்ந்தோரும் மற்றும் அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் பங்கு பற்றுவார்கள்.

(ஒ-405)

# அனைத்துக் கட்சிக் குழு இணங்கிய யோசனையுடன் தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களையும் உள்வாங்க வேண்டும்

### அதன் மூலமே பொருத்தமான தீர்வைக் காணலாம் என்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஜூன் 11

தேசியப் பிரச்சினைக்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனையுடன் தமிழ்ப் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்வாங்க வேண்டும். இது அப்படியே நடக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சிக் குழுவின் நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலமே இலங்கைக்குப் பொருத்தமான அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும்.

ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துக் கலந்துரையாடியமை சந்தோசமான விடயம். அத்துடன் தீர்வுக்கான பொறிமுறை ஒன்றையும் ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழ்ப் பிரதிநிதிகளின் யோசனைகளையும் ஜனாதிபதி உள்வாங்க வேண்டும். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டத்துடன் தமிழ்ப் பிரதிநிதிகளின் யோசனைகளையும் ஜனாதிபதி உள்வாங்க வேண்டும் என நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் உள்ள 13 கட்சிகளிடையே பெருமளவிலான விடயங்களுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதனை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை நாம் உருவாக்க முடியும் என நான் நம்புகின்றேன். இதற்கு ஜனாதிபதியின் ஒத்துழைப்பும் முழு அளவில் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

தற்போதுள்ள அரசியல் அமைப்பில் சிறு சிறு மாற்றங்களை ஏற்படுத்துவதில் எமக்கு உடன்பாடு இல்லை. 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பு மக்களின் பிரதிநிதிகளை அவர்களிடம் இருந்து தூர விலக்கி வைத்துள்ளது. எனவே மக்களுடன் நெருங்கிச் செயற்படும் அரசியல் அமைப்பு ஒன்று அவசியம். இதற்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைகள் சிறந்த அடித்தளமாக அமையும்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினரின் தீர்வு குறித்த யோசனைகளுக்கு சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களின் ஆதரவு பெருமளவு அதிகரித்துள்ளது. தமிழ் மக்களில் பெரும்பாலானோர் எப்பொழுதுமே ஆதரவளித்துள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தீர்வொன்றை எட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுடன் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவும் 'கூடிப் பேசி சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய - எமது நாட்டுக்குப் பொருத்தமான தீர்வொன்றை நாம் பெறவேண்டும் - என்றார்.

(6)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 29 | 12.06.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : அமாவாசை |
| | பி.ப. 05.22 வரை |
| நட்சத்திரம் | : ரோகிணி |
| | மு.ப. 10.27 வரை |
| சுபநேரம் | : 02.52 - 04.22 |
| ராகுகாலம் | : 08.52 - 10.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மஹிந்த வருகையின்போது ஈழத்தமிழர்கள் தொடர்பாக

# இலங்கை - இந்தியா செய்துள்ள ஒப்பந்தம் வெறும் கண்துடைப்பு!

## 'தினமணி' நாளேடு சாடல்

சென்னை, ஜூன் 11

இந்திய அரசும் - இலங்கை ஜனாதிபதி மஹிந்தவும் ஈழத் தமிழர் தொடர்பாகச் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் வெறும் கண்துடைப்பு என்பதை ஊகிப்பது மிக எளிது.

- இவ்வாறு தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முழுவிவரம் வருமாறு -

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற பின்னர் இந்தியாவுக்கு முதல்முறையாக வரும் மஹிந்த ராஜபக்ஷ, நிச்சயமாக இலங்கைத் தமிழர்கள் நலன் தொடர்பாகப் பேசுவார், உறுதியளிப்பார், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்பதை எல்லோராலும் எப்படி ஊகிக்க முடிந்ததோ அதைப்போலவே, இந்திய அரசும் - இலங்கையும் இலங்கைத் தமிழர் தொடர்பாகச் செய்துகொண்டுள்ள ஒப்பந்தமும் வெறும் கண்துடைப்பு என்பதை ஊகிப்பதும் மிக எளிது.

மூன்று மாதங்களுக்குள் தமிழர்கள் அவர்தம் வாழ்விடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள், அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று தமிழக நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களிடம் மஹிந்த கூறினார் எனக் கூறப்படும் செய்திகளும்கூட, இந்திய மண்ணில் அவர் நின்றுகொண்டிருப்பதால் சொல்லப்படும் வெறும் வார்த்தைகள் என்பதைத் தவிர, அதில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று தென்படவில்லை.

மொத்தம் ஏழு ஒப்பந்தங்களில் இந்தியாவும் - இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன. இதில் ஓர் ஒப்பந்தம் இலங்கையில் உள்நாட்டுப்போரால் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு மறுவாழ்வளித்தல், அவர்களை மீண்டும் அவர்களது மண்ணில் குடியேற்றுதல் தொடர்பானதாகும். இந்த ஒப்பந்தம் செய்யாவிட்டால், இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் அவப்பெயர் ஏற்படும், கடும் விமர்சனங்கள் எழும் என்கின்ற ஒரே காரணத்தால்தான், சர்க்கரை நோயாளியின் சாப்பாட்டு இலையில் வைத்த லட்டுப்போல இந்த ஒப்பந்தமும்



இடம்பெற்றதே தவிர, இதை இலங்கை நிறைவேற்றப் போகிறது என்ற நம்பிக்கை இந்திய அரசுக்கு இருப்பதாகவோ அல்லது இதை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற கட்டாயம் இருப்பதாக இலங்கை அரசு நம்புவதாகவோ சொல்வதற்கில்லை.

இரு நாடுகளுக்கான வர்த்தக உறவை மேம்படுத்துவதும், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் உதவியைப் பெறுவதும், இலங்கையில் சில சமூக நலத் திட்டங்களைச் செயற்படுத்துவமே மஹிந்த ராஜபக்ஷ வருகையின் நோக்கம்.

இத்தகைய நாடகங்களுக்கு இந்தியாவும் ஏன் ஒரு பாத்திரமாக வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை விமர்சனம் செய்யும் முன்பாக, தமிழர்களும் தமிழக அரசும் இதில் எத்தகைய அக்கறையைக் காட்டினர் என்பதையும் பார்க்கவேண்டியிருக் கிறது. தமிழ்நாட்டில் மஹிந்தவின் வருகையைக் கண்டித்து பழ.நெடுமாறன் (இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்), வைகோ (ம.தி.மு.க.), திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள்) சீமான் (நாம் தமிழர் இயக்கம்) ஆகியோர் நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்குத் தமிழ்நாட்டில் பெருந்திரளான வரவேற்பு இல்லை; அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன என்பதைக் கண்ணுறும் தமிழக அரசும், மத்திய அரசும் இதில் எத்தகைய அணுகுமுறையை மேற்கொள்ளும்?

இப்போது, இந்தியாவுக்கு மஹிந்த வந்த தினமன்று, தமிழக முதல்வர் கருணாநிதி ஓர் ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், 'மஹிந்த ராஜபக்ஷ சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை, தமிழர்களுக்கு மறுவாழ்வளிக்கும் பணிகளை விரைந்து முடிப்பேன் என்றார். ஆனால் அதைச் சொன்னபடி செய்யவில்லை' - என்று கூறியுள்ளார்.

ஊடகங்களுக்கும்கூட, மஹிந்த ராஜபக்ஷ இந்தியா வரும்போதுதான் இலங்கைத் தமிழர் பிரச்சினை நினைவுக்கு வருகிறது. தமிழக முதல்வரும்கூட, மஹிந்த ராஜ பக்ஷ இந்தியா வரும் நேரத்தில் இலங்கைத் தமிழர் ஆதரவு அமைப்புகளின் அதே அக்கறை தனக்கும் இருக்கிறது என வெளிப்படுத்துகிறார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. இடம்பெற்றிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு மற்றும் குடியேற்றம் தொடர்பான ஒப்பந்தம் எந்தெந்த நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும், அதைச் செயற்படுத்துவதில் தமிழர்களின் பங்கு மற்றும் மேற்பார்வை எத்தகையதாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிடும் நிலையில் தி.மு.க. இருக்கிறது.

இதுவரை அளித்த நிதி மற்றும் மருத்துவ உதவிகளை ஏன் தமிழர்களிடம் வழங்கவில்லை என்று மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய அரசை கேள்வி கேட்கச் செய்யும் வலிமை தி.மு.கவிடம் இருக்கிறது.

ஆனாலும் தி.மு.க. தலைவர் கருணாநிதியே, 'மஹிந்த ராஜபக்ஷ சொன்ன சொல் தவறிவிட்டார் என்றும், இந்திய அரசும் தமிழக அரசும் அளித்த நிதியுதவிகூட மக்களைச் சென்று சேரவில்லை' என்றும் பேட்டி அளித்துக்கொண்டிருந்தால்.....

மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழர்கள் மீது என்ன மதிப்பு உண்டாகும், எப்படி இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த முற்படுவார்?

- இப்படி அந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இணுவிலில் நாளை திருமுறை விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ் மறைக் கழக அறநெறிப் பாடசாலையினர் நடத்தும் திருமுறை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஆசிரியர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நிதிக்கிளை உதவிப்பணிப்பாளர் எம். ஜி.எம். காண்டீபனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வெளிவாரி அலகுகள் இணைப்பாளர் கே. சிவராஜா, ஓய்வு பெற்ற கணக்குப் பதிவாளர் நாயகம் ஆ.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பிரதேச செயலகத்தின் கீழுள்ள கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கரப்பந்தாட்டக் கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் அனைத்து கரப்பந்தாட்ட கழகங்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.




## மரண அறிவித்தல்கள்

### திருமதி பேரின்பராணி இரத்தினசிங்கம் (B.A)

(ஓய்வுபெற்ற லிகிதர்)



கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பேரின்பராணி இரத்தினசிங்கம் 08.06.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களாகிய க.வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், ஜமுனா, தமிழினி, ஜெயமயூரன், யாழினி, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு தாயும், இரத்தினேஸ்வரி (மலே ஷியா), பரமேஸ்வரி, காலஞ்சென்ற கமலநாயகி மற்றும் மகா லிங்கம், பரமேஸ்வரன், சண்முகலிங்கம், நவநீதமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகையா, இரத்தினம், தவமணி, தனலட்சுமி, பரமேஸ்வரி, செல்வராசா, காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் தருமலிங்கம், மகேஸ்வரி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவகடாட்சம் ஆகியோரின் மைத்துனியும், செல்வகுமார், பிரபாகரன், மனோஜா, மதியழகன் ஆகியோரின் அன்பு மாமியும், செ.அபர்ணா, செ.சர்மிகா, பி. துவாரகன், ம.கபிலாஷ், ஜெ. நதிஷயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி அருகில்,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(99322)

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்.

### சிதம்பரநாதன் நாகசெல்வம்

அராலி மேற்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் நாகசெல்வம் நேற்று (10.06.2010) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிதம்பரநாதன் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மகனும், நாகேஸ்வரி, நாகேந்திரம், விசாலம், காலஞ்சென்றவர்களான நாகராசா, நாகலிங்கம் மற்றும் நாகசேனன், நாககாந்தி, நாகநாதன், காலஞ்சென்றவர்களான நாகதாசன், நாகலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் கரன்சிங்



(பழைய மாணவர், யா/இந்துக்கல்லூரி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கரன்சிங் 09.06.2010 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சண்முகம் - காலஞ்சென்ற இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், ஜெஸ்மின் (பிரான்ஸ்), ஜெரோம் (பிரான்ஸ்), நந்தனன் (பிரான்ஸ்), சந்துரு (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், கிட்லர் (கனடா), கிச்னர் (கனடா), டென்சிங் (ஜேர்மனி), தயாளன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி, யாழ். வலயம்), கலா (யாழ்ப்பாணம்), குணாளன் (கனடா), லிங்கன் (கனடா), ஜோண்சன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், நகுலாம்பிகை (கனடா), புவனேஸ்வரி (கனடா), நற்குணம் (ஜேர்மனி), றோகினி (யாழ்ப்பாணம்), விஜயரெட்ணம் (கிராம அலுவலர்-J/77,J/71), ஆனந்தி (கனடா), செல்வராணி (கனடா), கோசலா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், நிக்கோலா (பிரான்ஸ்), புளோரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், செலீனா (பிரான்ஸ்), யசன்பிரா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். தொ.பே.
0033134300581

தகவல் :
மு. சண்முகம் (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் 10மீனவருக்கு தலா ரூ.1 லட்சம் பெறுமதியான படகுகள்

## என்.டி.பி. வங்கி நேற்று வழங்கியது



யாழ்ப்பாணம்,ஜூன்11

என்.டி.பி. வங்கியினால் கடற்றொழிலாளர்களுக்குப் படகுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பாஷையூரில் இடம்பெற்றது. வங்கியின் தொகுதி கடன் வழங்கல் பிரிவுத் தலைவர் ராஜ் அபூபக்கர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயனாளிகளுக்குப் படகுகளைக் கையளித்தார்.

'திவி அருண' திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பிரகாரம் 10பயனாளிகள் முதற்கட்டமாக இதற்கு யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப் பட்டிருந்தனர். இவர்களில் நான்கு பயனாளிகளுக்கு நேற்றுப் படகுகள் கையளிக்கப்பட்டன. ஏனைய ஆறு பயனாளிகளுக்கும் விரைவில் படகுகள் கையளிக்கப்படவுள்ளன.

தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கண்ணாடி இழைப்படகுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வங்கியின் சந்தைப்படுத்தல் பொறுப்பதிகாரி லினகே இண்டுனில் பிராந்திய முகாமையாளர் பொ.அ. அருமைநாயகம், கிளை முகாமையாளர் ம.க்ராண்டீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (50-14)

# அரியாலை தெற்கில் மிதிவெடி அகற்றல்

யாழ்ப்பாணம்,ஜூன்11

அரியாலை தெற்கு பிரதேசத்தில் சில பகுதிகள் மிதிவெடி அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜே/90 கிராம சேவையாளர் பிரிவிலேயே மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. இப்பகுதியில் சுமார் 12ஆயிரத்து 404 சதுர மீற்றரில் 36 மனித எதிர்ப்பு மிதிவெடிகள் அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(50-224)




# வேம்பிராய் பகுதி அரச காணிகளில் சட்டவிரோத கல் அகழ்வு அதிகரிப்பு

சாவகச்சேரி,ஜூன்11

சாவகச்சேரி வேம்பிராய் பகுதியில் அரச காணிகளில் சட்டவிரோதமாக கல் அகழ்வு செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வேம்பிராய் இந்து மயானத்துக்கு பின்புறமாக நீண்ட பரப்பளவில் மலைபோல காட்சி அளித்த (சுண்ணாம்பு கல்) நாளாந்தம் மணல் வீதிகளுக்காக கனரக வாகனங்களால் வெட்டி அள்ளப்பட்டுள்ளமையால் இப்போது அந்தப் பகுதியில் பாரியகுழிகள் ஏற்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை அந்தப் பகுதியில் சுண்ணாம்புக் கல்லை தோண்டி அள்ளவேண்டாம் என பலமுறை அறிவித்தும் தொடர்ந்தும் தோண்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தனிநபர்கள் கல்லின் உச்ச விலையை அடுத்து குழுவாக சேர்ந்து அந்தப் பகுதியில் கல்லினை அகழ்ந்து உழவுஇயந்திரங்களுக்கும், கல் உடைக்கும் ஆலைகளுக்கும் விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் சூழல்பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அருகில் வேம்பிராய் இந்து மயானம் உள்ளது. எல்லைப் பகுதியே இந்த மக்கி மலைப்பிரதேசமாகும். எனவே காலக்கிரமத்தில் இந்தப் பகுதி மழைநீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(50-131)

# காரைநகருக்கான பஸ்சேவையை தினமும் இரு தடவை பண்ணை வீதியூடாக நடத்துக

## டாக்டர் ஜமுனானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 11

மானிப்பாய் வீதியூடாக தற்போது இடம்பெற்றுவரும் காரைநகர் டிப்போவுக்கான பஸ் சேவையை பண்ணை வீதியூடாக நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஜமுனானந்தா இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து வரும் காசநோயாளர்கள் யாழ்.நகர் வரை பஸ்களில் வந்து அங்கிருந்து கால்நடையாகவே பண்ணை காசநோய் வைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது.

நோயாளர்களின் வசதி கருதி தினமும் காலையிலும் நண்பகலிலும் இரண்டு தடவைகள் இந்த பஸ் சேவையை பண்ணை வீதியூடாக நடத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(50-224)

# திருநெல்வேலி மரக்கறிச் சந்தையின் கட்டடப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையின் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தையின் கட்டடப் பணிகள் ஆரம்பித்ததையடுத்து மரக்கறி விற்பனை அருகில் உள்ள புதிய கட்டடத்தின் மேல் தளத்திற்கு இடமாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போதுள்ள மரக்கறிச் சந்தையை முற்றாக அகற்றி புதிய மாடிக் கட்டம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (50-224)

# அமெரிக்கத் தூதுவர் நேற்று யாழ்.பொது நூலகத்துக்கு விஜயம்



யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா புட்டினிஸ் நேற்றுப் பிற்பகல் யாழ்.பொது நூலகத்துக்கு விஜயம் செய்தார்.

அமெரிக்கத் தூதரக உதவியாளர் செனகா சகிதம் யாழ்.பொதுநூலகத்துக்கு வந்திருந்த பற்றீஸியா அம்மையாரை யாழ்.பொதுநூலகப் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் வரவேற்றார்.

அதன்பின்னர் யாழ்.பொதுநூலகத்தைப் பார்வையிட்ட அம்மையார் நூலகத்தின் தற்போதைய நிலை குறித்து விரிவாகக் கேட்டறிந்துகொண்டார்.

தொடர்ந்து நூலக நினைவுப் பதிவேட்டிலும் கையெழுத்திட்டார்.

இவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து யாழ்.செயலகம் மற்றும் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (50-16-224)

# குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே விரைவில் கடற்பாதைச் சேவை

யாழ்ப்பாணம்,ஜூன்11

குறிகாட்டுவான் துறைமுகத்துக்கும் நயினாதீவு துறைமுகத்துக்கும் இடையில் கடற்பாதை சேவை ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், இந்தக் கடற்பாதைச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் மக்கள் பொருள்களை எதுவித சிரமமும் இன்றி அதிகளவில் எடுத்துச் செல்ல முடியும்.

குமுதினியும் அடிக்கடி பழுதடைகின்றது. இப்பாதை சேவையை ஆரம்பிப்பதன் மூலம் மக்கள் தமது கடற்பயணத்தைச் சிரமம் இன்றி மேற்கொள்ள முடியும் - என்றார். (50- 224)

# அல்லைப்பிட்டி ஊடாக ஊர்காவற்றுறை பஸ்சேவையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

நல்லூர்,ஜூன்11

யாழ்ப்பாணத்தில் இருந்து அல்லைப்பிட்டி ஊடாக ஊர்காவற்றுறைக்கான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என அல்லைப்பிட்டி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வழித்தடத்தில் சேவையில் ஈடுபட்ட 350 இலக்க பஸ் சேவை நீண்ட காலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் இயல்பு வாழ்க்கை நிலை ஏற்படத்தொடங்கியுள்ளதால் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் பொது மக்களின் வசதி கருதி இடைநிறுத்தப்பட்டிருக்கும் இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அல்லைப்பிட்டி மக்கள் கோரியுள்ளனர்.

(50-111)

# ஏப்ரல், மே மாதங்களுக்கான உலருணவு நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்11


உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இந்த வருடம் ஏப்ரல், மே மாதங்களுக்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களான சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களுக்கான வழங்கல் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து பொருள்களை உடன் பெற்று விநியோக நடவடிக்கை களை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்குமறு அரச அதிபர் அறிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

(50-16)



யாழ்ப்பாணத்துக்கும் தீவுப்பகுதிக்கும் பிரதான இணைப்புப் பாலமாக உள்ள பண்ணைப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர் முன்னாள் துணைவேந்தர் அமரர் துரைராஜா

**யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 16 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.**



அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவின் 16 ஆவது நினைவு தினம் இன்றாகும். ஓர் உயர்ந்த மனிதப் பண்பாளனாக வாழ்ந்த அவரது நினைவுதினத்தை எல்லோரும் நினைவில் கொள்வது அவசியமாகும். 1934.11.10 அன்று வடமராட்சியில் உடுப்பிட்டி என்னும் கிராமத்தில் பிறந்த துரைராஜா தனது ஆய்வுப் பலத்தாலும் பண்பினாலும் அறிவின் திறத்தாலும் உலகத்தின் மூலைமுடுக் கெல் லாம் தெரியப்பட்ட, அறியப்பட்ட உயர்ந்த அறிஞனாகத் திகழ்ந்தார்.

அவரது எளிமையையும், பண்பையும், மனப்பக்குவத்தையும் மாணவனாக, தற்காலிக விரிவுரையாளராக பணியாற்றிய காலத்தில் நான்புரிந்து கொண்டமை மறக்கமுடியாதது. யாழ்ப்பாண பல்கலைக் கழகமும், யாழ்ப்பாணச் சமூகமும் மிக நெருக்கடியை, இக்கட்டை எதிர்கொண்டிருந்த காலத்தில் அவரது சேவை யாழ். பல்கலைக்கழகத்திற்கு கிட்டியமை அதிஷ்டம் என்றே கருத வேண்டும். தனது வீட்டிலிருந்து அவர் பணிக்கு வருகை தரும் விதம் தனித்துவமானது. உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து துணைவேந்தர் ஒருவர் துவிச்சக்கர வண்டியில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகை தருவதென்பது அவரது எளிமையை மட்டுமல்ல எத்தகைய நெருக்கடியையும் எதிர்கொள்ளும் சவால்மிக்க ஒரு மனிதர் என்பதையும் வெளிப்படுத்தியது. அதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு முந்தியே பணிமனைக்கு சமுகமளித்து விடுவார். பணிகளை முடித்து உரிய நேரத்திற்கு வீட்டுக்கான தமது பயணத்தை ஆரம்பித்துவிடுவார்.

அவரது காலத்தில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த விவசாய பீடத்தை ஏனைய பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் அழைத்துக் கொண்டு துவிச்சக்கர வண்டிகளில் யாழ்ப் பாணத்திலிருந்து கிளிநொச்சி சென்றமை இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளன.

அவருடன் தாம் பணி செய்த காலத்தைப் பற்றி பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மட்டுமல்ல கல்விசாரா ஊழியர்களும் பெருமை அடைந்து கொள்வார்கள்.

அவரிடம் காணப்பட்ட மற்றொரு முக்கியமான அம்சம் அவரது மனிதாபி மான பண்பு. யாரையும் இலகுவில் கண்டறியக் கூடியவர். எப்போதும் அவரது முகம் புன்னகைத்தபடி காட்சியளிக்கும். அதனால் யாரையும் இலகுவில் தன்வசப்படுத்தி விடுவார். நிர்வாகியின் உயர்ந்த பண்பினை அவரிடம் சிறிது நேரம் உரையாடினால் புரிந்துவிடலாம்.

அவ்வகை உயர்வும், எண்ணமும் கொண்ட துணைவேந்தர் காலத்தில் கல்வி கற்றோம்,பணிபுரிந்தோம் என எண்ணும் போது மிக மகிழ்வாக உள்ளது. அவரது இறுதி நிகழ்வில் அவரது பாதங்களை தொடும் பாக்கியம் கிடைத்தது மனதுக்கு வலிமையாக இருக்கிறது. அவர் என்றும் எங்களோடு வாழ்வார்.

கே.ரீ.கணேசலிங்கம்
தலைவர் சமூகவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

## இன்றைய ஆட்டங்கள்

வடமாகாண மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் அரையிறுதி, இறுதியாட்டங்கள் இன்று உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் 15 வயதுப் பிரிவினருக்கான அரை இறுதியாட்டங்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை களம் இறங்குகின்றது.

மற்றொரு ஆட்டத்தில் மன்னார் சென். ஆன்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி மோதுகின்றது.

17 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து வேம்படி பெண்கள் உயர்தரப் பாடாசலை களமிறங்குகின்றது. மற்றொரு ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து வவுனியா சைவப்பிரகாசம் மகளிர் வித்தியாலயம் மோதுகின்றது.

19 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்களில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி களமிறங்க மன்னார் சென். சேவியர் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி களமிறங்குகின்றது.

அரையிறுதி ஆட்டங்கள் நிறைவடைந்ததும் பி.ப. 1.30 மணிக்கு இறுதியாட்டங்கள் நடைபெறவுள்ளன. (6-86)

# அவசரகாலச் சட்டத்தின் மூலம் கைதானவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்

## பிரபாகணேசன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன், 11

''யுத்தம் முடிவுற்ற இன்றைய அமைதியான சூழலில் அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். அதன் மூலம் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்'' - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரபா கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு -

இன்று நாட்டில் யுத்தம் முடிவுற்றுள்ளது. ஆனால், யுத்தம் ஆரம்பமான காரணம் தீர்க்கப்படவில்லை. இதை தீர்த்து வைப்பதில் அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை. இன்று நாட்டில் பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டதாக கூறும் அரசு ஏன் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முயல்கின்றது? இந்த சட்ட மூலத்தால் பாதிக்கப்படுவது எமது சமுதாயம் மட்டுமே. அவரசகாலச் சட்ட மூலத்தில் சில சரத்துக்கள் நீக்கப்பட்டுள்ளமை பாராட்டக்கூடியதாயினும், முழுமையான திருப்தியை எமது சமூகத்திற்கு அது அளிக்கவில்லை. மாறாக அரசின் மீது சந்தேகத்தையே இவை ஏற்படுத்துகின்றன.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டவர்கள் பல முகாம்களில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தனது பிள்ளையை, சகோதரரை, தந்தையை, கணவனை விடுதலை செய்யக்கோரி, அவர்களது உறவினர்கள் முகாம்களுக்கு பல இன்னல்களுக்கு மத்தியில் படையெடுத்தவண்ணம் உள்ளார்கள். இவர்களின் வழக்குகளை துரிதப்படுத்தவும், குற்றமற்றவர்களை விடுதலை செய்யவும் கடந்த காலங்களில் அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

நாட்டில் யுத்தம் நிலவியபோது விடுதலை இயக்கத்தில் இருந்து பிரிந்துவந்து ஜனநாயக நீரோட்டத்தில் இன்று அரசில் அமைச்சர்களாக உள்ளார்கள். இவர்கள் ஜனநாயக பாதைக்கு வந்தமை பாராட்டப்படவேண்டிய விடயமாகும். அதேபோல் இன்று கைதிகளாக இருப்பவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

இந்த அவசரகாலச் சட்ட மூலத்தின் மூலம் பாதுகாப்பு படைகளினதும், பொலிஸாரினதும் அதிகார துஷ்பிரயோகமே அதிகரிக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவது நாடு முழுவதிலும் உள்ள அப்பாவி தமிழ் மக்களே. ஆகவே ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவசரகாலச் சட்டம் முழுமையாக அப்புறப்படுத்தப்படவேண்டும். - என்று பிரபா கணேசன் எம்.பி. கூறுகிறார். (சி)


காயத்திரி பப்ளிகேஷனின்

நாடளாவியரீதியில் பாடசாலைமட்ட
முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை 2010

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான முன்னோடி பரீட்சையை ஆசிரியர் வே. நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவியரீதியில் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

விடைத்தாள்கள் எம்மால் பரீட்சை மதிப்பீட்டுக் குழுவால் திருத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும். திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தேசியரீதியில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதங்கமும். மாகாண மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு எமது இலட்சினை பொறிக்கப்பட்ட பதக்கமும் வழங்கப்படும்.

கட்டணம் :
**ஒரு மாணவருக்கு வீதம் ரூ. 50 அறவிடப்படும்**

தோற்ற விரும்பும் மாணவர்கள்/பாடசாலைகள் எதிர் வரும் 19ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

பதிவுகளுக்கும், விபரங்களுக்கும்:

**அன்னை புத்தகசாலை**
இல.7. நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
TEL : 021 222 9881, 075 58 50 50 8



VISA - விசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


## ஏழு கிராமங்களுக்கு வீதி விளக்குகள்

நல்லூர், ஜூன் 11

யாழ்.குடாநாட்டின் ஏழு கிராமங்களுக்கு 'கமநெகும' திட்டத்தின் கீழ் வீதி விளக்கு வசதிகள் வழங்கப்படவுள்ளன.

அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, காரைநகர், கற்கோவளம், பொலிகண்டி, சுழிபுரம் ஆகிய கிராமங்களில் வீதி விளக்குகள் பொருத்த கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (50-111)

## காணவில்லை



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 41, துரைராசா வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவுமுடைய

**கார்த்திகேசு பேரம்பலம்**

வயது 75 என்பவரை 09.06.2010 மு.ப. 10 மணியிலிருந்து காணவில்லை. கடைசியாக நீல நிறச் சாரமும், நீலநிறச் சேர்ட்டும் அணிந்திருந்தார். கண்பார்வை சற்றுக் குறைவானவர். அவரை அடையாளம் கண்டோர், தயவு செய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

0776451718, 021 490 5038, 0775581576

சின்னத்துரை ஞானகரன்
(மருமகன்).

(99324)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் ஜெயமயூரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பேரின்பராணி இரத்தினசிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1999/2000 பிரிவு
விஞ்ஞான பீட நண்பர்கள்.

(99323)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

இடம்: நீர்வேலி சவாரித்திடல்.
காலம்: 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. ஒரு மணி
அனுசரணை: இரசிகர்களும், காளைச் சொந்தக் காரர்களும்.

A பிரிவுக்கான முதலாம் பரிசு
Lumala துவிச்சக்கரவண்டி.

தி.சி.அசோக்குமாரன் (தேவன்)
போட்டி ஒழுங்கமைப்பாளர்.

(பார்வையாளர்களுக்கு பிரவேசம் இலவசம்)

(99316)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தெற்கு புன்னாலைக்கட்டுவன், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் கந்தையா வேலாயுதம்**

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 25.12.1937 | 11.05.2010 |

எமது பாசத்தின் ஒளியாய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பான பார்வையும் கனிவும்,
அரவணைப்பும்
என்றும் நெஞ்சைவிட்டகலா

அன்புடன் தவிக்கும்:
மகன் மனோரஞ்சன் குடும்பம், மனோரஞ்சினி குடும்பம்,
பேரமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(இ/568312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'பாசிக்' நிறுவனத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவர் ஒருவருக்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தபேந்திரா ஜெயராஜா சைக்கிளைக் கையளிப்பதை முதலாவது படத்திலும் இனங்காணப்பட்ட மாணவர்களில் ஒருதொகுதியினர் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பெற்றோருடன் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
*(படம்:கர்ணன்)*

# காங்கேசன்துறை வீதியை அகலமாக்கி புனரமைக்கும் பணி ஜூலையில் ஆரம்பமாகும்

## பணிகளை யாழ். நகரிலிருந்து தொடங்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 11

காங்கேசன்துறை வீதியை அகலமாக்கிப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரும்பாலும் இந்தப் புனரமைப்புப் பணிகளை எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் ஆரம்பித்து வைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கே.கே.எஸ் வீதியின் அகலிப்புப் பணிகளை யாழ். நகரில் இருந்து ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வீதி அகலிப்பின்போது அதற்கு இடையூறாக உள்ள கட்டடங்கள் அகற்றப் படவுள்ளன.

இந்த வீதியை அகலமாக்கி புனரமைப்பதன் முன்னேற்பாடாக அதனை அளந்து மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதேவேளை - பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-224)

# மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (50-204)




### திருவிழாவை முன்னிட்டு மீண்டும்

# பாஷையூர் ஆலயத்தில் அந்தோனியாரின் திருப்பண்டம் மக்கள் வணக்கத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 11



புனித அந்தோனியாரின் திருப்பண்டம் மீண்டும் பாஷையூர் அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் இத்தாலியின், பதுவை நகரில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தோனியாரின் திரு இருதயம் இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட புனித பண்டம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் கொண்டு வரப்பட்டது. அப்போது அப்புனித பண்டத்தைக் கொண்டுவந்த பதுவை நகர் குருக்களால் யாழ்.மேற்றிராசனத்துக்கு என புனிதரின் திருப்பண்டம் ஒன்றைத் தருவதாகக் கூறப்பட்டிருந்தது.

அதன்படி அனுப்பட்ட அந்தோனியார் புனிதபண்டம் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டது. ஆயர் அப்புனித பண்டத்தை தமது இல்லத்தில் வைத்திருந்தார்.

அந்தத் திருப்பண்டமே முதல் தடவையாக பாஷையூர் அந்தோனியாரின் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழ்.ஆயரால் எடுத்துவரப்பட்டு ஆலயத்தில் எழுந்தேற்றம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அப்புனித பண்டம் ஆலயத்தில் மக்களின் வணக்கத்துக்காக வைக்கப்படும். (ஓ)

# டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காதோர் விவரத்தை எமக்கு அறியத் தாருங்கள்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 11

டெங்குநோய் கட்டுப்பாட்டுக்கு பொதுமக்களின் பங்களிப்பு அவசியம். ஆனால் பொதுமக்களில் சிலர் டெங்கு ஒழிப்பில் அக்கறை காட்டாது - அசிரத்தையாக இருந்து வருகின்றனர்.

டெங்கு பரம்பலைத் தடுப்பதில் கவனம் எடுக்காது - அசட்டையாக இருப்பவர்கள் குறித்து தகவல் தந்தால் நாம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பணிப்பாளர் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் டெங்குநோய் கட்டுப்பாட்டில் பொதுமக்களின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம். ஒவ்வொரு நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் தனிப்பட்ட வீடுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டுச் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறவேண்டும். இச்செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய இடங்கள் சுத்திகரிக்கப்படாது காணப்பட்டால் அவை பற்றிய தகவல்களை உங்கள் பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவிக்கலாம்.

பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அலுவலக நேரத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை அறியத்தாருங்கள். சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் அவற்றின் தொலைபேசி எண்களும் வருமாறு:-

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை 021-222 2278, யாழ்ப்பாணம் 021-222 2645, நல்லூர் 021- 320 71 55, கோப்பாய் 021-321 3615, உடுவில், 021-320 7157 தெல்லிப்பழை 021 -321 3620, பருத்தித்துறை 021-226 4482, கரவெட்டி 021-320 7153, சாவகச்சேரி 021 -321 3621, சண்டிலிப்பாய் 021-320 7154, சங்கானை 021-321 3614, ஊர்காவற்றுறை 021-321 3588 (ஓ)

# ஆன்மீக எழுச்சிப்பட்டறைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன் 11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சேவா சங்கத்துடன் இணைந்து இந்து இளைஞர், யுவதிகளுக்கான ஏழு நாள் வதிவிடப் பயிற்சியாக ஆன்மீக எழுச்சிப் பட்டறை ஒன்றை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்.மாவட்டத்தில் நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சியில் ஆன்மீக உரைகள், தலைமைத்துவப் பயிற்சி, யோகாசனம், தியானம், ஆன்மீக செயலமர்வுகள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

மேற்படி ஆன்மீக எழுச்சிப்பட்டறையில் பங்கு கொண்டு பயன்பெற ஆர்வமுள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 16 வயது தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பெயர், பிறந்த திகதி, தாம் சார்ந்த ஆலயம், இந்து மன்றம் அல்லது அறநெறிப்பாடசாலை என்பவற்றின் சொந்த முகவரி, தொலைபேசி இலக்கம், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டம், கல்வித் தகைமை போன்ற விவரங்களைத் தெளிவாக எழுதி பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலி வீதி, கொழும்பு - 4 என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப்பட்டறை' எனக் குறிப்பிடல் வேண்டும். மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் 0112552641, 0112505403 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (50-201)

# இசைக்கச்சேரி

வடமராட்சி,ஜூன் 11

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இசைக் கச்சேரி இடம்பெறும். இதனை நுண்கலைமாணி செல்வி லோகவதி பொன்னன் நடத்துவார். (50-236)

# நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம்,ஜூன் 11

நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி இன்று வெள்ளிக் கிழமையும், எதிர்வரும் திங்கட்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலக வளவில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-236)

# ஆஸ்பத்திரி வீதி நடைபாதையில் மீண்டும் சூடுபிடிக்கும் வியாபாரம்

குருநகர்,ஜூன் 11

யாழ்.போதனா வைத்தியசாலையின் அருகாமையில் அமைந்துள்ள நடைபாதையில் மீண்டும் நடைபாதை வியாபாரம் களைக் கட்டியுள்ளமையால் இப்பாதையூடாகப் பொதுமக்கள் பயணிக்க முடியாமல் அருகிலுள்ள வீதியூடாகவே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் வெளிநோயாளர் பிரிவின் வாசலில் இருந்து பூபாலசிங்கம் புத்தகசாலை வரை அமைந்துள்ள நடைபாதையில் வியாபாரம் செய்யக்கூடாதென யாழ்.மாநகர சபையினால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

எனினும் இந்த நடைபாதையில் வியாபாரம் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றது.

இந்த நடைபாதைக்கருகாமையில் வீதி ரோந்துப் பொலிசார் நாளாந்தம் நிற்கின்ற போதிலும் அவர்கள் முன்பாகவே இந்த நடைபாதை வியாபாரம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (50-51)

# நெடுந்தீவுக் குதிரைகளில் சவாரிவிடும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

நெடுந்தீவுக்குச் சுற்றுலா செல்லும் தென்பகுதி இளைஞர்கள் அங்குள்ள வளர்ப்புக் குதிரைகளில் ஏறி சவாரி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நெடுந்தீவில் மிக நீண்ட காலமாக அப்பகுதி மக்களினால் குதிரைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இப்போது நெடுந்தீவைப் பார்வையிடச் செல்லும் தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் குதிரைகளைக் கண்டு மகிழ்வதுடன் அவற்றில் ஏறி சவாரி செய்வதிலும் ஈடுபடுகின்றனர். குறிப்பாக இளைஞர்களே இந்தச் சவாரியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வீடுகளில் சிலர் வளர்க்கும் இந்தக் குதிரைகள் சவாரி செய்வதற்குப் பழக்கப்பட்டவை. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஆசையுடன் குதிரைகளில் சவாரி செய்கின்றனர். (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துண்டி இந்து மயானம் கண்டிடுமோ புதிய கோலம்?

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் எதுவித அடிப்படை வசதி இன்மையால் அங்கு சடலங்களைத் தகனஞ்செய்யச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


குப்பைகளால் நிரம்பியுள்ள கிணறு

அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் சிக்குண்டிருந்த துண்டி மயானம் தற்போது தான் மக்கள் பாவனைக்காக முழுமையாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டியதாக அமைந்திருக்கும் கோம்பயன் மணல் மயானம், வில்லுன்றி மயானம் ஆகிய இரண்டுக்கும் அடுத்ததாக விளங்குவதுதான் இந்தத் துண்டி இந்து மயானம்.

இந்த மயானம் மிகவும் பழைமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமாகும்.

சித்தர்கள் பலரும் நடமாடிய கொழும்புத்துறை பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த மயானத்தில்தான் சிவயோகர் சுவாமிகளின் உடல் தகனஞ்செய்யப்பட்ட வரலாறும் உண்டு.

சமாதி அடைந்த சிவயோகரின் உடல் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்க தீயுடன் சங்கமித்த பெருமை வரலாற்றில் என்றுமே நிலைத்து நிற்கக்கூடிய புகழ் துண்டி மயானத்துக்குண்டு.

யோகர் சுவாமிகளின் உடல் இந்த மயானத்தில் அக்கினியில் சங்கமித்த பின்னர் அவரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக்கல் கூட தற்போது பிடுங்கி ஏறியப்பட்டுள்ளது. காலத்தையும் தாண்டி யோகர் சுவாமிகளின் நினைவுகளைச் சுமந்து நின்ற கல்கூடத் தூர வீசப்பட்டிருக்கும் நிலையில் ஒட்டுமொத்த மயானமும் எப்படி இருக்குமென்று கற்பனை செய்தே பார்க்க முடியாது!

இவ்வாறு சித்தர்கள் நடமாடிய புண்ணிய பிரதேசத்திலுள்ள துண்டி மயானம் போரினால் அழிவடைந்து பாலைவனம் போன்று மாறிவிட்டது.

மயானத்தில் இருந்த இளைப்பாற்று மண்டபம், மயானத்தைச் சுற்றி எழுப்பப்பட்டிருந்த பாதுகாப்புச் சுவர்கள் என்பன தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

மயானத்தில் இருந்த கிணறு பாழடைந்து போய்க் கிடக்கின்றது. தண்ணீர் நிரம்பியிருக்க வேண்டிய கிணத்துக்குள் குப்பைகளும், கழிவுகளுமே நிரம்பி வழிகின்றன.

அதனைவிட மயானப்பகுதியில் புற்கள், செடிகள் என்பன செழித்து வளர்ந்து அப்பிரதேசமெங்கும் அடர்ந்த காடுபோல் தோற்றமளிக்கின்றது.

மயானத்துக்கு உள்ளே செல்லும் வீதியையும் பற்றைகள் விட்டு வைக்கவில்லை. பாதை எது? பற்றை எது? என்று வித்தியாசம் காணமுடியாதளவுக்கு எங்கும் பற்றைமயம்!

மயானத்துக்குச் சடலங்களைத் தகனஞ் செய்வதற்காகச் செல்லும் மக்கள் தங்குவதற்குரிய கொட்டகை மற்றும் நிழல் வசதி என்பன இன்றி உச்சி வெய்யிலில் மண்டைபிளக்க, கால் கடுக்க நிற்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதனைவிட இறந்தவர்களின் அஸ்தியைக் கரைக்கவும் மற்றும் எரியும் நெருப்பை அணைக்கவும்தண்ணீர் வசதி இன்றியும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இப்படி எதுவித அடிப்படை வசதிகளும் இன்றிக் காணப்படும் பழைமை வாய்ந்த துண்டி மயானத்தை மீளப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் இப்போது கோரிக்கைவிடத் தொடங்கியுள்ளனர்.

### மக்கள் கோரிக்கை

போரினால் அழிந்து சேதப்பட்டு சிதைவடைந்து காட்சியளிக்கும் இந்த மயானத்தை மீளப் புனரமைப்பதற்கு யாழ். மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் இருக்கும் துண்டி மயானம் முன்னர் மன்றத்தின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

தற்போது அடிப்படை வசதிகள் எதுவும் இன்றிக் காணப்படும் இந்த மயானத்தில் மக்களின் வசதிகருதி அதை மீளப் புனரமைப்புச் செய்து கொடுப்பதற்கு யாழ். மாநகர மேயர் துரித ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மக்கள் தங்குவதற்குரிய மண்டபத்தை அமைப்பது, தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது, சடலங்களைத் தகனஞ்செய்வதற்கு கொட்டகை அமைப்பது, மயானத்தைச் சுற்றிப் பாதுகாப்பு மதில் அமைப்பது மற்றும் மயான சுற்றாடலைத் துப்புரவு செய்வது போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

கொழும்புத்துறையை அண்டிய ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம், சுண்டிக்குழி போன்ற பகுதி மக்களும் இந்த மயானத்தையே பாவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயம்.

### நிர்வாக அமைப்பு

போரினால் அழிந்து புரையோடிப் போய் காணப்படும் இந்த மயானத்தை மீள அபிவிருத்தி செய்து அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கொழும்புத்துறை வாழ் மக்களின் முக்கிய தேவையும் கடமையும் ஆகும்.

இந்தவகையில் இந்த மயானத்தைப் புனரமைப்பதற்கு முன்னோடியாக அதற்கு நிர்வாகக் கட்டமைப்பு மிக முக்கிய தேவையாகும் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தற்போது நிர்வாக அமைப்பு இன்றி இந்த மயானம் செயற்பட்டு வருகின்றது. பிரதேச மக்கள் ஒன்று சேர்ந்து புதிதாக நிர்வாக அமைப்பு ஒன்றை அமைப்பது அவர்களின் முக்கிய கடமையாகும்.

இந்த நிர்வாக அமைப்பை தோற்றுவிப்பதற்கு இப்பகுதியில் உள்ள பொது நிறுவனங்கள், நலன் விரும்பிகள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் பங்கு என்பன மிக முக்கியமான ஒன்றாகும். சிறந்த மயான அபிவிருத்திப் பரிபாலன சபை ஒன்றை உருவாக்கி அதனைச் செயற்பட வைப்பது பிரதேச மக்களின் கைகளிலேயே உள்ளது.

முன்னர் இந்த மயானத்திற்கென்று அமைக்கப்பட்ட மயானப் பாதுகாப்பு பரிபாலன சபை தற்போது செயலிழந்து காணப்படுவதாக ஈச்சமோட்டை கிராம உத்தியோகஸ்தர் எம்.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்திலேயே பிரசித்தி பெற்ற இந்த மயானத்தை மீளவும் புனர் நிர்மாணம் செய்தவற்குப் பிரதேச மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.


இடிந்து கிடக்கும் துண்டி மயான மண்டபம்

அத்துடன் விரைவில் மயானத்திற்கான பரிபாலன சபை ஒன்றை அமைக்கவும் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு கொய்யாத் தோட்டம், சுண்டிக்குழி, கொழும்புத்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களை உள்ளடக்கியதாக இந்தப் புதிய நிர்வாக அமைப்பு உருவாக்கப்படும்.

இந்த அமைப்பினூடாக மயான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்று கூறினார்.

**நந்தன்**

---

## சஹஜ யோகா தியான வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் சஹஜ யோகா தியான வகுப்பு நாளை சனிக்கிழமையும், எதிர்வரும் 19 ஆம், 26 ஆம் திகதிகளிலும் பிற்பகல் 3 மணிக்கு சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என சபையின் பரீட்சைச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (204)


**தேவை**

தரமான ஒடியல் தேவை. மொத்தமாகப் பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 021 2223578, 0777105609



**ජාතික සම්පත**

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 28

திகதி - 09.06.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து K அதிர்ஷ்ட இலக்கம் 04 வெற்றி இலக்கம் 1 9 7 3 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 04 | 1 | 9 | 7 | 3 | 9 | ரூ. 11,511,979.00 | பரிசு | - |
| 1 பரிசு | | 04 | 1 | 9 | 7 | 3 | 9 | ரூ. 2,000,000.00 | பரிசு | 01 |
| 2 பரிசு | | | 1 | 9 | 7 | 3 | 9 | ரூ. 100,000.00 | பரிசு | 02 |
| 3 பரிசு | | | | 9 | 7 | 3 | 9 | ரூ. 10,000.00 | பரிசு | 25 |
| 4 பரிசு | | | | | 7 | 3 | 9 | ரூ. 1,000.00 | பரிசு | 257 |
| 5 பரிசு | | | | | | 3 | 9 | ரூ. 50.00 | பரிசு | 2475 |
| 6 பரிசு | | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசு | 23948 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 1 | 9 | 7 | 3 | | ரூ. 1,000.00 | பரிசு | 27 |
| 8 பரிசு | | | 1 | 9 | 7 | | | ரூ. 100.00 | பரிசு | 253 |
| 9 பரிசு | | | 1 | 9 | | | | ரூ. 50.00 | பரிசு | 2510 |
| 10 பரிசு | K | | | | | | | ரூ. 20.00 | பரிசு | 10055 |
| 11 பரிசு | K | 04 | | | | | | ரூ. 100.00 | பரிசு | 1144 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,803,010.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631

இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு

ரூ.11,511,979.00


## சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு, ஜூன் 11

தெல்லிப்பழை துர்க்காபுரம் தோட்டத்து ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் விசேட பூசைகள், வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (204-86)

* * *

வடமராட்சி, ஜூன் 11

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும் இப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (204-236)

* * *

கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறு நாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

சாவகச்சேரி சந்திரசேகர வாரியவளநாத சிவன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-207)

* * *

சங்கானை, அரசடி வைரவப் பெருமான் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகியது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தீர்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

துன்னாலை பூதேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)


**31 ஆம் நாள் நினைவு அஞ்சலி**



வலிகாமம் மேற்கு பிரதேசசபை செயலாளர் திரு. சு.புத்திசிகாமணி அவர்களின் அன்புத் தாய்

**அமரர் சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை**

அன்னையின் மடியில் 25.09.1928

ஆண்டவன் அடியில் 11.05.2010

ஜனனம் மரணம்
இரண்டிற்கும் இடைப்பட்ட
கால நீட்சியில்
வாழ்வாங்கு வாழ்ந்து
வையத்திற் குவந்தளித்த
பஞ்ச மணிகளில்
திருதியாய் தந்த மணி அது
எம்மவற்கோ கண்ணின் மணி - உன்
மீளாப் பயணத்தால் மாறாத்துயருற்ற
எம்மவரின் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
அஞ்சலிக்கின்றோம் அன்னையே உன்னை.

முதலிய கோயிலடி, வட்டுக்கோட்டை,
அம்பாள் சனசமூக நிலையமும், மக்களும்.

(99313)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை கல்விவலய திட்டமிடல்பிரிவு அலுவலகம் உடைக்கப்பட்டமை குறித்து ஆராய உயர்மட்டக்குழு

## மாகாண பிரதம செயலாளரின் ஏற்பாட்டில்

ஜூன்11

சம்மாந்துறை கல்வி வலயத்தின் திட்டமிடல்பிரிவு அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் அகற்றப்பட்டமை தொடர்பாகவும், அதன் பின்னர் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து விசாரணை அறிக்கை சமர்பிப்பதற்காக உயர்மட்ட விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வி.பி.பாலசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்பிற்கமைய நியமிக்கப்பட்டுள்ள இவ் விசாரணைக் குழுவிற்கு இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கல்விநிர்வக சேவைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை கல்வி வலயத்திற்கு கடந்த பெப்ரவரி மாதம் புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்ட நாள் முதல் - அவ்வலயத் திட்டமிடல் பிரிவு பலவந்தமாக உடைக்கப்பட்டு அங்கிருந்த உபகரணங்களும், கோவைகளும் அகற்றப்பட்டமை வரையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேற்படி குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளரினால் மூவரடங்கிய குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டது. இக்குழுவில் இலங்கை கல்வி நிர்வாகசேவை அதிகாரிகள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது இக்குழு ஆளுநரின் பணிப்பிற்கமைய ரத்துச்செய்யப்பட்டுள்ளது என மாகணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே தமது பொறுப்பில் இருந்த திட்டமிடல்பிரிவு உடைக்கப்பட்டு பொருட்கள் அகற்றப்பட்டதன் காரணமாக தமக்கு தொழில் ரீதியாக அவமானம் ஏற்பட்டுள்ளது எனவும் தனது சொந்த உடைமைகள் திரு டப்பட்டுள்ளன என்று தெரிவித்தும் குறித்த திட்டமிடல் பிரிவுப் பணிப்பாளர் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நட்டஈடு கோரி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பதினான்கு நாள்களுக்குள் குறித்த நட்டஈட்டைச் செலுத்துமாறும் இவ்வாறு செலுத்தாவிடில் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறார் எனவும் திட்டமிடல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஏ.எல்.முஹம்மட் முக்தார் மேலும் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட உடைப்புச் சம்பவம் தொடர்பாக சம்மாந்துறைப் பொலிஸார் கல்முனை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள் ளதுடன் சட்டமா அதிபரின் ஆலோசனையையும் கோரியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்துறை, கல்வித்துறை வரலாற்றில் இவ்வுடைப்புச் சம்பவம் கறைபடிந்த ஒரு சம்பவமாகவும், அதிர்ச்சி அளிக்கக்கூடிய விடயமாகவும் நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வுடைப்புச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை வலயத் திட்டமிடல் பணிப்பாளர் விசாரணை முடிவடையும் வரை அங்கு கடமையாற்ற விரும்பவில்லை என மாகாணக் கல்வி அமைச்சிற்கு விண்ணப்பித்ததன் பேரில் அவர் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)




# கர்ப்பிணித்தாய்மார் -குழந்தைகளுக்கு கிழக்கில் போஷாக்குத் திட்டம் அமுல்

திருகோணமலை,ஜூன்11

கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்குமான போஷாக்குத் திட்டமொன்றை மேற் கொள்வதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அனைத்து தாய் - சேய் நிலையங்களின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அவை முழுமையான சுகாதார நிலையங்களாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளையும், போஷாக்குப் பொதிகளையும், குழந்தைகளுக்குப் பாலுணவுகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மேற்படி திட்டத்தை மாகாணசபையின் சுகாதாரப் பிரிவுடன் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளது என சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ளி)

# பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு உதவி

அம்பாறை,ஜூன்11

அம்பாறை மவட்டத்திலிருந்து இம்முறை பல்கலைகழகங்களுக்குத் தெரிவான வசதிகுறைந்த மாணவர்களுக்கு உதவத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம.பி.பியசேன நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நிறுவனமொன்று இப்புலமைப் பரிசிலை வசதிகுறைந்த தமிழ் மாணவர்க்கு வழங்க முன்வந்துள்ளது என்றும் - அச்சந்தர்ப்பத்தை அம்பாறை எம்.பி. பியசேன தனது மாவட்டத்திற்கும் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே, உதவி தேவைப்படும் மாணவர்கள் எதிர்வரும் 13 ஆம்திகதிக்குப் பின்னர் 067 - 2279227 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பியசேன எம்.பியிடம் அதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ளி)

# மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் சுற்றாடல் விழிப்புணர்வு ஊர்வலம்

மட்டக்களப்பு,ஜூன் 11

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமொன்று நேற்றுமுன்தினம் காலை மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு அரசடி சந்தியில் ஆரம்பமான இந்தச் சுற்றாடல் விழிப்புணர்வு ஊர்வலம் பிரதான வீதிகளூடாகப் பயணித்து மட்டக்களப்பு நகர மத்தியிலுள்ள காந்தி சிலையருகில் நிறைவு பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்டப் பணிமனையின் கண்காணிப் பில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் மட்டக்களப்பு நகரிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்கள், ஆசிரியர்கள், சுற்றாடல் பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் பலரும் பங்கு கொண்டனர் என மாவட்ட அரச ஊடக அதிகாரி பி.ரி. அப்தூல் லத்தீப் தெரி வித்தார்.

மாவட்டப் பணிமனை பொறுப்பதிகாரி எஸ்.உதயராஜ் தலைமையில் இவ்வூர்வலம் இடம்பெற்றது. (ளி)

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் வாக்காளராகப் பதிய இ.தொ.கா. வலியுறுத்து

## நேற்று டிக்கோயாவில் விசேட செயலமர்வு

கொழும்பு,ஜூன்11

மலையகத்தவர் அனைவரும் தமது பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதிவது தொடர்பாக இ.தொ.கா. ஏற்பாடு செய்துள்ள அறிவூட்டல் கருத்தரங்கு நேற்று டிக்கோயா நகரசபை கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்றது. இதில் நுவரெலியா மாவட்ட தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

இது குறித்து இ.தொ.கா. ஊடகப்பிரிவு அனுப்பிய விசேட செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை முழுவதும் தற்போது வாக்காளர் பட்டியல் பதிவுவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்தருணத்தில் மலையகத்தவர் குறிப்பாக 18 வயதுக்கு மேற்பட்ட சகலரும் தத்தமது பெயர், விவரங்கள், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை பிரதேச - கிராம சேவையாளர்கள் வழங்கும் படிவத்தில் பூர்த்திசெய்து அவரிடமே கையளிக்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

இ.தொ.காவின் தலைமைப் பணிமனையான சௌமிய பவனில் இடம்பெற்ற நிகழ்வில் வாக்காளர் பதிவு தொடர்பில் மாவட்ட, மாநிலப் பிரதிநிதிகள், மகளிர் இணைப்பதிகாரிகள், மாவட்டத் தலைவர், அரசியல் அமைப்பாளர் ஆகியோருக்கு பூரணமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என இ.தொ.கா. தலைவரும், பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இதனோடு பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன சரியாக பதிவுசெய்யப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. இதுவரையிலும் நமது வாக்காளர்களில் பலர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யாது, ஏனோ தானோ என்ற நிலையில் கரிசனையற்றவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, இவ்வாறான தவறுகளை இழைத்துவிடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்புகள் மாவட்ட மாநில பிரதிநிதிகளிடமே தங்கியுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களுக்கு வாக்களிப்பதற்குப் புதிய வாக்காளர் பதிவுகள் மிகவும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் விண்ணப்ப படிவங்கள் இதுவரையிலும் கிடைக்காதவர்கள் தமது இ.தொ.கா. அலுவலகங்களை அணுகி இதற்காக விவரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தாம் நிரந்தரமாக வசிக்கும் பகுதியில் மட்டுமே வாக்காளராகப் பதிவுசெய்து கொள்ள வேண்டிய பொறுப்பு வாக்காளர்களை சேர்ந்ததாகும்.

- இப்படி இ. தொ.கா. ஊடகப்பிரிவு மேலும் தெரிவித் துள்ளது. (ளி)

# கட்டுகஸ்தோட்டை மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள குப்பைத் தொட்டியை அகற்றுக

கண்டி,ஜூன்11

கட்டுகஸ்தோட்டை மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள குப்பைத் தொட்டியை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என வைத்திய அதிகாரிகளும், பொது மக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேற்படி குப்பைத் தொட்டியில் பிரதேச வாசிகளால் குவிக்கப்படும் குப்பைகளால் வைத்திசாலையின் சுகாதாரம் பாதிக்கப்படுகின்றது.

குறிப்பாக பிரசவ விடுதிக்கு அருகில் இந்தக் குப்பைத் தொட்டி அமைந்திருப்பதால் புதிதாக உலகைக்காணும் சிசுக்களின் சுகாதார மும் பாதிக்கப்படுகிறது.

எனவே,மாநகரசபை இதுவிடயத்தில் அவசர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - எனக் கோரப்படுகிறது.

(ளி)




# ஜனவசம நிர்வாகத்திற்கு எதிராக மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது

கண்டி,ஜூன்11

கண்டி, ஹந்தானை தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை இணக்கத்தின் அடிப்படையில் கைவிடப்பட்டுள்ளது.

தோட்ட நிர்வாகமும், கண்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தவர்களுடன் நடத்திய பேச்சுகளை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது என போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தொழிலாளர் கே. தங்கராஜ் தெரிவித்தார்.

'ஜனவசம' நிறுவனத்தின் கீழ் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சகாய நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, ஓய்வூதிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு முதலான பல்வேறு கொடுப்பனவுகள் கடந்த 10 வருடங்களாக மத்திய வங்கிக்கு செலுத் தப்படாமல் இருக்கின்றன எனக் கூறியே தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# யூகலிப்டஸ் மரங்களை அழிக்கும் வைரஸ் பதுளையில் கண்டுபிடிப்பு

## கட்டுப்படுத்தாவிட்டால் மரங்கள் முற்றாக அழியும் ஆபத்து

பதுளை,ஜூன்11

பதுளைப் பிரதேசத்தில் யூகலிப்டஸ் மரங்களை அழிக்கும் நோய்க்காவியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வனபரிபாலன திணைக்களத்தின் பதுளை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது பசறை, ஹொப்டன், ஸ்வின்டன், மிதும்பிட்டிய பிரதேசங்களின் தேயிலைத் தோட்டங்களின் அயலில் நடப்பட்டுள்ள யூகலிப்டஸ் மரங்களில் 50 வீதமானவை இந்நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்த நோய்க்காவியைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் அது பரவ வாய்ப்புள்ளது என்றும் அந் நிலையம் தெரிவித்துள்ளது.

அடிப்படை ஆராய்ச்சிகளின்போது ஒன்று தொடக்கம் ஒன்றரை சென்ரி மீற்றர் நீளமான ஈயைப்போன்ற பழுப்பு அல்லது கறுப்பு நிறத்தைக்கொண்ட புழுவொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெண்புழுக்கள் யூகலிப்டஸ் மரங்களில் இனவிருத்தி செய்வதன் மூலம் அம் மரங்கள் விரைவில் பட்டுப்போகின்றன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதுளை வன ஆராய்ச்சிக் காரியாலயம் பசறை பெல்கஹா தென்னயில் உள்ள பயிற்சி நிலைய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்........




கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் ஆரோகணித்து வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பதையும் படங்களில் காணலாம்.




காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் அம்பாள் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும், பக்தர்கள் புடைசூழ தேரில் பவனி வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: தர்ணிகா)




காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த தேர்த்திருவிழாக்காட்சிகளைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:தர்ணிகா)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2128 திகதி 09-06-2010

ஆங்கில எழுத்திற்கும் R

வெற்றி எண்கள் 05 35 46 55

போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ. 21,990,700/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 182233 | 20/- | 3,644,660/- |
| 2 இல | 13028 | 100/- | 1,302,800/- |
| 3 இல | 268 | 1,000/- | 268,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7268 | 40/- | 290,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 508 | 1,000/- | 508,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 21,990,700/- | 21,990,700/- |
| 1 இல + போனஸ் இல | 8667 | 100/- | 866,700/- |
| 2 இல + போனஸ் இல | 404 | 500/- | 202,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 334 | 200/- | 66,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 29,823,380/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 212763 | | 30,423,380/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| வவுனியா | 201967387-5-39 |
| பதுளை | 201969205-4-00 |
| அனுராதபுரம் | 201970173-7-16 |
| கண்டி | 201966209-9-40 |
| மொணராகலை | 201963930-1-08 |
| புத்தளம் | 201969690-0-08 |
| அம்பாந்தோட்டை | 201965726-9-10 |
| கண்டி | 201966244-1-07 |
| கொழும்பு | 201968563-3-30 |
| திருகோணமலை | 201965529-7-08 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 10,000,000/-

பரிசை நிற டிக்கட்டுகள் 2010 ஜூன் 12 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## தனுனவின் வங்கிக் கணக்குகளை முடக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூன் 11

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்னவை கைது செய்யுமாறு சர்வதேசப் பொலிஸாருக்கு உத்தரவிட்ட கோட்டை நீதிவான் நீதிமன்றம், அத்துடன் அவரின் பெயரில் உள்ள ஏழு வங்கிக் கணக்குகளையும் முடக்குவதற்கு பணித்தது.

கணக்குகள் உள்ள இரு வங்கிகளின் முகாமையாளர்களுக்கே நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இராணுவத் தளபாட கொள்வனவு மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே பிரதான சந்தேக நபரான தனுன திலகரத்னவின் வங்கிக் கணக்குகளை முடக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்படி ஏழு வங்கிக் கணக்குகளிலும் சுமார் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாக மன்றில் ஆஜராகியிருந்த குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் தனுன திலகரத்னவை கைது செய்யுமாறு சர்வதேசப் பொலிஸாருக்கு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன பிடியாணை உத்தரவையும் பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(சி)

## முத்திக்கு வித்து

ஞானக்கதிர்

இந்து மதத்தில் உள்ள விடயங்களை நாம் அவதானிக்கும்போது அவை இயற்கையோடு பின்னிப் பிணைந்த விடயங்களை ஒத்திருக்கின்றன. பிறவி எடுத்த ஆன்மா, பிறவி என்ற இருண்ட கூண்டுக்குள் அகப்பட்டுக்கொள்கிறது - தட்டுத் தடுமாறுகிறது - கவலைப்படுகிறது - வேதனைப்படுகிறது துயரப்படுகின்றது.


பிறத்தலும் இறத்தலும் நிச்சயமாகி பிறப்பு - இறப்புச் சக்கரத்தில் உழலுகின்றது. பிறப்பு இறப்புக்களினின்று விடுபடவிரும்புகின்றது. முயற்சியால் அது விடுபடுகின்றது. மோட்சமடைகின்றது. வசந்த காலத்தில் மா மரங்கள் பூத்துக் குலுங்கும். பூக்களில் உள்ள தேனை உண்பதற்காக ஆண் - பெண் வண்டுகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்கின்றன. தேனையுண்டதும் அவை தமது எச்சங்களை பூவிலிட்டுச் செல்கின்றன. மாம் பூக்களின் மேலே வண்டுகள் இட்டுச்சென்ற எச்சங்கள் மாங்கனிக்குள் அகப்பட்டுக்கொள்கின்றன.

பின்னர் மாம்பழத்தின் சதை இத்துப்போக வித்துக்குள் இருந்த வண்டு வெளியேவருகின்றது. வெளியே வந்த வண்டு மீண்டும் சிறைவாசம் இருக்க விரும்புமா? இல்லவேயில்லை, ஒருபோதும் அதனை விரும்பவே விரும்பாது. அது போலவே முத்தியடைந்த ஆன்மாக்கள் பொன்றிடும் மானிடப் பிறவியை எடுக்கவிரும்பாது. மாங்கொட்டைக்குள் இருக்கும் வண்டு போல, ஜீவன் தன்னை பிரகிருதியோடு இணைத்துக்கொள்வதால் பந்தத்துக்குள்ளாகிறது. மாங்கொட்டைக்குள் இருந்து வெளியே வந்த வண்டு போன்று பிரகிருதிக்குள் - பந்தத்துக்குள் இருந்து வெளியேறும் ஜீவன் - ஆன்மா முத்தியடைகின்றது. ஈஸ்வர நாமத்தால் - ஈஸ்வர தியானத்தால் - சில ஜீவன்கள் முத்தியடைய விளைகின்றன - முத்தியடைகின்றன. ஈஸ்வர சிந்தனையற்ற ஜீவான்மாக்கள் தங்கள் தங்கள் தீய எண்ணங்களையும், செயல்களையும் சாதித்துக்கொள்ள முயற்சிப்பவர்கள் - பந்தத்துக்குள்ளாகி பலவினைகளைச் செய்து ஈற்றில் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றார்கள். முத்தியடைய விரும்புவோர் சிறிது சிறிதாக முயற்சித்து வைராக்கியமான பக்தி கொண்டு ஈஸ்வரனைத்துதித்தால் - பூஜித்தால் முத்தி கிடைக்கப்பெறும்.

ஏழாலைக்குமரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை



தென்மராட்சி கல்வி வலயத்தில் நூற்றாண்டு கண்ட பாடசாலைகளில் ஒன்றாக திகழும் சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை பற்றி ஆராய்வோம்.

யாழ்.கத்தோலிக்க திருச்சபையினர் சாவகச்சேரி புனித லியோரியார் தேவாலய பங்கு மக்களுக்கு ஆற்றிய பணிகளில் கல்வித்துறை சார்ந்த பணிகள் முக்கியத்துவம் பெறுபவையாகும். சாவக்சேரி டிறிபேக் ஆங்கில பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத காலத்தில் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள புனித லிகோரியார் தேவாலய வளாகத்தில் 1887ஆம் ஆண்டு கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அருட்திரு லூவிஸ் பூலோகசிங்கம் அடிகளார் அருட் சகோதரராக இருந்த காலத்தில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாக பாடசாலைப் பதிவேடுகளில் காணப்படுகிறது.

1887ஆம் ஆண்டு கொட்டகையில் இருந்த புனித லியோரியார் தேவாலயத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு மாற்றப்பட்டதையடுத்து தேவாலயம் அமைந்திருந்த கொட்டகையில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தேவாலயத்தின் கிழக்குப் புறத்தில் குருமாரின் ஓய்வு மண்டபமாக அமைக்கப்பட்டிருந்த மண்டபம் பாவனையற்றிருந்ததால் 1938ஆம் ஆண்டு இந்த மண்டபத்திற்கு பாடசாலை மாற்றப்பட்டு 1972ஆம் ஆண்டு வரை இந்த மண்டபத்திலேயே இயங்கி வந்தது.

1960இற்கு முன்னர் அனேகமாக அனைத்துப் பாடசாலைகளும் அரச உதவிபெறும் பாடசாலைகளாக சமயம் சார்ந்த நிறுவனங்களின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்தன. அந்த வகையில் இப் பாடசாலை யாழ்.ஆயரின் நிர்வாகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டது. 1963இல் இப்பாடசாலை தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் தேவாலய வளவின் வடகிழக்கில் இடம் ஒதுக்கப்பட்டு 40' X 20' கொண்ட அலுவலகத்துடன் கூடிய வகுப்பறைத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு இக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

உதவி பெறும் பாடசாலையாக இருந்த காலத்தில் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர்கள் அனைவரும் கத்தோலிக்கர்களாகவே இருந்தனர். அந்த வகையில் சாமிநாதன் மாஸ்டர், பிலிப்ஸ் மாஸ்டர், மரியாம்பிள்ளை மாஸ்டர், பிரான்சிஸ் மாஸ்டர், சின்னப்பு மாஸ்டர், சவிரிமுத்து மாஸ்டர், ஞானப்பிரகாசம் மாஸ்டர், நீக்கலாஸ் மாஸ்டர் என்போர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

உதவி பெறும் பாடசாலையாக இருந்த காலத்தில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டதுண்டு. ஆலய நேர்த்தி செய்வோரும் மாணவர்களுக்கு பலகாரம் தயாரித்து மதிய உணவாக வழங்கியதுண்டு.1970இல் இப்பாடசாலையின் முதலாவது அதிபராகப் பதவியேற்ற தொ.கபிரியேல்பிள்ளை என்பவர் சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்கைச் சேர்ந்தவர்.

இவரது காலத்திலேயே 1972ஆம் ஆண்டு தற்போது பாடசாலை இயங்கும் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இவரின் ஞாபகார்த்தமாக இவரின் பிள்ளைகள் பாடசாலைப் பெயர் வளைவை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

1987இல் அதிபராக பொறுப்பேற்ற சின்னத்துரை அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தவராக அப்பகுதி மக்களால் இன்னும் நினைவு கூரப்படுகிறார்.

பாடசாலையில் இடநெருக்கடி ஏற்பட்ட வேளையில் பெரிய ஓலைக் கொட்டிலை அமைத்து அதற்கு தேவையான தளபாடங்களை நலன்விரும்பிகள் மூலம் பெற்றுக் கொடுத்தார். இவரது காலத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென மாலைநேர விசேட வகுப்புகளை நடத்தியதன் பயனாக சில மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

(தொடரும்)

# கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்




(சென்றவாரத் தொடர்ச்சி)

1924ஆம் ஆண்டு மடாலய மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகள் 2003இல் பழைய மண்டபம், பிரதான மண்டபம், அலுவலக மண்டபம், மக்கள் மண்டபம் - 1, விஞ்ஞான ஆய்வுகூடம், மக்கள் மண்டபம் - 2, கலையரங்கம் செயற்பாட்டறை, தண்ணீர்த்தாங்கி, பவளவிழா மண்டபம், கணனி செயற்பாட்டறை, பொதுநூலகம் போன்ற கட்டடங்களை உள்ளடக்கிக் காணப்படுகிறது.

எந்தவொரு நிறுவன அமைப்பும் தமது எண்ணங்களை வளர்ப்பதற்கும் தமது செயற்பாடுகளை உறுதிப்படுத்துவற்கும் சின்னங்களைப் பயன்படுத்துகின்றன. அந்த வகையில் இப்பாடசாலைச் சின்னமும் மாணவர்களின் இலட்சியத்தினை ஒன்றுதிரட்டப்பட்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

பொன்.கந்தையினார் அதிபராக இருந்த காலத்தில் திருநாவுக்கரசு நாயனாரின் திருவுருவத்தைத் தாங்கியதாக அமைக்கப்பட்ட பாடசாலைச் சின்னம் மாற்றம் செய்யப்பட்டு அதிபர் ச.பேரம்பலம் காலத்தில் தற்போதுள்ள சின்னம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. க.சரவணபவன் (சிற்பி) என்பவரால் இயற்றப்பட்ட பாடசாலைக் கீதம் வித்தியாலயத்தில் ஒலிக்கின்றது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் வருடாந்தம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் அதிக அளவில் மாணவர்கள் சித்திபெறும் பாடசாலைகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் ஒன்றாகும். இவ்வித்தியாலய மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்ல இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சாதனை படைத்து முத்திரைபதித்து வருகின்றனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வித்தியாலய மாணவர்கள் வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் வலய, மாவட்ட, மாகாண மட்ட தமிழ்த்திறன் போட்டிகள், ஆங்கில திறன்போட்டிகள் ஆகியவற்றில் பங்குபற்றி வெற்றிபெற்று வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை 11 அதிபர்கள் தமது காலத்தில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமை வித்தியாலய வளர்ச்சியின் ஏணிப்படிகளாக காணப்படுகின்றன.

முருகேசு, ஏ.என்.வேலுப்பிள்ளை, எஸ்.பொன்னையா, க.முருகேசு, சி.செல்லத்துரை, பொ.கந்தையினார், ச.பேரம்பலம் ச.சின்னத்தம்பி, இ.கைலைநாதன், த.கந்தையா, வ.நடராசா ஆகியோர் வித்தியாலயத்தில் அதிபர்களாகக் கடமையாற்றி மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் செலுத்திய அக்கறை மாணவர்களின் உயர்ச்சிக்கும் வித்தியாலய பௌதீக வளங்களின் உயர்விற்கும் காரணமாக அமைந்துள்ளன.

கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் சாதனை படைத்து வரும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் வெகு விரைவில் கொடிகாமம் திருநாவுக்கரசு கல்லூரி என்ற பெயருடன் இயங்குமென்பதில் ஐயமில்லை. அத்துடன் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தின் ஒரேயொரு கல்லூரியாக தலை நிமிர்ந்து செயற்படும் என்பதில் கல்விச் சமூகத்தினர் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர்.

(முற்றும்)

தென்மராட்சி வலம்

தொகுப்பு: ஐயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 09

## வினாத்தாள் - II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

01. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசிக்குக.

வண்ண வண்ண பூச்சியே
வட்டம் இட்டு பூக்களில்
என்ன தேடித் திரிகிறாய்
எடுக்கத் தேனா பார்க்கின்றாய்
என்ன என்ன வண்ணங்கள்
இருக்கும் உந்தன் செட்டையில்
எண்ண எண்ண ஆசைதான்
எனக்கு விரல் போதாதே.

மெல்ல குழாயை வைக்கவும்
மெதுவாய் தேனை உறிஞ்சவும்
செல்ல வண்ணப் பூச்சியே
சொல்லித் தந்ததாரோ சொல்

1) கவிதையில் வர்ணிக்கப்படும் பிராணி எது?
.................................................................................
2) பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
   1. வண்ணம் ..............................................
   2. ஆசை ..............................................
3) இங்கு இடம்பெற்றுள்ள சினைப் பெயர்ச்சொற்கள் இரண்டை எழுதுக.
   1. ..............................................
   2. ..............................................
4) தந்ததாரோ என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.
.................................................................................
5) இங்கு இடம்பெற்றுள்ள அடுக்குமொழிச் சொல் ஒன்றை எழுதுக.
.................................................................................
6) உயர்திணை ஒருமை தன்மைச் சொல் ஒன்றை எழுதுக.
.................................................................................
7) பூக்களில் என்ற சொல்லை ஒருமையில் எழுதுக.
.................................................................................
8) இங்கு இடம்பெற்றுள்ள வினையெச்சச் சொல் ஒன்றை எழுதுக.
.................................................................................
9) மெதுவாக என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக.
.................................................................................

02. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடத்தை நிரப்புக.
1) உண்ட பின் சிறிது தூரம் .............................. உடலுக்கு நல்லது.
( உலவுதல், உளவுதல் )
2) சிங்கத்தைக் கண்ட மான்கள் ஓடி ..............................
( ஒழிந்தன, ஒளிந்தன )

03. அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான எழுத்தைக்கொண்டு சொற்களைப் பூரணப்படுத்துக.

**ல , ன , ண , ழ**

1) வ.....க்கு  2) நய.....ம்  3) பய.....ம்  4) வ.....ம்புரி

04. பின்வரும் தொடர்களுக்குத் தனிச்சொல்லை எழுதுக.
1) தன்னலம் கருதாது பிறர் நலன் கருதி வாழ்பவன்
..............................................
2) வைத்தியர் இன்றித் தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து
..............................................
3) பத்து ஆண்டு கால நிறைவுப் பகுதி ..............................................

05. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
1) ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு
2) இளவேனில் ஆண்டு மாலை சித்திரை வாரம் நிமிடம் இவை எவற்றைக் குறிக்கின்றன

06. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
1) சீட்டுக் கிழித்தல்: ..............................................
2) பூசி மெழுகுதல்: ..............................................

07. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
..............................................
2) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
..............................................

08. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
நாட்டைப் / தரும் / மரங்களை / நிழல் / நட்டு / பசுமையாக்குவோம்
..............................................

09. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரிவாக எழுதுக.
1) கி.அ.ச. ..............................................
2) வெ.நோ.ப ..............................................

10. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மீன் ..............................................
2) பன்னிரண்டு ..............................................
3) பச்சை நிறம் ..............................................

11. 
வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.
I am .............................. some water.
(bathing, washing, drinking, watering )

12. கருத்தைத் தமிழில் எழுதுக.
1) Hurry up please ..............................................
2) All the best ..............................................
3) Please give me a pencil ..............................................

13. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) ரவுமக் அ(ந்)தின்ன ..............................................
2) அ(ப்)பி செல்லம்கறமு ..............................................

14. ஞாயிற்றுக்கிழமை எனும் சொல் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
..............................................

* 15-47வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

15. பின்வரும் தாவரங்களுள் சூரிய ஒளி குறைவான வேளைகளில் இலைகள் சுருங்காத தாவரம்,
1) நொச்சி  2) மருந்து நெல்லி  3) மஞ்சாடி  4) அகத்தி

16. கித்துள் கருப்பட்டி, கித்துள் பாணி என்பன தயாரிக்கப் பயன்படும் தாவரம்,
1) பனை  2) திப்பிலிப்பனை  3) இலுப்பை  4) தென்னை

17. சூரிய ஒளிக்கு துலங்கலைக் காட்டி மலரும் பூ,
1) தாமரை  2) செம்பருத்தி
3) அந்தூரியம்  4) மூக்குத்திப்பூண்டு

18. சூழல்நேயக் கட்டுப்பாட்டுத் திரவத்தை தயாரிக்கப் பொருத்தமான விதை,
1) வேம்பு  2) குண்டுமணி  3) புலிநகம்  4) ஆமணக்கு

19. எமது நாட்டுக்கு உரித்தான தாவரமாக அமையாதது,
1) தென்னை  2) தொரணை
3) நிலவேம்பு  4) கஸ்தூரி மஞ்சள்


20. எமது நாட்டுக்கு உரித்தான மீனினம்,
1) விலாங்கு  2) விறால்  3) புளுட்டா  4) திமிங்கிலம்

21. புளுனிப் பறவையின் முட்டையின் நிறம்,
1) வெள்ளை  2) கபிலம்  3) பச்சை  4) இளம் பச்சை

22. பின்வரும் பூச்சிகளில் விசம்கொண்ட பூச்சி,
1) அந்துப்பூச்சி  2) பிள்ளைப்பூச்சி
3) மின்மினிப்பூச்சி  4) கும்படுபூச்சி

23. இவ்வுருவில் காணப்படும் அலகைக் கொண்ட பறவை,

1) கழுகு  2) ஆட்காட்டிக்குருவி
3) கோட்டான்  4) பென்குயின்

24. சூரிய நமஸ்கார பயிற்சியின் ஐந்தாம் கட்டத்தைக் காட்டும் உரு யாது?
1) 2) 3) 4)


25. பின்வரும் செயற்பாடுகளில் யானைபோல் நடத்தலைக் காட்டும் உரு யாது?
1) 2) 3) 4)


26. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடொன்று பற்றித் தெரிவிக்க அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்,
1) 1919  2) 118  3) 1929  4) 119

27. பின்வரும் எப்பொருளின் மேலுறையில் SLDA என்ற ஆங்கில சுருக்கக் குறியீடு காணப்படும்?
1) பால்மா பக்கற்  2) சவர்க்கார மேலுறை
3) பற்பசைப் பக்கற்  4) பிஸ்கட் பைக்கட்டின் மேலுறை

28. ஒருவரின் உடலில் அட்டை ஒட்டிக்கொண்டால் அதனை அகற்ற பொருத்தமானது,
1) சீனிக் கரைசல்  2) குளிர்நீர்
3) வெந்நீர்  4) உப்புக்கரைசல்

29. தரமற்ற தேயிலையினை நீரில் இடும்போது அவதானிக்கக்கூடியது,
1) நீர் கடும் கபில நிறமாக மாறும்  2) நீர் இளம்மஞ்சள் நிறமாக மாறும்
3) நீரில் கறுப்பு நிறம் தோன்றும்  4) எந்த மாற்றமும் நிகழாது

30. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகளுள் ஒன்று,
1) மின்சாரம்  2) போக்குவரத்து  3) சுகாதாரம்  4) தொலைபேசி

31. மயக்க நிலையிலுள்ள ஒரு நோயாளிக்கு செய்யக் கூடாதது,
1) சுவாசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குதல்.
2) நீரினால் முகத்தைத் துடைத்தல்.
3) வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லல்.
4) நீர் பருகக் கொடுத்தல்.

32. உடலுக்குச் சக்தி தருவதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச் சோடி,
1) சோறு, மீன்  2) ஈரப்பலாக்காய், வல்லாரை
3) பழங்கள், கீரைகள்  4) பலாக்காய், ஈரப்பலாக்காய்

33. பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இரவு 8.00 மணியளவில் வானில் அவதானிக்கக் கூடிய உடுத்தொகுதி,
1) ஓராயன்  2) சிறுகரடி  3) தென்சிலுவை  4) பெருங்கரடி

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. வியாபார நோக்குடைய உள்நாட்டு சாதாரண கடிதமொன்றை அஞ்சலிட ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி,
1) ரூ. 5.00 2) ரூ. 30.00 3) ரூ. 25.00 4) ரூ. 15.00

35. நீரினால் பரவும் நோயாக அமையாதது,
1) நீர்வெறுப்பு நோய் 2) வயிற்றுளைவு
3) வாந்திபேதி 4) நெருப்புக்காய்ச்சல்

36. ''ஒசுசல'' என்பதனால் குறிக்கப்படும் நிறுவனம்,
1) இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
2) கைப்பணிப் பொருட்கள்
3) மொத்த விற்பனை நிலையம் 4) ஒட்டுத் தொழிற்சாலை

37. உருவில் காணப்படும் குறியீட்டின் மூலம் உணர்த்தப்படுவது,
1) கட்டாய சுற்றுவட்டம்
2) வட்ட வடிவான பாதை
3) மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது
4) கவனமாகக் கையாளவும்



38. இலங்கையில் மிக நீளமான பாலம்
1) களனிப்பாலம் 2) மட்டக்களப்புப் பாலம்
3) அலவ்வைப் பாலம் 4) கிண்ணியா இணைப்புப் பாலம்

39. இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமானநிலையம் அமையவுள்ள இடம்,
1) கட்டுநாயக்க 2) ரத்மலானை 3) மத்தல 4) கண்டி

40. குளம் ஒன்றில் சேரும் மேலதிக நீரை வெளியேற்ற உதவும் பகுதி அழைக்கப்படுவது,
1) கலிங்கல் தொட்டி 2) வான்கதவு
3) வாய்க்கால் 4) குளக்கட்டு

41. சிவனொளிபாத மலையிலிருந்து அல்லது சப்ரகமுவ மாகாணத்திலிருந்து உற்பத்தியாகும் பிரதான நதிகள்,
1) களனி கங்கை, வளவ கங்கை 2) மாணிக்க கங்கை, வளவ கங்கை
3) களனி கங்கை, ஜின் கங்கை 4) நில்வள கங்கை, மாணிக்க கங்கை

42. பல்லாங்குழி விளையாட்டின்போது ஒரு பக்க குழிகளுக்கு தேவையான விதைகளின் எண்ணிக்கை,
1) 56 2) 14 3) 28 4) 36

43. வலைப்பந்து (Net Ball) விளையாட்டின்போது ஓர் அணியில் விளையாடும் மிகக் கூடிய வீரர்களின் எண்ணிக்கை,
1) 6 2) 7 3) 5 4) 1

44. மாணிக்கக்கல் அகழ்வின்போது பயன்படுத்தப்படும் உபகரணம்,
1) குல்லம் 2) சுத்தியல் 3) இல்லம்கூறு 4) அத்தாங்கு

45. நீலம், சிவப்பு ஆகிய இரு நிறங்களையும் கலப்பதன் மூலம் கிடைக்கும் நிறம்,
1) இளநீலம் 2) பச்சை 3) ஊதா 4) மஞ்சள்

46. சர்வதேச கைகழுவல் தினம் அனுஷ்டிக்கப்படுவது,
1) மே 1 2) ஒக்டோபர் 6 3) ஒக்டோபர் 15 4) ஆகஸ்ட் 5

47. உருவில் காட்டப்பட்டுள்ள மேசைத்தட்டத்தை அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்ட தையல் வகையைத் தெரிவுசெய்க.





48. 9909 என்ற எண்ணை விரித்து எழுதுக. ........................................

49. முப்பதாயிரத்து மூன்று என்பதை எண்ணில் எழுதுக. ..............................


50. 8050 உடன் 609 ஐக் கூட்டுக. ........................................

51. 4009 இலிருந்து 910 ஐக் கழிக்குக. ........................................

52. உருவில் காட்டப்பட்டிருக்கும் வலையுருவினைஅவதானிக்குக.
1) இதனால் ஆக்கக்கூடிய முப்பரிமாண உரு எது?
........................................
2) முகங்கள் எத்தனை?
........................................
3) விளிம்புகள் எத்தனை?
........................................



53. உருவில் உள்ள சதுரத்தை நிரப்புவதற்கு இன்னும் எத்தனை சதுர முகிகள் தேவை?



........................................

54. பதினாறு என்ற இந்து அராபிய எண்ணை உரோம எண்ணில் எழுதுக.

........................................

55. மாந்தோப்பு ஒன்றில் மாசி, பங்குனி மாதங்களில் முறையே 8402 , 7349 மாம்பழங்கள் பறிக்கப்பட்டன. இரு மாதங்களிலும் பறித்த மாம்பழங்களின் எண்ணிக்கை சம அளவாக இருப்பதற்கு மாசி மாதம் எத்தனை மாம்பழங்கள் பறித்திருக்கவேண்டும்?

........................................

✱ இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்த ஒரு குருவி தலையை அசைத்து சுற்றுமுற்றும் பார்த்தது. ஆயினும், தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காணவில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால்,.........

சம்பவத்தின் மீதிப்பகுதியை நிறைவு செய்வதற்கு எதிர்காலத்தில் நிகழக் கூடிய நிலைமைகளை ஐந்து சொற்களுக்குக் குறைவில்லாத ஆறு வாக்கியங்களில் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை இயைபு திருத்தமானதாக இருத்தல்வேண்டும்.

56. ........................................................................

57. ........................................................................

58. ........................................................................

59. ........................................................................

60. ........................................................................

61. ........................................................................

(நிறைவுற்றது)

### விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.09, வினாத்தாள் I

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 - 2 | 02 - 3 | 03 - 2 | 04 - 3 | 05 - 2 | 06 - 1 | 07 - 2 | 08 - 2 | 09 - 1 |
| 10 - 2 | 11 - 2 | 12 - 2 | 13 - 3 | 14 - 1 | 15 - 1 | 16 - 3 | 17 - 2 | 18 - 3 |
| 19 - 3 | 20 - 2 | 21 - 1 | 22 - 3 | 23 - 1 | 24 - 2 | 25 - 3 | 26 - 1 | 27 - 2 |
| 28 - 3 | 29 - 3 | 30 - 2 | 31 - 2 | 32 - 1 | 33 - 1 | 34 - 3 | 35 - 1 | 36 - 1 |
| 37 - 3 | 38 - கதிரை | | 39 - தவளை | | 40 - லசித் | | | |


A.S.ஜெளபர், மட்/பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயம்,
ஓட்டமாவடி. தொ.பே.இல: 071-8077257



**கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....**
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035


## கல்விச் சாலைக் காட்சிகள்........



சிறுவிளான் கனகசபை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி உரையாற்றுவதையும், மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், இடைவேளை நிகழ்வாக மாணவர்களின் உடற்பயிற்சிக் காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்

மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சில விடயங்களில் தெளிவான முடிவுகள் எடுத்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். காலை நேரத்தில் மனதிற்கு உற்சாகம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். பல நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம்.

### இடபம்

எதிர்காலம் பற்றிய கவலைகள் உண்டாகும். மருந்துப் பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கலாம். தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். மறதியால் அவதியுண்டு.

### மிதுனம்

ஆதாயகரமான பணவரவுகளை சிலர் மூலம் பெறலாம். வியாபாரிகள் தொழில் விஸ்தரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவர். வழக்கு விவகாரங்களில் சுமுகமான நிலைமை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். தந்தை வழியில் சுபச் செலவு ஒன்றைச் சந்திக்கலாம். நாவன்மை அதிகரிக்கும்.

### கடகம்

வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், அதிக அளவில் லாபம் கிடைக்கலாம். உறவுப் பெண்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். சிலர் உங்களின் சொல்பேச்சை கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம்.

### சிங்கம்

சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். குடும்ப விடயங்களில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். பழைய நண்பர் ஒருவர் மூலம், புதிய நண்பரின் அறிமுகம் கிட்டும். உங்களின் சில செயற்பாடுகளால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம். இறை வழிபாடு அமைதி தரும்.

### கன்னி

இனம் புரியாத கவலைகள் மனதை ஆள்கொள்ளும் நாள். வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதாகி செலவுகளை ஏற்படுத்தலாம். குடும்ப உறுப்பினர்கள் வழியில் திடீர் பிரச்சினை ஒன்றைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். கோபம், வேகமாக நடந்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

### துலாம்

உறவினர்கள் சிலருக்கு மனம் உவந்து உதவி செய்வீர்கள். சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். அயலாருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மறையும். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்விற்கு வரும். உங்களின் வேலை ஒன்றுக்காக, நண்பர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

### விருச்சிகம்

கனிவாகப் பேசி காரியங்கள் சாதிப்பீர்கள். வரவு ஒன்றை எதிர்பார்த்து செலவு செய்வீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் நபர்கள் முக்கியமான தகவல்களைச் சொல்லலாம். சுயதொழில் புரிவோர் கூடுதல் வருவாய் பெறலாம். குறுக்குவழி சிந்தனைகளை விரட்டி நேர் வழியில் செயற்பட வேண்டும். குதூகல அனுபவம் உண்டு.

### தனுசு

எந்த வேலையையும் தாமதம் இல்லாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். சக ஊழியர்களிடம், நண்பர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு ஒன்றைச் சந்திக்கலாம். சோம்பல் கூடும் நாள்.

### மகரம்

நேரம் காலம் பார்க்காமல் கடுமையாக உழைக்க நேரிடலாம். உங்களின் இரகசிய செயற்பாடு ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொள்ளலாம். சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும்.

### கும்பம்

தர்ம, புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்வீர்கள். இருந்த இடத்தில் இருந்தே வேலைகளை முடித்துக் கொள்ள முற்படுவீர்கள். குடும்பத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சுபகாரிய முயற்சிகளில் நல்ல திருப்பங்களைக் காணலாம். பிள்ளைகள் செயற்பாட்டை நினைத்துபெருமைப்படுவீர்கள்.

### மீனம்

வீட்டை அலங்கரிக்க அழகுப் பொருள் ஒன்றை வாங்குவீர்கள். சில வேலைகளை செய்ய முடியாமல், ஏதோ ஒரு வகையில் முட்டுக்கட்டை ஏற்படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். நண்பர் ஒருவர் உங்களை உதாசீனம் செய்யும் வகையில் பேசலாம். தடுமாற்றங்களை சந்திக்கலாம்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:

ROYAL Industries

Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி

தெய்வானைப்பிள்ளை கனகசபை

சேயாக: 25.03.1913

உமையாக: 12.05.2010

கடந்த 12.05.2010 இறை பதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிரியைகள் இன்று (11.06.2010) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'கனகை',
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.

குடும்பத்தினர். (இ/568197)

## பாடநூல் விநியோகம் தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

2011ஆம் ஆண்டுக்கான பாடநூல் விநியோகத்துக்கான கோரல் படிவ விநியோகம் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கான செயலமர்வு இன்று வெள்ளிக் கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் அடுத்த வருடத்துக்கான பாடநூல் கோரல் படிவங்கள் விநியோகித்ததும், கோரல் படிவங்கள் பூரணப்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்குதல், பாடநூல் விநியோகத்தின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடுதல், மீள்குடியேற்றம் நடைபெறும் பிரதேச மாணவர்களின் பாடநூல் தேவையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் பாடநூல் விநியோக நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள் அனைவரும் தவறாது சமுகந்தருமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (50-16)


## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் Hotel/Restaurant/Cool Bar இற்கும் பாவிக்கக் கூடிய கதிரை, மேசைகள் (Damro Design), Freezer Digital Scale மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்புக்கு: 0771 629806.

P.சுதர்சன், 72/16, பிரம்படி வீதி, கொக்குவில்.

## காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.

தொடர்புகளுக்கு: 021 ... 0770


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 02 . 1937



மறைவு
23 . 05 . 2009



## அமரர் சபாபதி சின்னமணி

திதி: சதுர்த்தசி (11.06.2010)

அன்பான எங்கள் அம்மாவே!
ஆண்டு ஒன்று கடந்து விட்டாலும்
எம் இதயங்களில் என்றும் நீங்கள்
ஆறாது உங்கள் பிரிவின் துயரம்
நாம் மகிழ நீங்கள் கடமை பல செய்தீர்கள்
எம் உயர்வுக்கு உறுதுணையாய் இருந்தீர்கள்
உங்கள் ஆத்மாசாந்தி பெற வட்டுக்கோட்டை
மனோன்மணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆண்டுத்திவசம் இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

செம்பாட்டன் தோட்டம்,
வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர். (99295)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

*''சகல விடயங்களையும் தெளிவுபடுத்துகிற மனம் தன்னளவில் புதிராகவே இருக்கும்.''*

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 12

### அர்த்த மத்திபோந்திராசனம்



செய்யும் முறை: நிமிர்ந்து உட்காந்து, இடது காலை மடக்கி இடது குதியை தொடைகள் சந்திற்குக் கொண்டு வரவும். வலது முழங்காலை மடக்கி நிறுத்தி இடது முழங்காலருகே வலது பாகத்தைக் கொண்டு வந்து தூக்கி இடது தொடையைத் தாண்டி பக்கத்தில் படத்தில் காட்டியபடி நிறுத்தவும்.உடலை வலது பக்கம் திருப்பவும்.இடது கையை வலது முழங்காலுக்கு வெளியேவீசி. பின்புறமாய் முழங்காலை அமர்த்திட இடது கையால் இடது முழங்காலைப் பிடிக்கவும். முதுகை வலது பக்கம் திருப்பி வலது கையைப் பின்னால் வீசி மூச்சை வெளியே விட்டு வலது விரல்களால் வலது காலில் மாட்டிக் கொக்கிபோல் உடலை நன்றாகத் திருப்பி இழுக்கவும். ஆசனத்தை கலைத்து இடது பக்கம் மறுபடியும் அம்மாதிரி மாற்றிச் செய்யவும்.

பயன்கள்: உடல் கயிறுபோல் திரிக்கப்படுவதால் உடம்பில் எல்லா நாடி நரம்புகளும் இழுக்கப்பட்டு புத்துணர்வு பெறுகின்றது. இரத்தம் எல்லாப் பகுதிகளுக்கும் செலுத்தப்படுகிறது. இளமை மேலிடும். முகக் கவர்ச்சி உண்டாகும். விலா எலும்பு பலப்படும். தொந்தி கரையும். இந்த ஆசனம் உடனே வராது இரண்டு மாதங்கள் விடா முயர்ச்சியால் காலையும், மாலையும் செய்து வந்தால் தானாக வந்துவிடும்.

*''அழியக்கூடிய வாழ்க்கையின் தடைகள் அகற்றப்படும்போது அழிவற்ற ஒரு வாழ்க்கை நமக்குக் கிடைத்துவிடுகிறது.''*

### அர்த்தசிரசாசனம்



செய்யும்முறை: கெட்டியான விரிப்பில் மண்டியிட்டு உட்காரவும். விரல்களைச் சேர்த்து முக்கோணம் போல் விரிப்பின் மேல் அமர்த்தவும். உச்சந்தலையை தரையில் அமர்த்தி. பிடரியில் விரல்கள் ஒட்டியவாறு குனிந்து அமரவும். பிருரிஷ்ட பாகத்தைத் தூக்கி கால்களை அருகே இழுத்து முக்கோண வடிவமாக நிற்கவும். ஆசன நிலையில் சாதாரண மூச்சு. கண் மூடியிருக்க வேண்டும். உடல் கனம்யாவும் கையில் தாங்கியபடி இருக்க வேண்டும். ஒரு முறைக்கு ஒன்று முதல் இரண்டு நிமிடம் வரை இருக்கலாம். பின் மெதுவாக ஆசனத்தைக் கலைக்க வேண்டும். 2 முதல் 5 முறை செய்யலாம். சிரசாசனம் செய்யும் முன் பதினைந்து நாள்கள் இவ்வாசனம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

பயன்கள்: தலைக்கு நல்ல இரத்தோட்டம் கிடைக்கும். மிக பலகீனமானவர்கள், வயதானோர், பெண்கள் இவ்வாசனத்தை மட்டும் தினம் காலை, மாலை மூன்று நிமிடம் செய்தால் நல்ல ஆரோக்கியமும் உடல் பலம், சுறுசுறுப்பு, ஞாபகசக்தி உடல் தெம்பு, கண்பார்வை உண்டாகும்.

*''தன்னையறிந்தவன் இருட்டில் தள்ளாடுவதில்லை. தன்னையறிந்தவன் இன்பத்தை வெளியில் தேடுவதில்லை.''*

### திரிகோணாசனம்



செய்யும் முறை: கால்களை இரண்டு அடி அகற்றி நின்றுகொண்டு இருகைகளையும் பக்கவாட்டில் ஒரு நேர்கோடுபோல் இருக்கும் படி உயர்த்தவும். மூச்சை வெளியே விட்ட நிலையில் இடது பக்கம் படத்தில் காட்டியபடி வளைத்து கை இடது பாதப் பெருவிரலைத் தொடும்படியாகவும் தலையை மேலே திருப்பி, கண்கள் இடது கைப்பெருவிரலைப் பார்க்கும் படியும் நிற்கவும். பின் மெதுவாக நேரே நிமிர்ந்து வலது பக்கம் திரும்பி வலது கால் பெருவிரலை வலது கையால் தொடும்படி நின்று மெதுவாக நிமிரவும். ஒரு முறைக்கு 5 வினாடியாக 2 முதல் 4 முறை செய்யலாம். கால்மூட்டை வளையவிடக்கூடாது.

பயன்கள்: முதுகுத் தண்டுக்கு சக்தி மேலிடும். நுரையீரல் ஆரோக்கியமாகும். குடலில் உள்ள மலம் சுலபமாய்க் கழியும். முதுகுத்தசை புத்துணர்வு பெறும். இடுப்புவலி, முதுகுவலி, பக்கப்பிழவை, கண்டமாலை, கிளாண்டு முதலிய நோய்கள் நீங்கும். தொந்தி கரையும்.

*''விவேகத்தில் பலம் உண்டு அறியாமையில் துயரம் தான் உண்டு.''*

### கோணாசனம்



செய்யும் முறை: நேராக நின்று கொண்டு கால்களை இரண்டு அடி அகற்றி வைக்கவும். கைகளை படத்தில் காட்டியபடி தலைக்கு மேலே தூக்கிக் கும்பிட்டுக் கொள்ளவும். அதன் பின்பு மூச்சை நன்றாக இழுத்துவிட்ட நிலையில் முதலில் வலப்பக்கம் உடல் திருகாமல் வளைக்க வேண்டும். இருபது எண்ணிக்கை ஆசன நிலையில் இருந்து பின் இடப்பக்கமாக வளைக்க வேண்டும். 3 முறை செய்யலாம்.

பயன்கள்: விலா எலும்புகள் பலப்படும். கபநோய் நீங்கும். இடுப்பு வலிகள் குறையும் பெண்கள் இவ்வாசனத்தைச் செய்தால் இடுப்பு பிருஷ்டம் இவற்றில் சதை போடாமல் தடுக்கலாம். உடலை அழகாகவும் வைத்திருக்கலாம்.

(முற்றும்)

இந்த ஆசனங்களை தகுந்த குருவிடம் பயின்ற பின் செய்வதே சாலச்சிறந்தது.

# லூக்கா கோரிகோவின் வியக்க வைக்கும் எதிர்வு கூறல்கள்!

*(நேற்றைய தொடர்ச்சி)*

சோதிடத்தைக் கணித்துக் கூறுவதிலும் லூக்காவிடம் விசேட திறனாற்றல் அமைந்திருந்தது. ஒரு தடவை பாப்பாண்டவரொருவர் 1554ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மரணத்தைத் தழுவிக்கொள்வாரென லூக்கா தெரிவித்தார். அவ்விதமாகவே வணக்கத்துக்குரிய மூன்றாவது பாவுல் பாப்பாண்டவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார். உலகமே வியப்பில் ஆழ்ந்து போனது. அறுபது வரையிலான அச்சொட்டாக நிறைவேறும் எதிர்வு கூறல்களை லூக்கா கோரிகோ தெரிவித்துள்ளதாக நம்பப்படுகிறது. இவற்றுள் லூக்கா தமது முதிய வயதில் தெரிவித்த எதிர்வு கூறலொன்று பெரிதும் பிரசித்தி பெற்றுள்ளது.

வடக்கு இத்தாலியிலுள்ள சீர்கெட்ட இராச்சியமான பொலொஞ்ஞோவின் நிர்வாகி, தான் என்ற மமதையால் வெறித்தனம் கொண்ட மாயைக் கருத்துக்களில் ஊறிப்போன முரட்டுத்தனமான மன்னனாவான். ''கியோ வென்த்தி'' என்ற அந்த மன்னன் ஒரு தடவை லூக்கா கோரிகோவை தனது அவைக்கு அழைத்திருந் தான். தன்னைப் பற்றி எதிர்வு கூறலொன்றைக் கூறுமாறு லூக்காவிடம் அம்மன்னன் கோரிநின்றான். அப்போது, லூக்கா கோரிகோ மிக விரைவிலேயே மன்னர் தனது முடியை இழந்து பிறதேசமொன்றில் மரணிப்பாரென்றவாறு எதிர்வு கூறினார்.



அதைச் செவிமடுத்தும் சினத்தால் கொதித்தெழுந்த கியோவென்த்தி தமது பக்கத்தில் நின்றிருந்த காவலனொருவரிடமிருந்த சவுக்கைப் பறித்தெடுத்து பதினாறு சவுக்கடிகளால் லூக்கா கோரிகோவை வாட்டி எடுத்தான். அதன்பின்னர் இப்போது கூறு பார்க்கலாம். உனது எதிர்காலத்தை என்று மன்னர் கர்ஜித்தான். அதற்கு லூக்கா கோரிகோ, இன்றைய இச் சந்தர்ப்பத்தில் நான் மாண்டுபோகமாட்டேன். என்றவாறு தெரிவித்தார். அடுத்த கணமே அதையும் பார்த்து விடுவோம் என்ற மன்னன் கியோவென்த்தி, தனது இடைவாளை உருவி லூக்காவைக் கொல்ல எத்தனித்தபோதும் மன்னருக்கு அருகாமையில் நின்றிருந்த அரச அதிகாரிகளின் தலையீட்டினால் அது தவிர்க்கப்பட்டது. அச் சம்பவத்தின் மூலம் எதிர்வு கூறுவோர் மத்தியில் தைரியமாக உண்மையை வெளிப்படுத்துபவர் என்ற ரீதியில் ''கோரிகோ'' முதலிடத்தை ஈட்டிக்கொண்டிருந்தார்.

சரா

(தொடரும்)

# பிரச்சினைகள் நம்மை விடாது!



ஆற்று வெள்ளத்தில் அகப்பட்ட ஒருவன் எதையாவது பிடித்து நீந்த நினைத்தான். கறுப்பாக மொசு மொசுவென்று மிதந்த ஒன்றைப் பிடித்து நீந்த ஆரம்பித்தான். அரைமணி கழித்துக் கரையில் இருந்து ஒருவன் '' டேய் அதை விடுடா. அது கரடி. உயிருக்கு ஆபத்து''என்று கத்தினான். வெள்ளத்தில் சிக்கியவன் சொன்னான். '' நான் அதை எப்பவோ விட்டாச்சு. இப்ப அதுதான் என்னை விடமாட்டேங்குது'' இதுதான் பிரச்சனைகளின் நிலையும்!

பிரச்சினைகளை நீங்கள் விட நினைத்தாலும் அவை உங்களை விடாது. நான்கு கோணங்களில் இதை அணுகலாம். ஒன்று, '' இது பிரச்சினையே அல்ல''என்கிற மனோபாவம். இரண்டு, ''இது பிரச்சினைதான் இதை ஜெயிப்பதில்தான் நமது திறமை வெளிப்படும்'' என்று எதிர்கொள்கின்ற மனோபாவம். மூன்று, '' நமக்கு முன்னும் இது இருந்தது. நமக்குப் பின்னும் இது இருக்கும்'' என்கிற யதார்த்த மனோப்பாவம். நான்கு, ''யாருக்குத்தான் இது இல்லை. எல்லோருக்கும் இருக்கிறது'' என்கிற ஆறுதல்.

(சொன்னவர்: சுகி.சிவம்)

# அன்னை தெரேசா



கல்கத்தாவின் கடைவீதிகளில் நடந்து கொண்டிருந்தார். அந்தப் பெண்மணி. ஆதரவற்ற, சமூகம் வீசியெறிந்த, பாதுகாப்பற்ற ஏழைகள், நோயாளிகள், முதியோர்களுக்கு உதவும்படி பலரிடம் கையேந்தினார். அவர்கள் பொருட்டு பாடுபடும் அந்தப் பெண்மணி,பணத் தேவைக்காகப் பல பேரிடம் கையேந்தியபோது எரிச்சலடைந்த ஒருவர் அந்தப் பெண்மணியின் கைகளில் காறி உமிழ்ந்தார். காசு தராவிட்டாலும் பரவாயில்லை. காறி உமிழலாமா?

கொஞ்சம் கூட முகத்தில் சலனமின்றி, கோபமின்றி ' ஐயா எனக்குத் தரவேண்டிய பங்கைத் தந்துவீட்டீர்கள் நன்றி. ஆனால் இன்னும் அந்த ஏழைகளுக்குத் தரவேண்டியதைத் தரவில்லையே'' என்று கண்களில் கருணை பொழியக் கேட்டார். அந்தப் பெண்மணிதான் அன்னை தெரேசா.

தெய்வீகமான அந்தப் பண்பு காறி உமிழ்ந்தவரைத் திகைக்க வைத்தது. அவர் நெஞ்சிலும் கருணை வெள்ளத்தை ஊற வைத்தது. அதுவல்லவா தொண்டு.தூய்மை.

(தகவல்: கோமதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு - அரசு பேச்சு; தமிழரை வஞ்சித்துவிட்டதாம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன், 11

''தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் அரசுடன் பேச்சு நடத்தி எடுத்துள்ள முடிவுகள் ஏமாற்றமளிக்கின்றன. தடுப்புக்காவலில் உள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களை உடன் விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நியாயப்படுத்த த.தே.கூட்டமைப்பு தவறிவிட்டது. இவர்களில் பெரும்பான்மையினர் அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றும்; அரசு கொடுத்த உறுதி மொழிகளை நம்பியும் சரணடைந்தவர்களாவர்.'' - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு -

அரசின் வேண்டுகோளையும் உறுதி மொழியையும் உதாசீனம் செய்து முகாமிலிருந்து தப்பிச் சென்றவர்கள் பெரும் எண்ணிக்கையானோர் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் நிம்மதியாக வாழ்கின்றனர். சில அரச அதிகாரிகள், உயர்மட்ட அரசியல்வாதிகளின் உதவியுடன் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இன்று அயல் நாடுகளிலும், பிறநாடுகளிலும் உள்ளூரிலும் நிம்மதியாக வாழ்கின்றனர். ஆனால், அப்பாவி மக்களின் பிள்ளைகள் இன்று தடுப்பு முகாம்களில் இருக்கின்றனர். அவர்களின் குடும்பத்தவர்கள் ஒரு வேளை உணவைக்கூட நிம்மதியாக உண்ண முடியாமலுள்ளனர்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட யாரோ ஒருவர் அநுராதபுரத்தில் புலிகளின் புலனாய்வுப் பணியில் ஈடுபட்டதற்காக பிடிபட்டார் என அரசு தரப்பால் கூறப்பட்ட கருத்திற்கு தகுந்த பதிலை கூட்டமைப்பினர் கொடுக்கத் தவறிவிட்டனர்.

போரினால் அழிவுற்ற ஓர் இலட்சத்து அறுபதினாயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசிடம் பணமில்லை எனவும், அம்மக்கள் தங்கள் விவசாயத்தின் இரு தடவை அறுவடைகள் மூலமாக தாங்களே தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள் எனவும் கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. வன்னியில் போரினால் தங்கள் வீடுகளை இழந்த மக்கள் அரசு தங்கள் வீடுகளைக் கட்டித்தரும் என்கின்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதியின் இச்செய்தியினால், அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தற்போது 1500 தொடக்கம் 2000 ஏக்கர் வரையிலான காணிகளில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அரசு அறிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. ஓர் ஏக்கருக்கு சுமார் 30 மூடை விளைச்சல் என்று கணக்கிட்டாலும், உற்பத்திச் செலவு போக. அதிலிருந்து கிடைக்கும் இலாபம் அவர்களின் வாழ்க்கைச் செலவிற்கே போதாது.

இதே வேளை, இந்த 2000 ஏக்கர் நிலம் எத்தனை குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு குடும்பத்திற்கும் இதன் மூலம் கிடைக்கும் வருமானம் என்ன? இந்நிலையில், நெல் அறுவடையின் மூலமாக வீடுகளைக் கட்டிக்கொள்வது எவ்வாறு? இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அல்லது, சாத்தியமாகக் கூடிய விடயங்களா? இதனை ஒரு கேலிக்கூத்து என்று கூறாமல் வேறெவ்வாறு கூறுவது?

உண்மையில் வீடுகளை இழந்தவர்களுக்கு அதனைக் கட்டிக்கொடுக்க வெளிநாடுகளின் உதவிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளன. அரசின் பணத்தை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. அதனை அரசால் செய்ய முடியாது என வெளிப்படையாகத் தெரிவித்தால் அதனைச் செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அனைத்துலக நாடுகளிடமும் அமைப்புகளிடமும் எனக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குத் தயாராகவுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கூட்டுக்குழு அமைக்கவிருப்பது ஆட்சேபனைக்குரியதாகும்; சகல கட்சிகளையும் உள்ளடக்கியதாக குழுவொன்றை அமைத்து இனப்பிரச்சினை தொடர்பாக பேசித் தீர்வு காணவேண்டும் என்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தாகும். - இப்படி ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# இலங்கை மனித உரிமைகள் நிலைவரம்; ஐ.நா. சபை உறுப்பு நாடுகள் கவலை

கொழும்பு, ஜூன் 11

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக சுவிற்சர்லாந்து, சுவீடன், அயர்லாந்து; ஜப்பான், நோர்வே, ஸ்பெயின், ஸ்லோவேனியா, ஸ்லோவாக்கியா, செக் குடியரசு ஆகிய அங்கத்துவ நாடுகள் பெரிதும் கவலை வெளியிட்டன.

சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக ஆணைக்குழுவின் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் விவாதம் நடத்தப்பட்டது.

அப்போது இந்நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந் தார்கள்.

**சுவிற்சர்லாந்து:-** இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த யுத்தத்தில் இடம்பெற்ற பேரழிவுகள் குறித்து சுதந்திரமான முறையில் விசாரிக்க சர்வதேச மட்டத்தில் செயற்றிட்டம் ஒன்று அமைக்கப்படுவதை சுவிற்சர்லாந்து வரவேற்கிறது. இலங்கை சர்வதேசத்தின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**சுவீடன்:-** இலங்கை,மியன் மார்,சூடான், கியூபா ஆகிய நாடுகளில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமைகள் மீதான துஷ்பிரயோகங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**அயர்லாந்து:-** இலங்கையின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.குறிப்பாக யுத்தத்தால் இடம்பெயர்ந்து முகாம்களில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அகதிகள் விடயத்தில் மிகவும் கரிசனையாக உள்ளோம். இந்த அகதிகள் இயலுமான விரைவில் உடனடியாக மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில முயற்சிகள் இலங்கையில் ஆரம்பமாகி உள்ளன.அத்துடன் தமிழர் பிரச்சினையின் ஆரம்பத்தைக் கண்டுபிடிப்பதற்கும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.இலங்கையில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவும் சில முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஜப்பான்:-** நிலைமையைச் சீராக்க இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளில் வெளிப்படைத் தன்மைகள் அவசியம்.இந்த விசாரணைகள் சர்வதேச தராதரத்துக்கு அமைவாக இடம் பெறுதல் வேண்டும்.தேசிய நல்லிணக் கத்தை உருவாக்கும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கை அரசுக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.

**நோர்வே:-** கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த யுத்தத்தில் இலங்கையில் மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டன என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுதந்திரமான, நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம். இந்த யுத்தக் குற்ற விசாரணைகளை ஆதரிக்கிறோம். (ஒ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி புஸ்பராணி பஞ்சாட்சரம்



திருமதி குமுதினி லோகநாதன்



திருமதி சுஸ்பாமதி கனகலிங்கம்

யா/ வட்டு மத்திய கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரிய சேவையில் இருந்து அதிபர் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் இவர்கள் மென் மேலும் உயர்வு பெற அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்,
**வட்டு. மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.**


## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 514
சீட்டிழுப்பு திகதி: 09.06.2010

வெற்றி எழுத்து: C வெற்றி இலக்கங்கள்: 01 24 36 38

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 15,224,500.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 203 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 399 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10237 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5949 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 147924 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23674 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,244,850.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.15,383,689.60



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 12.06.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும் [25/= ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளது]

★ ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ ஜென்சி பாம், 1ஆம் கட்டை, பருத்தித்துறை.
★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப் புளியடி..

தொ.பே:- 0212222867, 0776090926, 0213213952.


## அந்தியேட்டி அழைப்பு



அமரர்
**ஆறுமுகம் கோபால்**

28.04.2010 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் கோபால் அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் மதியபோசன நிகழ்வும் இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

''பயத்தோலை''
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

மனைவி, பிள்ளைகள்.

[99262]

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.05.2010 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**இராசரத்தினம் வினாயகமூர்த்தி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.06.2010 புதன்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வீட்டுக்கிருத்திய வைபவம் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

47, கோவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

[99269]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 ★ 05 ★ 1951



உதிர்வு 23 ★ 05 ★ 2009

**சின்னத்துரை சதாசிவம்**
திதி: சதுர்த்தசி

அன்பும், பாசமும் கலந்து குடும்பத்தைக் கண்ணாய்க் காத்த எம் அன்புத் தீபத்தை இழந்து ஆண்டு ஒன்று ஆனாலும் எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் என்றும் அழியாது! எம் இதயங்களில் வாழும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

519, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(99310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தண்ணீர் கிணறுகளைத் தேடி நீண்ட தூரம் அலையும் வன்னி மக்கள்

## போதிய குடிதண்ணீர் கிடைக்காமையால் அவதி

கிளிநொச்சி,ஜூன்11

வன்னியில் மீளக்குடியேறிய மக்கள் போதியளவு குடிதண்ணீர் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள் எனவும் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படும் குடிதண்ணீர் பாவனைக்குப் போதாமையினால் இவர்கள் நல்ல தண்ணீர் கிணற்றைத்தேடி அலைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் மீள் குடியேற்றம் தற்போது வேகமாக இடம் பெற்று வருகின்றது. அங்குள்ள கிணறுகளிலுள்ள நீர் பாவனைக்கு ஏற்றவாறு இல்லாததினால் , பாதுகாப்புப் படையினர் வீடு வீடாகச் சென்று பவுசர் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் வழங்கி வருகிறார்கள்.

அங்குள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகள் ஒரு வருடத்துக்கு மேலாகப் பயன்படுத்தப்படவில்லை. போர்க்காலச் சூழ்நிலையினாலும் மாசடைந்து விட்டன. பிரதேச சபையினால் ஒரு சில கிணறுகள் இறைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கிணறுகளை இறைப்பதில் மக்கள் தற்பொழுது ஈடுபட்டுள்ளனர். அனைத்துக் கிணறுகளும் ஆழம் கூடியதாக இருப்பதினால் ஒரு கிணற்றை இறைத்துக் கொடுப்பதற்கு 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 4 ஆயிரம் ரூபா வரை அறவிடப்படுகின்றது. கிணறு இறைப்பதற்கான கூலி அதிகரித்துள்ளதால் மக்கள் தங்கள் கிணறுகளை இறைக்க முடியாமல் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பொது நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் கிணறுகளை இலவசமாக இறைத்துக் கொடுத்து குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளார்கள். (50-405)

# செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்11

கிளிநொச்சி கல்வி வலய அதிபர்களுக்கான ஈ.எஸ்.டி.எவ்.பி., ஈ.எஸ்.டி.பி, Qual ity input தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கேட்டுள்ளார். (50-9)

# சர்வோதய சிரமதானச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் மன்னாரில்

மன்னார்,ஜூன்11

சர்வோதய சிரமதானச் சங்கத்தில் வருடாந்த ஒன்றுகூடல் இம்முறை மன்னாரில் நடைபெறுகின்றது. இதில் கலந்து கொள்ள நாடுபூராவும் இருந்து சுமார் 700 பேராளர்கள் வரை வருகை தரவுள்ளனர்.

சர்வோதைய மன்னார் மாவட்ட நிலையத்தால் ஒழுங்குசெய்துள்ள தேசிய தேசோதய நிகழ்ச்சித் திட் டத்தின் கீழ் இன்று வெள் ளிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை முழு நாள் நிகழ்வாக நடைபெறவுள் ளது. மன்னார் புனித சவேரியார் ஆண் கள் தேசியக் கல்லூரியில் மூன்று நாள் நிகழ்விலும் சர்வோதயத்தின் தலைவர் தேசமான்ய, கலாநிதி ஆரியரத்ன கலந்துகொள்வார் என மன்னார் இணைப்பாளர் எஸ். யுகேந்திரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் முதன் முறையாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துள்ளதாக ஊடக அனுசரணை வழங்கும். மன்னார் தகவல் தொடர்பாடலுக்கான ஊடாக வலைப்பின்னல் நிலையம் தெரிவிக்கின்றது. (50-80)

# மன்னார் குழாய் நீரில் உவர்ப்புத் தன்மை

மன்னார்,ஜூன்11

மன்னாரில் நிலவும் கடும் வரட்சி காரணமாககுளம், குட்டைகள், ஓடைகள் என்பன வற்றி வறண்டுவிட்டன. கால்நடைகள் நீர்தேடி அலைந்துதிரிகின்றன.

இந்த நிலையில் சமீபநாள்களாக மன்னார் நகருக்கு வழங்கப்பட்டுவரும் குழாய் நீர் உவர்ப்புக் கலந்துகாணப்படுகின்றது. குடிக்க எவ்வித சுவையும் இன்மையால் அனேகமான குடியிருப்பாளர்கள் போத்தலில் அடைத்த நீரையே வாங்கிப் பாவிக்கின்றனர்.

மன்னார் நகரம், வங்காலை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களுக்கு குழாய் நீர் வழங்கப்பட்டு வருகின்றது. முருங்கனில் இருந்து ஆழ்கிணறுகளில் பெறப்பட்ட நீரே இங்கு வழங்கப்படுகின்றது. தற்போது இங்கு கடும் வரட்சி நிலவுவதால் நீர் ஊற்றுக்களில் குறைவான நீரே பெறப்படுகின்றது. இதன் விளைவாக மேலதிக தேவைக்கு உவர் நீர் கலக்கப்படுவதாக மன்னார் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50-80)

# செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளை கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில்

செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளை கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜீத் நிவாட் கப்ராலினால் திறந்து வைக்கப்பட்டது.

அன்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமான திறப்புவிழா நிகழ்வில் முன்னதாக விருந்தினர்கள் மங்கள வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர். வங்கிக் கிளையை மத்திய வங்கியின் ஆளுநர் நாடா வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து அவரும் ஏனைய விருந்தினர்களும் வங்கியின் சாதாரண வைப்பு, சிறுவர் வைப்பு, கடன் வழங்கல், தங்கநகை அடகு சேவை என்பவற்றை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து செலான் வங்கியின் கிளிநொச்சி முகாமையாளர் எஸ்.சுதீஸ் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து மத்திய வங்கியின் ஆளுநர் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் செலான் வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரங்கொட, நிறைவேற்றுக்குழுப் பணிப்பாளர் எஸ்.நடராஜா, பொது முகாமையாளர் அஜித் கஸ்கல், உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.நிரஞ்சன், பிராந்திய முகாமையாளர் சி.சிவகரன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மற்றும் படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (50-405)




# இராமநாதபுரம் உப அஞ்சல் அலுவலகம் தற்காலிகமாகத் தனியார் வீடொன்றில்

கிளிநொச்சி,ஜூன்11

இராமநாதபுரம் உப அஞ்சல் அலுவலகம் தற்காலிகமாக இராமநாதபுரம் ஆறு சந்திக்கு அருகில் 519ஆம் இலக்க தனியார் வீட்டில் இயங்கிவருகின்றது.

உபதபாலகக் கட்டடத்தின் நிரந்தரக் கட்டடம் யுத்தத்தின் போது சேதமடைந்து உள்ளதுடன், அவ்வளாகத்தின் இருபுறமும் இராணுவத்தின் மண் அணைகள் அகற்றப்படாமலும் உள்ளன.

இந்த நிரந்தரக் கட்டடத்தினை திருத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மே 24ஆம் திகதி வவுனியா தபால் அத்தியட்சகரும் கடந்த ஜூன் முதலாம் திகதி பொறியியலாளர் குழுவினரும் நேரில் வந்து நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளனர். (50-405)

# வடக்கின் துரித மீட்சித் திட்ட அறிமுக நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஜூன்11

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டுவரும் வடக்கின் துரித மீட்சித் திட்ட அறிமுக நிகழ்வு கடந்த 8ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதில் திட்டத்தின் சமூக வலுவூட்டுநர்களான நா.பூலோகராசா, ஞா.புண்ணியசீலன் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கு இத்திட்டம் தொடர்பாக அறிமுகம் செய்துவைத்தனர்.

இத்திட்டமானது மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பிரிவான 'காசுக்கான வேலை' என்னும் திட்டமே அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி ஒவ்வொரு குடும்பத்தவரும் தமது வீட்டு வளவினைத் துப்புரவு செய்வதற்கான 40 நாள்களும், தமது கிராமத்திலுள்ள பொது இடங்களைத் துப்புரவு செய்வதற்காக 50 நாள்களும் வேலைசெய்தல் வேண்டும். இவ்வேலைகளுக்காக நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் 45 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இத்திட்டம் தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதோடு மக்களின் சந்தேகங்களும் தீர்க்கப்பட்டன.

ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, பல்லவாராயன் கட்டு, முழங்காவில், கிராஞ்சி, பொன்னாவெளி, இரணை மாதா நகர் ஆகிய கிராமங்களில் இத்திட்டம் முடிவடைந்துள்ளதுடன் கரியாலை நாகபடுவான், நாச்சிக்குடா, ஜெயந்திநகர், உருத்திரபுரம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. (50-405)

# கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் கொமர்ஷல் வங்கியின் கிளை திறப்பு

கிளிநொச்சி,ஜூன்11

கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சிக் கிளை கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட விருந்தினர்கள் அனைவரும் மங்கள வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர்.

கொமர்ஷல் வங்கியின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் எஸ்.சஞ்சீவ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித்த குணரத்ன, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தொடர்ந்து மத்திய வங்கியின் ஆளுநர் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைத்ததோடு வங்கி நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், தலைமைப்பீட உதவி அரச அதிபர் ப.ஜெயராணி, கரைச்சி பிரதேச சபையின் சிறப்பு ஆணையாளர் பொன் நித்தியானந்தன், கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (50-405)






கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியங்களின் அலுவலகங்கள் அண்மையில் கிளிநொச்சியிலும், மல்லாவியிலும் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கை வணிக, கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் கோசல விக்கிரமநாயக்க, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், படைத் தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.சி.விக்கிரமசிங்க ஆகியோர் திறந்துவைக்கப்பட்ட கிளிநொச்சி அலுவலகத்துக்கு முன்னால் நிற்பதையும், மல்லாவி அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.01.1992

✱தைப்பொங்கலுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அமைச்சர் தொண்டமான் உறுதியாக இருப்பதாகத் தெரிவிப்பு.

✱ ஜனாதிபதிப் பதவியை ஏற்ற மூன்றாவது ஆண்டின் நிறைவையொட்டி ஜனாதிபதி பிரேமதாச வழங்கும் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் 500 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என அறிவிப்பு.

02.01.1992

✱இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசு பௌத்த மகா சங்கத்தின் ஆலோசனைப்படியே நடந்து வருவதாக கண்டி மல்வத்த மகாநாயக்க தேரர் தெரிவிப்பு.

✱மலையகத்தில் 'மலைநாடு' ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையில் அமைச்சர் தொண்டமான் ஈடுபட்டிருப்பதாக இலங்கை பௌத்த காங்கிரஸ் தெரிவிப்பு.

03.01.1992

✱வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் நம்பிக்கை நிறைவேறுவது சாத்தியமில்லை என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

✱இனப்பிரச்சினைக்குத் திருப்தியான தீர்வு காணப்படும் வரை ஆயுதங்களை கைவிடப்போவதில்லை என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர். என தென்னிலங்கைத் தூதுக் குழுத் தலைவர் தெரிவிப்பு.

04.01.1992

✱இராவுச் செலவுகளைக் குறைத்தால் மட்டுமே வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு இனிமேல் அபிவிருத்திக்கென நிதி உதவிகள் வழங்கவுள்ளதாக அபிவிருத்திக்கு உதவும் குழு இலங்கைக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱அமைச்சர் தொண்டமானை விடுதலைப் புலிகள் வலிந்து பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

05.01.1992

✱கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 225 தமிழ்க் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அரசுக்கு முன்னறிவித்தல் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱யாழ்ப்பாணத்தைத் தாக்கினால் கண்டனக் குரல்கள் எழும் என்பதால் அவதானமாக எதையும் செய்ய வேண்டியுள்ளது என உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிப்பு.

06.01.1992

✱ இலங்கைக்கு உதவும் நாடுகளின் தூதர்கள் கொழும்பில் கூடி மனித உரிமை பேணப்படும் விவகாரம் மற்றும் வடக்கு கிழக்கில் யுத்தநிலை என்பவை குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ராஜீவ்காந்தி கொலை தொடர்பான விசாரணைகளில் தமக்கு உதவுமாறு இந்திய அரசு சிங்கப்பூரைக் கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.

07.01.1992

✱வடக்கில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு ஆயத்தம் ஆகிவரும் இலங்கை அரசின் போக்குக்கு சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் ஆட்சேபம் தெரி விப்பு.

✱இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச் சுவார்த்தை மூலம் தீர்வு காண உதவுவதற்கு இந்தியா தயாராகவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

08.01.1992

✱இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்வொன்றை எட்ட இயலும் எனவும் சமஷ்டிய ஒத்த அமைப்பொன்றை உருவாக்க கருத்திணக்கம் காண இயலும் எனவும் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தெரிவிப்பு.

✱இலங்கை இனப்பிரச்சினைக்கு வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு அப்பகுதிக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என இந்திய அரசு கருத்துத் தெரிவிப்பு.

09.01.1992

✱அரசாங்கமும் எதிர்கட்சியும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து வரும் பொறுப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும் என தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் செல்லச்சாமி தெரிவிப்பு.

✱ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஜப்பானியப் பிரதமர் அளித்த விருந்துபசாரத்தின் போது மயங்கி விழுந்ததாகத் தெரிவிப்பு.

10.01.1992

✱இலங்கைக்கான இராணுவ தளபாட விநியோகத்தை பிரிட்டன் மீண்டும் ஆரம்பித்துள்ளதாக இலங்கை அரசு தெரிவிப்பு.

✱இலங்கைக்கான இராணுவத் தளபாட விநியோகத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை பிரிட்டன் இன்னமும் நீக்கவில்லை என பிரிட்டிஷ் அரசு தெரிவிப்பு.

11.01.1992

✱காரைநகர், பொன்னாலைப் பாலத்தில் அமைந்திருந்த இராணுவ காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 10 படையினர் உயிரிழந்த தாகத் தெரிவிப்பு.

✱பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றிடமிருந்து இலங்கை அரசு வாங்கிய 'அவ்ரோ' பயணிகள் விமானம் ஒன்றையே இலங்கை அரசு குண்டுவீச்சுக்குப் பயன்படுத்துவதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

12.01.1992

✱இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளுக்கு எதிராக தெற்கில் சிங்கள தேச பாதுகாவலர் அமைப்பு பிரச்சார யுத்தத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நிதி உதவி வழங்கியதான சந்தேகத்தின் பேரில் கொழும்பில் உள்ள ஏழு பிரபல வர்த்தகர்கள் புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

13.01.1992

✱ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்க ஆகியோரின் முன்னைய நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு ஆலோசனை.

✱இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது யோசனைகளை மல்வத்த பீடாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருப்பது பொறுப்பற்ற ஒரு செயலாகும் என மல்வத்த பீடாதிபதி கண்டனம் தெரிவிப்பு.

14.01.1992

✱ தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை இந்திய மற்றும் இலங்கை அரசுகள் சேர்ந்து இங்கு கூட்டி வருவது குறித்து சர்வதேச அகதிகள் அமைப்புகள் ஆட்சேபம் தெரிவிப்பு.

✱ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துதல் தொடர்பான உடன்பாடு எதுவும் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் செய்து கொள்ளப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

15.01.1992

✱யாழ். குடாநாட்டில் வாழும் பொது மக்கள் மீதும், அவர்களது குடியிருப்புக்கள் மீதும் ஷெல் தாக்குதல் நடத்துவதை இராணுவத்தினர் கைவிட வேண்டும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு பலாலி இராணுவ முகாம் அதிகாரிகளை நேரில் சந்தித்துக் கோரவுள்ளதாகத் தெரிவிப்பு.

✱தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்குமாறு யாழ்.நகரில் நேற்று பேரணி ஒன்று நடத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.



மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசாவின் 80ஆவது அகவை நிறைவு திருமணப் பொன்விழாவும் முத்துவிழாவும் அவரது இல்லத் தில் நடைபெற்றபோது முதுபெரும்புலவர் கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம் தம்பதியினரைப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: எஸ்.கதிரவேலு)*

# மாகாண மட்டத் தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு,ஜூன் 11

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்ட கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம் பெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

பிரிவு 5 திறனாய்வுப் போட்டி

இ.சுயந்தன் (புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா வடக்கு), வி.மேகலா (ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பம் மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), றொ.இ.ஜெயராஜ் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி - மன்னார்).

பிரிவு 4 குறு நாடகம்

து.சங்கீர்த்னா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி - யாழ்ப்பாணம்), அ.அனந்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), செ.டேசிகா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாசாலை- வவுனியா வடக்கு)

பிரிவு 5

அ.கோகுலன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்), கு.நிதர்சனா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி - வவுனியா தெற்கு), ச.நிலானி (மல்லாவி மத்திய கல்லூரி - (முல்லைத்தீவு)

பிரிவு 4 கவிதை ஆக்கம்

சி.பிரவீனா( புனித திரேசா பெண்கள் கல்லூரி- கிளிநொச்சி),கு.ரஜிந்தினி (பூம்புகார் கண்ணகி வித்தியாசாலை- வவுனியா வடக்கு), செ.சுகாங்கி (வட. விக்கினேஸ்வராக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

பிரிவு 5

க.ரமாப்பிரியா (உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்- மன்னார்), ஜெ.ஜெனார்த்தனன் (யோகபுரம் மகாவித்தியாலயம் - (முல்லைத்தீவு), ஆ.கனிஷ்ரா (மானிப்பாய் மகளிர் கல்லூரி- யாழ்ப்பாணம்)

பிரிவு 4 சிறுகதை ஆக்கம்

வி.திவாகரன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - யாழ்ப்பாணம்), பா.உஷாந்தினி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி - (முல்லைத்தீவு), ப.சியாந்தனா (தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - மன்னார்)

பிரிவு 5

இ.பிரியங்கா (வட.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை -யாழ்ப்பாணம்), ஞா.அனுசியா (அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் - மன்னார்), கா.கிருஷாந்தினி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி- வவுனியா தெற்கு)

பிரிவு 1 வாசிப்பு

த.சாம்பவி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் - வவுனியா தெற்கு), வெ.மேரிதிரேஸ் லெம்பேட்(புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயம் - மன்னார்), க.தேனுகா( அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் -யாழ்ப்பாணம்)

பிரிவு 2

ச.டிலக்ஷனி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்- வவுனியா தெற்கு), சி.டிலக்சனா (மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை - யாழ்ப்பாணம்), பொ. ஆன் நித்தியா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி - மன்னார்)

*(வளரும்)* (201-86)

## தரம் 10 மாணவர்களுக்கான கேத்திர கணித முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

தரம் 10 மாணவர்களுக்கான கேத்திர கணித முகாம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இந்தக் கணித முகாமில் பங்குபற் றும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:

நெல்லியடி ம.ம. வித்தி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி, அல்வாய் சின்னத் தம்பி வித்தி., கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தி., கரணவாய் ம.வி., கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, திரு இருதயக் கல்லூரி, கட்டைவேலி யார்க்கரு வித்தி., கரணவாய் பொன்னம்பலம் வித்தி.

பாடசாலையில் தயாரிக்கப்பட்ட கேத்திர கணித உபகரணத் தொகுதிகளுடன் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுடனும் பொறுப்பான கணிதபாட ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (201)

வாடிய இதயத்தில் இருந்து ஈரவிழிகளுடன் சொரியும்

**கண்ணீர்ப் பூக்கள்**



அமரர்

**பாலசிங்கம் பிரபாகரன்**

*(பாடசாலை நூலகப் பொறுப்பாசிரியர்)*

எமது பாடசாலையின் நூலகப் பொறுப்பாசிரியராகக்
கடமையாற்றும் பாலசிங்கம் பிரபாகரன் அவர்கள்
உடல் உபாதைகளைத் தாங்கி கல்லூரியின் வளர்ச்சிக்காய்
அரும்பணியாற்றிவரும் வேளையில்
உடல் சிகிச்சையின்போது
அசதியாக காலம் எய்திய செய்தி கேட்டு
நாம் ஆறாத்துயர் அடைகின்றோம்.
அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்திற்கு
ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சிதம்பராக் கல்லூரி.

(96633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வட மாகாண மாவட்டக் கல்வி வலய அணிகளுக்கு இடையே நடத்திவரும் வலைப் பந்தாட்டப் போட்டிகள் நேற்று உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின.

நிகழ்வின் ஆரம்பத்தில் இறைவணக்கம் இடம்பெறுவதையும்- விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துவதையும்-

வடமாகாணக் கல்வித் திணைக்கள விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பான ஆட்டம்; உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் வென்று அசத்தியது

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழா உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துச் சென்றது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகிய ஐந்தாவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீரர் ஒருவர் அடித்த பந்து அவர்களின் கோல் கம்பத்திற்குள் சென்றதனால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு ஒரு கோல் கிடைத்தது.

இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக் கொண்ட போதிலும் முதல்பாதி ஆட்டத்தில் மேலும் கோல்கள் எதுவும் பெறப்படாத நிலையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 1:0 எனும் கோல் கணக்கில் முன்னிலை வகித்த நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் கோல்களைப் பெற்று வெற்றியைத் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற வேகத்துடன் இரு அணிகளும் மோதின.

இருந்த போதிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தினால் கோல் பெறப்பட்டது. இரண் டாம் பாதி ஆட்டத்தில் மேலும் ஒரு கோலி னைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடி வுக்கு வந்தது.

இதனால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 2:0 எனும் கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

(6-23-86)

## வடமாகாண கல்வி வலய விளையாட்டு விழா

வடமாகாண கல்வி மாவட்ட வலயங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் இருபாலருக்குமான உதை பந்தாட்டம், கிரிக்கெட் ( மென்பந்து), கரப் பந்தாட்டம், ஹொக்கி, கூடைப்பந்தாட்டம், கபடி, மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(6-86)

# நூற்றாண்டு விழா 'ருவென்ரி-20' கிரிக் கெட்; மூன்றாவது இடம் கொக்குவில் இந்துவுக்கு!

வலி.வடக்கு, ஜூன்11

கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழா 'ருவென்ரி-20' சுற்றுப்போட்டியின் மூன்றாவது இடத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற 'ருவெனி-20' துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப்பெற்றது.

பென்ஜோர்ஜ் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 29 ஓட்டங்களையும் பிரியலக்சன் 24 ஓட்டங்களையும் சீராளன் 20 ஓட்டங்களையும் பெண்டில்கரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 11 ஓட்டங்கள் கிடைத்தன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய பிரதீஸ் 3.4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சுஜீதரன் 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பங்குஜன் 3 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

127 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது கொக்குவில் இந்துக் கல்லூரி, 18 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 127 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் உத்தமன் ஆட்டம் இழக்காது 6 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 42 ஓட்டங்களைப் பெற்றார். பங்குஜன் 5 பௌண்டறிகளுடன் 34 ஓட்டங்களையும் பிரதீஸ் 16 ஓட்டங்களையும் இராகுலன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 15 ஓட்டங்கள் கிடைத்தன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்து வீசிய பெண்டில்கரன் 3 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சுதன் 4 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

(6-86)

# சர்வதேச சதுரங்கப் போட்டியில் யாழ்.பல்கலை மாணவி சாதனை



யாழ்ப்பாணம், ஜூன் 11

கண்டியில் நடைபெற்ற 'கண்டி சர்வதேச தரப்படுத்தல் சதுரங்கச் சுற்றுப்போட்டி-2010' இல் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவியான வித்தியாராணி சிவகுருநாதன் பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுச் சாதனை படைத்தார்.

இப்போட்டியில் இருபாலாருக்குமிடையே நடைபெற்ற திறந்த போட்டியில் 23ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இச்சுற்றுப் போட்டியை 'ஸ்கெயார்ஸ் சர்வதேச சதுரங்க அக்கடமியும் இலங்கைச் சதுரங்க சம்மேளனமும் இணைந்து நடத்தியிருந்தன.

இதேவேளை இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் பெண்களுக்கான சதுரங்க அணியின் தலைவராக 2009ஆம் ஆண்டு இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

# மாவட்ட கல்வி வலய வலைப்பந்தாட்டம்; உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின

வலி.வடக்கு, ஜூன் 11

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாண மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெறும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நேற்று காலை உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், வட மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல் விப் பணிப்பாளர் சத்தியபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகள் 15, 17, 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெறுகின்றன. இப்போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அணிகள் கலந்துகொண்டுள்ளன.

வட மாகாணத்தின் மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இப்போட்டிகளில் முதல் தடவையாக மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6-86)






ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 40ஆவது ஆண்டு அரசியல் நிறைவு வாழ்வை முன்னிட்டு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் கைதடி தெற்கு சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ப.கிரிதரன் உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லியில் இருப்பவர்களே தமிழர்களின் முதல் எதிரிகள்!

## முன்னாள் எம்.பி. இரா.செழியன் குற்றச்சாட்டு

சென்னை,ஜூன் 11

நமது எதிரி மஹிந்த ராஜபக்ஷ அல்லர். புதுடில்லியில் இருப்பவர்கள்தான் தமிழர்களின் முதல் எதிரிகள் - என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.செழியன் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் பாவை சந்திரன் தினமணி நாளிதழில் 178 நாள்கள் தொடர்ந்து எழுதிய 'ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னையில் உள்ள சோவியத் கலாசார மையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்குத் தலைமை ஏற்றுப் பேசிய இரா.செழியன் கூறியவை வருமாறு -

ஈழத் தமிழர்களின் சோக சரித்திரத்தின் ஒரு பகுதியே இந்நூல். தமிழர்களின் வரலாறு தொடர் சோகமாக இருக்கிறது. நாம் எழுச்சி பெற்ற வரலாறு மறந்து விட்டது - மறக்கடிக்கப்பட்டு விட்டது.

இத்தொடர் பற்றி இந்த நூலின் முன்னுரையில் தினமணி ஆசிரியர் வைத்தியநாதன், 6 மாதங்களுக்கு முன்பே இத்தொடர் வந்திருந்தால், ஒரு வேளை மிகப்பெரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமோ என்னவோ என்கின்ற வருத்தம் என் கடைசிக் காலம் வரை தொடரும் என்று எழுதியிருந்தார். இந்த வருத்தம் தேவையற்றது.

6 மாதம் அல்ல, 6 ஆண்டுகளுக்கு முன்பே வந்திருந்தாலும் மாற்றம் ஏற்பட்டிருக்காது. ஆள்பவர்களின் மனம் மாறியிருக்காது. தமிழர்களைக் காப்பாற்ற தமிழர்களால் மட்டுமே முடியும். மற்றவர்கள் யாரும் அதற்காக முன்வர மாட்டார்கள்.

1983 இல் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற நூலகம் எரிக்கப்பட்டபோது அது குறித்து நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்புக் கிடைத்தது. நான் பேசியதை அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். 1960 இல் நேரு பிரதமராக இருந்தபோது தென் ஆபிரிக்காவில் நடந்த இனப்படுகொலை குறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டதை சுட்டிக்காட்டி அதுபோல, இலங்கைத் தமிழர்களுக்காகவும் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்றேன்.

இனப்படுகொலைக்கு எதிராக நேரு குரல் கொடுத்தார். அவருக்கு பிறகு எல்லாம் மாறிவிட்டது.

டில்லியில் மஹிந்த ராஜபக்ஷ ராஜவலம் வந்துகொண்டிருக்கிறார். நமது எதிரி மஹிந்த ராஜபக்ஷ அல்லர். டில்லியில் இருப்பவர்கள்தான் தமிழர்களின் முதல் எதிரிகள். சீனா, பாகிஸ்தானோடு சேர்ந்து கொண்டு இந்தியாவும் இலங்கைக்கு உதவுகிறது.

கட்டடங்கள், அரண்மனைகள் அழிந்தால்கூட பரவாயில்லை. ஒரு இனம், மொழி அழிந்தால் நூற்றாண்டுகள் ஆனாலும் அதனை மீட்க முடியாது. இலங்கையில் ஓர் இனம் அழிக்கப்பட்டு வருகிறது.

இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பில் தீர் மானம் கொண்டுவந்தபோது இலங்கைக்கு ஆதரவாக சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் இணைந்து இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. இது குறித்து ஆதாரங்களுடன் 200 இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நான் கடிதம் அனுப்பினேன். ஆனாலும் யாரும் அதுகுறித்துப் பேசவில்லை.

இலங்கையில் இனப்படுகொலை நடப்பது குறித்து டில்லியில் இருப்பவர்கள் மெத்தனமாக இருப்பது ஏன் என்று ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் தனது வேதனையைப் பதிவு செய்துள்ளார். அவருக்கு இருந்த உணர்வு தமிழகத்தில் யாருக்கும் இல்லை.

இலங்கைப் பிரச்சினைக்கு மாநில அரசால் தீர்வு காண முடியாது. டில்லிதான் முயற்சி எடுக்க வேண்டும். இப்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு நாட்டைப் பற்றிய கவலை இல்லை. அவர்கள் இந்தியாவை விற்றாலும் ஆச்சரியம் இல்லை.

அதனைப் பங்குபோட பலர் தயாராக உள்ளனர். யாரை எதிர்ப்பது யாரை எதிர்த்து போராடுவது என்றே புரியவில்லை. மஹிந்த ராஜபக்ஷ டில்லியில் ராஜவலம் வருகிறார். இங்கே பல ராஜபக்ஷக்கள் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அகற்றினால்தான் இந்தியா வளரும் - பிரச்சினைகள் தீரும்.

- இப்படி இரா.செழியன் கூறினார்.

# ஈழத் தமிழருக்கு அதிகாரப் பகிர்வு அளிக்க வேண்டும் என்கிறது காங்.

டில்லி, ஜூன் 11

இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அங்குள்ள தமிழர்களுக்கு அதிகாரத்தில் பங்களிக்க வேண்டும் - என்று காங்கிரஸ் கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் எம்.பி. நேற்றுமுன்தினம் டில்லி யில் பேட்டியளித்தபோது இக்கருத்தைத் தெரிவித்தார்.

அப்போது, பிரதமர் மன்மோகன்சிங்குடன், இலங்கை ஜனாதிபதி நடத்திய பேச்சுக் குறித்தும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் செய்தியாளகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்து அவர் கூறியவை வருமாறு -


மஹிந்த ராஜபக்ஷவுடன் பிரதமர் மன்மோகன் சிங் நடத்திய பேச்சின்போது போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் அவதியுறும் தமிழர்கள் மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் குடியேற விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான அனைத்து நிவாரண உதவிகளும் உடனடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி னார்.

இலங்கையில் நீண்ட காலமாக நிலவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காணப்பட வேண்டும். தமிழர்களுக்கு அதிகாரத்தில் பங்களிக்க வேண்டும். இவற்றை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# ஈழத்தமிழருக்கு மத்திய அரசு துரோகம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் தெரிவிப்பு



புதுடில்லி, ஜூன் 11

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்த இந்திய அரசு தவறி விட்டது. இதன் மூலம் தமிழர்களுக்கு மத்திய அரசு துரோகம் செய்துள்ளது. - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா எம்.பி. டில்லியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூறியவை வருமாறு -

பல்வேறு அரசியல் காரணங்களுக்காக இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய அரசு சிவப்புக் கம்பள வரவேற்பளித்துள்ளது.

ஆனால், அங்கு பல்வேறு இன்னல்களில் சிக்கித் தவிக்கும் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண இந்திய அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியா, இலங்கை இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. ஆனால், இலங்கைத் தமிழர்களுக்காக உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

அதுபோல், தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்துவது குறித்தும் பேச்சு நடத்தப்படவில்லை. இது, தமிழர்களுக்கு மத்திய அரசு இழைக்கும் மற்றொரு துரோகம்.

- இப்படி டி.ராஜா தெரிவித்தார்.

# ஈழத்தமிழர் படுகொலையை ஒப்பிடுகையில் போபால் வழக்கின் தீர்ப்பு ஆச்சரியமில்லை

## கம்யூனிஸ்ட் பாண்டியன் தெரிவிப்பு



திருப்பூர், ஜூன் 11

இலங்கை இனப்படுகொலையை ஒப்பிடுகையில் போபால் விஷவாயு வழக்கின் தீர்ப்பு ஆச்சரியம் அளிப்பதாக இல்லை - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அவர் கூறியவை வருமாறு -

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த போர் முடிவுற்றது என இலங்கை அரசு அறிவித்து ஓர் ஆண்டுக்கு மேலான நிலையில், போருக்குச் சம்பந்தமில்லாத தமிழ் மக்களை முகாம்களில் அடைத்து சித்திரவதை செய்கின்றனர். போர் முடிந்த கடந்த 2009 மே மாதம் முகாம்களில் நான்கரை லட்சம் தமிழர்கள் இருக்கின்றனர் என இலங்கை அரசு தெரிவித்திருந்தது. ஆனால், தற்போது அம்முகாம்களில் 40 ஆயிரம் மக்களே இருக்கின்றனர் என வெளிவிவகாரத் துறையும், முதல்வர் கருணாநிதியின் கடிதத்தில் 80 ஆயிரம் மக்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியெனில் மீதமுள்ள 4 லட்சத்து 10 ஆயிரம் மக்களின் நிலை குறித்தும், அவர்கள் எங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும்.

இதுதொடர்பாக, சுதந்திரமாகச் செய்தி சேகரித்து வெளியிட தமிழகப் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் அனுமதிக்கப்பட வேண்டும். பிரான்ஸ் மற்றும் கனடா நாட்டு அரசு அமைத்துள்ள குழு விசாரணையில், அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மத்திய அரசு ரூபா 1,900 கோடி நிதியுதவி செய்திருப்பதற்கான காரணம் புரியவில்லை. குண்டுகள் போட்டு தமிழ் மக்களின் குடியிருப்புகளை அழித்த இலங்கை அரசே அவ்வீடுகளை கட்டித்தர வேண்டும்.

அதைவிடுத்து இந்திய அரசு நிதி ஒதுக்கி வீடுகள் கட்டுவது இப்படுகொலையில் இந்திய அரசுக்கும் தொடர்புள்ளதா எனச் சந்தேகிக்க வைக்கிறது.

இந்நடவடிக்கைகளை பார்க்கையில் போபால் விஷவாயு தொடர்பான தீர்ப்பும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இல்லை.

அன்னிய நாட்டு நிறுவனத்தின் கவனக்குறைவால் விஷவாயு வெளியேறி ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு 26 ஆண்டுகளான நிலையில், இதில் தொடர்புடையவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறை என்பது மனித உயிர், உரிமைகளை மலிவாக எண்ணுவதையே காட்டுகிறது. உடனடியாக மத்திய அரசு மேல்முறையீடு செய்வதுடன், இவ்வழக்கில் முதல் குற்றவாளியான வாரன் அன்டர்ஸனை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்காவிடம் அறிவுறுத்த வேண்டும்.

இதேபோல், இந்திய அரசு உத்தேசித்துள்ள அமெரிக்க அணு ஆலைகளில் விபத்து ஏற்பட்டால் அமெரிக்கா ரூபா 200 கோடி மட்டும் இழப்பீடு தரும் என்றும் மீதத்தை இந்திய அரசே ஏற்றுக்கொள்ளும் என ஒப்பந்தம் செய்துள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக எதிர்க்கிறது.

- இப்படி அவர் தெரிவித்தார். (ர)

**இந்தியச் செய்திகள்**

# ஈழப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் 'ராம ராவணன்' படத்தை அனுமதியோம்!

## அக்கினிப்புயல் சீமான் எதிர்ப்பு

சென்னை,ஜூன்11

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ள 'ராம ராவணன்' என்ற மலையாளப் படத்துக்கு இயக்குநரும், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான சீமான் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

'ராம ராவணன்' என்ற மலையாளப் படத் தின் பத்திரிகையாளர் சிறப்புக் காட்சி நேற்றுமுன்தினம் திரையிடப்பட்டுள்ளது.

தமிழ் ஈழப் போராளிகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார்கள் என உணர்வுள்ள தமிழ்ப் பத்திரிகையாளர்கள் பலர் கொந்தளித்தார்கள்.

சிங்களத்தையும் பௌத்தத்தையும் உயர்த்திப் பிடிக்கும், தமிழினத்தைக் காட்டுமிராண்டிகளாகச் சித்திரிக்கும் இந்தப் படத்தை, சமய சகுனிப் படமாகவே கருதுகிறோம். தமிழினத்துக்கும் தமிழீழ விடுதலைக்கும் களங்கம் கற்பிக்கவே இப்படத்தை இங்கு வெளியிட முனைகிறார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. இதன் பின்னணியில் மறைந்துள்ள சதி எதுவாக இருந்தாலும் அதனை வெளிக் கொணர்வோம்.

இந்தப்படம் வெளியானால் அது மக்கள் மத்தியில் ஈழப்போராட்டம் பற்றிய தவறான கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தும். பல்லாயிரக்கணக்கான போராளிகளின் தியாகத்தையும் வீரத்தையும் கொச்சைப்படுத்தும் பதிவாகவும் அது அமையும். அதற்கு இடம் தர முடியாது.

கேரளாவிலிருந்து வந்து ஈழப் போராட்டத்தையும் தமிழர்களின் மனநிலையையும் வேறு கண்ணோட்டத்தோடு புரிந்து கொண்டிருக்கும் உங்களுக்கு எங்களின் வேதனை புரியாது. தமிழ் ஈழ விடுதலைப் போரின் அடியோ, முடியோ தெரியாமல் தற்குறித்தனமாக எடுத்திருக்கும் படம் இது. இந்தத் தவறான படத்துக்கு தமிழ் மண்ணில் இடம் கிடையாது.

மீறித் திரையிட முயன்றால், தமிழகத்திலும், உலகில் தமிழ் மக்கள் வாழும் எந்தப் பகுதியிலும் இந்தப் படத்தைத் திரையிட விடமாட்டோம் என்று எச்சரிக்கிறோம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆப்கான் திருமண வைபவத்தில் தற்கொலைக் குண்டுதாரி திடீர்த் தாக்குதல்!

## 40 பேர் உயிரிழப்பு; 77 பேர் காயம்

கந்தகார், ஜூன் 11

தென் ஆப்கானிஸ்தானில் திருமண வைபவமொன்றில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். 77 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

தென் ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள வட. கந்தகார் மாகாணத்திலுள்ள ஆர்ஹான் டாப் மாவட்டத்தில் புதன்கிழமை இரவு உள்ளூர் நேரப்படி இரவு 9.30 மணிக்கு இப்பயங்கரக் குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நூற்றுக்கணக்கானோர் அமர்ந்திருந்த ஒரு திருமண வைபவத்துக்குள் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் புகுந்து, தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார். இதில் மரணித்துள்ளோரிலும், காயமுற்றோரிலும் பெரும் எண்ணிக்கையானோர் பெண்களும், குழந்தைகளுமாவர் என்றும் அவர் விவரித்தார்.

இந்த திருமண வைபவத்தில் கலந்து கொண்ட விருந்தினர்களில் அநேகர் உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளுடனோ, உள்ளூர் தீவிரவாதிகளுடனோ தொடர்புகொண்டவர்கள். இவர்களை இலக்கு வைத்தும் இக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கந்தகார் பொலிஸ் அதிகாரி சந்தேகம் தெரிவித்தார்.

கந்தகார் மாகாணத்திலிருந்து எதிர்வரும் மாதங்களில், தலிபான் தீவிரவாதிகள் முற்றாக வெளியேற்றப்பட்டுவிடுவார்கள் என நேட்டோ படையினர் சூளுரைத்த தருணத்தில் இத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலை தலிபான் தீவிரவாதிகள் நடத்தியிருக்கலாம் என்றும் அவர் விளக்கினார்.

அதேவேளை, இத்தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலில் தாங்கள் சம்பந்தப்படவில்லை என தலிபான் பேச்சாளர் காரி யூசுப் அஹ்மதி தொலைபேசி வாயிலாக ரொய்ட்டர் செய்திச் சேவைக்குக் குறிப்பிட்டுள்ளார்.

''ஆப்கானிஸ்தான் மண்ணை அந்நிய துருப்புகள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. அந்தத் துருப்புகளை வெளியேற்றுவதற்கான புனிதப்போரில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இந்நிலையில், எப்படி நாம் எமது அப்பாவி மக்களைக் கொல்வோம்?'' என்றும் அவர் வினவியுள்ளார்.

இக்குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது மனித குலத்துக்கே ஒவ்வாத குரூரமானதும், மிலேச்சத்தனமானதுமான ஒரு செயலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஹிட்லர் பிடியில் தப்பிய கடைசிச் சிப்பாய் மரணம்

லண்டன், ஜூன் 11

இரண்டாம் உலகப் போருக்குப் பின் 1944 இல் பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் 200பேரை பாதாள சிறையில் ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லர் அடைத்தார்.

அதிலிருந்து தப்ப முயற்சி நடந்தது. அதில் சிலர்தான் தப்பினர். மற்றவர்கள் சிக்கிக்கொண்டனர். அவர்களில் 50பேரை ஹிட்லர் சுட்டுக்கொன்றார்.

தப்பிப்பதற்கான இந்த முயற்சிதான் வரலாற்றில் 'கிரேட் எஸ்கேப்' என்று பெயர் பெற்றது. இந்தப்பெயரில் ஹொலிவுட் படமும் வெளியானது. எஞ்சியோர் சிறைக் காலத்தைத் தொடர்ந்தனர். அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் பலரும் இறந்துவிட, கடைசி வீரராக இருந்தவர் பிரிட்டனைச் சேர்ந்த ஜக் ஹாரிசன். இவர் தனது 97ஆவது வயதில் செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் பெனிக்னோ அகுய்னோ பெருவெற்றி!



மணிலா, ஜூன் 11

பிலிப்பின்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் பெனிக்னோ அகுய்னோ (வயது 50) வெற்றி பெற்றுள்ளார். பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தல் கடந்த மே மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது. எனினும், தேர்தல் முடிவுகள் செவ்வாய்க்கிழமைதான் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இத்தேர்தலில் சுதந்திர கட்சியைச் சேர்ந்த பெனிக்னோ அகுய்னோ சுமார் ஒரு கோடியே 52 இலட்சம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார். இவை பதிவான வாக்குகளில் 42 சதவீதம் ஆகும்.

இவருக்கு அடுத்த படியாக வந்த ஜோசப் எஸ்ட்ரடா சுமார் 95 இலட்சம் வாக்குகள் பெற்றுள்ளார். இவர் முன்னாள் ஜனாதிபதி ஆவார். ஜோசப் எஸ்ட்ரடா 1998 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெருவாரியான வாக்குகள் பெற்று வரலாற்றுச் சிறப்புவாய்ந்த வெற்றியை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அகுய்னோவின் தந்தை நினோய் அகுய்னோ பிலிப்பின்ஸில் பெர்டினனட் மார்கோஸ் தலைமையில் நடைபெற்றுவந்த சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துப் போராடியவராவார். இவர் 1983 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

புதிய ஜனாதிபதியாக அகுய்னோ ஜூன் 30 அன்று பதவியேற்பார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த எஸ்ட்ரடா, வெற்றிபெற்ற அகுய்னோவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் இரண்டாவது பெண் ஜனாதிபதியாக தற்போது பதவி வகித்து வரும் குளோரியா அரோயா, ஏற்கெனவே இரு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்து விட்டதால் அரசமைப்புச் சட்டப்படி இவர் இந்தமுறை மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை.

# அமெரிக்கா அளிக்கின்ற ஆயுத உதவிகளை இந்தியாவுக்கு எதிராக பாக். பயன்படுத்தாது

## வெளிவிவகார இணை அமைச்சர் பிளேக் தெரிவிப்பு

உலக அரங்கில்

வாஷிங்டன், ஜூன் 11

''அமெரிக்கா அளிக்கும் ஆயுத உதவிகள் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படமாட்டா என பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது. இந்த உறுதிப்பாட்டுக்கிணங்கவே பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகளை வழங்குகிறது.''

இவ்வாறு தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ரொபர்ட் பிளேக் வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்த பேசுகையில், ''பாகிஸ்தானில் ஏராளமான பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. அந்த அமைப்புகளை அழிப்பதற்காகவே ஏராளமான ஆயுதங்கள், நிதி உதவிகள் ஆகியவற்றை அமெரிக்கா வழங்கி வருகிறது. இந்த ஆயுதங்களை இந்தியா மீது பாகிஸ்தான் பயன்படுத்தாது. இதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்'' என்றார்.

''பாகிஸ்தானிலிருந்து செயற்படும் பயங்கரவாத அமைப்புகள் இந்தியாவை மட்டுமல்லாமல் அமெரிக்காவையும் குறித்துவைத்து செயற்படுகின்றன. எனவே, அவற்றை அழிப்பதற்கு பாகிஸ்தானுக்கு உதவி வருகிறோம். இதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். மிகப் பெரிய ஜனநாயக நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுக்கிடையே உள்ள பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்கப் படைகள் அங்கு முகாமிட்டுள்ளன. ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தானிலேயே அமெரிக்கப் படைகள் தங்கிவிடுமோ என்ற அச்சத்தில் இந்தியா உள்ளிட்ட நாடுகள் இருந்தன. தற்போது ஆப்கன் மீதான அமெரிக்கக் கொள்கையை இந்தியா புரிந்துகொண்டுள்ளது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''வாஷிங்டனிலுள்ள வெளியுறவுக் கொள்கை சபையில் சமீபத்தில் பேசிய இந்திய பிரதமர் மன்மோகன் சிங், ஈரானின் அணு ஆயுத விவகாரத்துக்கு இந்தியா ஆதரவு அளிக்காது என்று தெளிவாகக் கூறினார். ஈரானின் அணு ஆயுத விவகாரத்தில் இந்தியா எடுத்த முடிவை அமெரிக்கா பாராட்டுகிறது'' என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

''இந்தியா - அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. இவை மகிழ்ச்சிக்குரியவை. முதல்முறையாக அமெரிக்க அமைச்சர்கள், அதிகாரிகள், இந்திய அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர். இது இந்திய - அமெரிக்க வரலாற்றில் முக்கியமான சாதனையாகத் திகழும். சமீபத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தேறியது. இவை இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேம்படுத்தும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''மும்பைத் தாக்குதல் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ஹெட்லி தற்போது அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஹெட்லியிடம் நேரடியாக விசாரணை நடத்துவதற்காக இந்திய அதிகாரிகள் அமெரிக்கா வந்துள்ளனர். ஹெட்லியிடம் விசாரணை நடத்தும் விவகாரத்தில் அமெரிக்கா உதவ முன்வந்துள்ளமை குறித்து இந்திய அரசு மகிழ்ச்சியாக உள்ளது'' என்றும் ரொபர்ட் பிளேக் குறிப்பிட்டார்.

# பிரிட்டனைவிட்டு வெளியேறிய டாக்டர்களை மீண்டும் வர அழைப்பு

லண்டன், ஜூன் 11

ஐரோப்பிய நாடுகளைச் சேராத பிற நாடுகளைச் சேர்ந்த டாக்டர்களுக்கான குடியேற்ற விதிமுறைகளில் பிரிட்டன் அரசு கெடுபிடி விதித்தமையை அடுத்து, அங்கு டாக்டர்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மருத்துவப் பணிகளில் கடுமையான தேக்கநிலை நிலவுகிறது. இதனால், இந்த டாக்டர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்க பிரிட்டன் அரசு திட்டமிட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளைச் சேராத, இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளைச் சேர்ந்த ஏராளமான டாக்டர்கள் பிரிட்டனில் பயிற்சி டாக்டர்களாகப் பணியாற்றி வந்தனர். இந்த எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த, 2006இல் பிரிட்டன் அரசு குடியேற்ற விதிமுறைகளில் கெடுபிடி காட்டியது.

இதன்படி, ஐரோப்பிய நாடுகளைச் சேராத, பிற நாடுகளைச் சேர்ந்த பயிற்சி டாக்டர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பிரிட்டனில் தங்கியிருக்க முடியாது என அறிவிக்கப்பட்டது. இதனால், ஏராளமான இந்திய டாக்டர்கள், அங்கிருந்து தாய்நாடு திரும்பினர். பிற நாடுகளைச் சேர்ந்த டாக்டர்களும், தங்களின் தாய்நாடுகளுக்குத் திரும்பினர்.

இதன்காரணமாக, தற்போது பிரிட்டனில் டாக்டர்களுக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பிரிட்டனின் தேசிய சுகாதார சேவைத்துறை போதிய டாக்டர்கள் இல்லாமல் தடுமாறி வருகிறது.

பிரிட்டனில் தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள கூட்டணி அரசுக்கு இந்த விடயம் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளைச் சேர்ந்த பயிற்சி டாக்டர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள குடியேற்றத் துறை கெடுபிடிகளைத் தளர்த்தத் திட்டமிட்டுள்ளது. இதன்படி, இந்த டாக்டர்களுக்கான விசாகாலத்தை, தற்போதுள்ள இரண்டு ஆண்டுகளி லிருந்து, நான்கு ஆண்டுகளாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவிருப்பதையொட்டி ஜோஹன்ஸ்பேர்க்கில் தீவிர பயிற்சி பெற்றுவரும் தென்னாபிரிக்க அணி வீரர்களை ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா சந்தித்து கலந்துரையாடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகைக்குத் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு அலுவலகம் அமைக்கக்கூடிய வகையில், யாழ்.பிரதானவீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதியை அண்டிய பகுதியில் (ஏதாவது பிரபல Areas) வீடு, கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0773688032, 0777268229


# கேள்வி அறிவித்தல்

## கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, தென்மராட்சி-2010

## Education Sector Development Programme Grant No IDAH-196 CE

1. இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு உலக வங்கியிடம் இருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கென செலவுக்கான மானியத்தைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை, வடமாகாண கல்வி அமைச்சின் ESDP நிதி ஒதுக்கீட்டினூடாக கீழ்க் குறிப்பிடப் பட்ட கட்டட நிர்மாண / திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.
2. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் 2010 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 14.06.2010 ஆம் திகதியிலிருந்து 21.06.2010 ஆம் திகதி ந.ப. 12 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 24.06.2010 ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றை தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
4. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்ககூடிய பாதுகாப்புப்பணம் மற்றும் மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா. 750 ஐ தென்மராட்சி கல்வி வலயத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை பாடசாலை வேலைப்பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ள முடியும். கீழ் உள்ள வேலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கட்டணமேதுமின்றி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும் | கட்டுமான மதிப்பீடு | பாதுகாப்பு வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (கட்டடத் திருத்தம்) | 626,402.00 | 3350.00 | M8/C9 |
| 02 | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 327,256.95 | 1750.00 | M8/C9 |
| 03 | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 434,488.00 | 2300.00 | M8/C9 |
| 04 | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 362,408.70 | 2170.00 | M8/C9 |
| 05 | யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதயா மகா வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 327,805.95 | 1950.00 | M8/C9 |
| 06 | யா/கெற்பேலி அ.த.க. பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 364,573.45 | 2150.00 | M8/C9 |
| 07 | யா/அல்லாரை அ.த.க.பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 683,911.35 | 4100.00 | M8/C9 |
| 08 | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 941,763.06 | 10000.00 | M7/C8 |
| 09 | யா/கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 320,902.55 | 1950.00 | M8/C9 |
| 10 | யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 239,183.00 | 1450.00 | M8/C9 |
| 11 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (கட்டடத் திருத்தம்) | 702,889.00 | 4200.00 | M8/C9 |
| 12 | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் (கட்டடத் திருத்தம்) | 256,518.00 | 1350.00 | M8/C9 |
| 13 | யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை (தற்காலிக கொட்டகை அமைத்தல்) | 462,273.00 | 2500.00 | M8/C9 |
| 14 | யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை (தற்காலிக கொட்டகை அமைத்தல்) | 948,924.50 | 4750.00 | M8/C9 |
| 15 | யா/கரம்பை அ.மி.த.க. பாடசாலை (தற்காலிக கொட்டகை அமைத்தல்) | 462,273.00 | 2500.00 | M8/C9 |
| 16 | யா/வரணி வடக்கு அ.த.க. பாடாசாலை (மலசலகூடத் திருத்தம்) | 91,641.50 | 500.00 | M8/C9 |
| 17 | யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலம் (மலசலகூடத் திருத்தம்) | 141,262.36 | 750.00 | M8/C9 |

5. கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றயதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
6. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல்வேண்டும். இரண்டு கடித உறையும் வேறுபெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விபரமும் ஒப்பந்தக்காரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு, தலைவர், கேள்விச் சபை, வலயக் கல்வி பணிமனை, தென்மராட்சி எனவிலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 24.06.2010 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்படல் வேண்டும்.
7. மேற்படி வேலைகளுக்கு கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப்புத்தகத்தினை மேலதிக மாகாண கல்விப் பணிமனையின் பாடசாலை பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து பங்கெடுப்பதற்கான சிபாரிசினை பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இந்த நடைமுறை விலக்களிக்கப்பட்டுள்ளது.
8. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்க முடியும்.

திருமதி.பிரேமகாந்தன்
(சி/568325) வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.


# கண்காட்சி

FRIEDRICH EBERT STIFTUNG
VILUTHU Center For Human Resource Development
Colombo College of Politics

நிறுவனங்கள் இணைந்து நடத்தும்ஐரோப்பாவில் சமூக ஜனநாயகக் கோட்பாடுகள் வளர்ச்சியடைந்த வரலாறு பற்றிய கண்காட்சி

இடம்: யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: ஜூன் 12,சனிக்கிழமை பி.ப 1மணியிலிருந்து மாலை 6 மணிவரை

- ஜூன் 13, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலி ருந்து மாலை 6 மணிவரை
- கலந்துரையாடல்களுக்கு இடமுண்டு
- மாணவர்களுக்கு விசேட பயனுண்டு
- அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாட்டுக் குழுவினர்,
விழுது நிறுவனம்.


# 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

மண்ணில் 08 ★ 02 ★ 1936



விண்ணில் 12 ★ 05 ★ 2010

## அமரர் பாலசண்முகம் நாகரத்தினம்

### (அல்வாய் வடக்கு, அல்வாய்)

வைகாசி பன்னிரண்டில் இறைபதமடைந்து
இன்றுடன் முப்பத்தோராம் நாள் ஆனதுவோ எம் குலவிளக்கே
தங்கள் நினைவு என்றென்றும் எம் மனதில்
நீங்காத நினைவலைகளாய் வலம் வருகின்றதே எங்கள் குடும்ப விளக்கே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.


இன்று (11.06.2010) வெள்ளிக்கிழமை அமரரின் இல்லத்தில் காலை நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி விநாயகர் ஆலய வீதி,
அல்வாய் வடக்கு.
தொ.பே:0213737802

கணவர்: வே.பாலசண்முகம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(99326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குழுவினர் நேற்றுமுன்தினம் இந்திய ஜனாதிபதியின் வாசஸ்தலமான ராஷ்டிர பதி பவனில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப்பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

# வாகனங்களின் வரிக்குறைப்பு ஏன்?

## நாடாளுமன்றத்தில் அரசு விளக்கம்

கொழும்பு, ஜூன் 11

யுத்தம் முடிவுற்ற சூழ்நிலையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கவும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யவுமே வாகனங்கள் மற்றும் சில இலத்திரனியல் உபகரணங்களின் வரியை அரசு குறைத்துள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

தொலைத் தொடர்புகள் திருத்தச் சட்டமூல விவாதத்துக்கு பதிலளித்து, அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவுற்ற நிலையில் சுற்றுலாத் துறையில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்துறைக்கு பெருமளவில் வாகனங்கள் தேவைப்படுகின்றன. வாகனங்களைக் கொள்வனவு செய்து சுற்றுலாத் துறைப் பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கத்திலேயே அரசு வாகனங்களுக்கான வரியை 50 சதவீதத்தால் குறைத்துள்ளது.

1,000 இயந்திர வலு கொண்ட பெற்றோல் வாகனமொன்றை இறக்குமதி செய்யும் போது 183 சதவீத வரி செலுத்த வேண்டியிருந்தது. அதாவது 100இற்கு 183 சதவீத வரி செலுத்தவேண்டியிருந்தது. வாகனங்களின் இயந்திர வலு அதிகரிக்கும்போது வரியும் அதிகரித்தது. இப்போது 90சதவீத வரியே அறவிடப்படுகின்றது. இதனால் காரின் விலை மட்டுமன்றி வான் மற்றும் லொறி, ட்ரக் ஆகியவற்றின் விலைகளும் குறையும்.

மோட்டார் சைகிள்கள் விலை குறித்து எதிர்க்கட்சிகள் பெரும் சர்ச்சையை எழுப்பின. மோட்டார் சைக்கிள்கள் மீதான சுங்க வரி 15 சதவீதமாக இருந்தது. இதன் மீது 15 சதவீத மேலதிக வரி விதிக்கப்பட்டது. இதற்கும் பதிலாக 5சதவீத சுங்க வரியே அறவிடப்படுகின்றது. இதுவரை விதிக்கப்பட்ட 20சதவீத 'செஸ்' வரிக்குப் பதிலாக 20 சதவீத உற்பத்தி வரி விதிக்கப்படுகின்றது.

தேசிய உற்பத்தியாளர்களைக் கருத்திற்கொண்டு மூலப்பொருள்களின் செஸ் வரியை ரத்துச்செய்துள்ளோம். இதனால் வெளிநாட்டு உற்பத்தியாளர்களுடன் போட்டியிடும் நிலை தேசிய உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் - என்றார்.

(ஓ-சி)

# ஐ.தே.கட்சி எம்.பி. மீதான தாக்குதல்; விசாரணைக்கு சபாநாயகர் இணக்கம்

கொழும்பு, ஜூன் 11

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவினால் நேற்று நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே அவர் இதற்கு இணங்கியுள்ளார்.

சிலாபத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின்போது புத்தளம் மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார தாக்கப்பட்டார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சாந்த அபயசேகர என்பவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

# ஒரு கேள்விக்கு 31 ஆயிரத்து 500 ரூபா!

கொழும்பு, ஜூன் 11

நாடாளுமன்றில் எதிர்க்கட்சி எம்.பிக்களால் அமைச்சர்களிடம் ஒரு தடவை கேட்கப்படும் கேள்விக்கு 31 ஆயிரத்து 500ரூபா செலவாகிறது என்று ஐ.தே.கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான நேரத்தின் போதே ரவி கருணாநாயக்க இதைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய ஒழுங்குப் புத்தகத்தில் ரவி கருணாநாயக்கவின் கேள்விகள் மூன்று உள்ளடக்கப்பட்டிருந்தன. அந்தக் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதிலளிக்கவில்லை. அவற்றுக்குப் பதிலளிக்க அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன கால எல்லையைக் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கேள்வியை ஒருதடவை கேட்பதற்கு 31 ஆயிரத்து 500 ரூபா செலவாகிறது. அந்தக் கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்கும்போது மீண்டும் மீண்டும் செலவுகள் வருகின்றன. ஆகவே, செலவைக் குறைக்க அமைச்சர்கள் முதல் தடவையிலேயே பதிலளிப்பது நல்லது என்று ரவி கருணாநாயக்க கூறினார். (அ-சி)

# இலங்கையில் முதலீடு குறித்து ஆராய வருகின்றனர் அம்பானி சகோதரர்கள்

கொழும்பு, ஜூன் 11

இந்தியாவின் பிரபல தொழில் அதிபர்களான அம்பானி சகோதரர்கள் இலங்கையில் முதலீடு செய்வது குறித்து ஆராய அடுத்தவாரம் இலங்கை வருகின்றனர் என பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சர்வதேச தொலைத் தொடர்புகள் திருத்தச் சட்டமூலத்தை அவர் சபையில் சமர்பித்துப் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. கேள்வி நேரத்தின் பின்னர் சமர்பிக்கப்பட்ட இச்சட்டமூலத்தின் மீது அமைச்சர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

இன்று தொலைத் தொடர்புத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு தொலைபேசித் தொடர்பைப் பெற ஒருவருடம் வரை காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல வெளிநாடுகள் தொலைத் தொடர்புத் துறையில் இங்கு முதலீடு செய்துள்ளன. இந்தியா, மலேஷியா, ஆகிய நாடுகள் இலங்கையில் இத்துறையில் முதலீடு செய்துள்ளன. இன்று இலங்கையில் ஒரு கோடியே 40 லட்சம் தொலைபேசிகள் பாவனையிலுள்ளன.

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன் 11

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 821ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "D" என்ற ஆங்கில எழுத்தும் 15/29/38/49 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 17 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 290 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,820 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,94,123 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

# வெனிசுலாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''லத்தீன் அமெரிக்க நாடுகளில் தமது சர்வதேச வலையமைப்பை விஸ்தரிப்பதற்கு புலிகள் முயற்சிக்கின்றார்கள். அதற்கான தளமாக வெனிசுலாவைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். வெனிசுலா அரசின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற முயற்சிக்கின்றார்கள். ஆகவேதான் அகதிகள் என்ற போர்வையில் இந்நாட்டுக்குள் ஊடுருவுகிறார்கள். ஆஸ்திரேலியா நோக்கி 300 பேருடன் புறப்பட்ட புலிகளின் கப்பல் ஒன்று வெனிசுலாவுக்கு வருகிறது என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டவர்கள் வெனிசுலாவுக்கு வருவதன் நோக்கம் இதுவே ஆகும். ஆனால் இலங்கைக்கும் வெனிசுலாவுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான நட்பு உண்டு. இரு நாடு களின் ஜனாதிபதிகளும் மிக நெருக்கமான நண்பர்கள்.

இலங்கையில் முட்கம்பி முகாம்கள் என்று எவையுமே இல்லை. இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இல்லை. யுத்தக் குற்றங்களைப் புரியவே இல்லை. இவையெல்லாம் புலிகளின் பொய்ப் பிரசாரங்கள் என்று அந்தப் பத்திரிகைக்கு அவர் தெரிவித்தார். (ஓ-சி)

# ஜனாதிபதி குடும்பத்தவர்களின் அமைச்சுக்களுக்கே அதிக நிதி

## ஐ.தே.கட்சி எம்.பி. அகிலவிராஜ் விசனம்

கொழும்பு, ஜூன் 11

ஜனாதிபதியின் குடும்பத்தினர் அமைச்சர்களாகவிருக்கும் அமைச்சுகளுக்கு மாத்திரம் கடந்த வருடத்தை விட அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென ஐ.தே. கட்சியின் குருநாகல் மாவட்ட உறுப் பினர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

சுகாதாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

2010ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கு கடந்த வருடத்தை விட குறைவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் சுகாதார சேவை சீர்குலைந்துள்ளது. வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் இல்லை. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் தனியார் பார்மஸிகளிலேயே மருந்துகளைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. வறுமையில் வாடும் மக்கள் இம் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய முடியாமல் தவிக்கின் றனர்.

சில வைத்தியசாலைகளில் போதுமான வைத்தியர்கள் இல்லை. இதனால் முறையான சிகிச்சை பெற முடியாமல் நோயாளர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

சுகாதார அமைச்சு தரம் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்து தலசீமியா நோயாளருக்கு வழங்குவதால் ஆறுபேர் இறந்துள்ளனர். இத்தனை பிரச்சினைகள் இருக்கும்போது, ஜனாதிபதியின் குடும்பத்தாரது அமைச்சுக்களுக்கு மாத்திரம்தான் இம்முறை அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார்.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வருகையை எதிர்த்து நேற்றும் கோயம்புத்தூர் சட்டத்தரணிகள் போராட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் நகரத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். அவர்கள் மஹிந்தவின் கொடும்பாவியையும் எரித்தனர்.

மஹிந்தருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். மஹிந்த ஒரு போர்க்குற்றவாளி என்றும் தமிழினப் படுகொலையாளி என்றும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்ற விசாரணைகள் மௌனமாக இருக்கின்றது என்றும் அதிருப்தி வெளியிட்டனர். அவர்கள் இந்தியாவின் மத்திய அரசுக்கு எதிராகவும், காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

# குப்பிளான் விவசாயிகள் 60 பேருக்கு கடனுதவி

குப்பிளான், ஜூன் 11

குப்பிளான் விவசாய சம்மேளனத்தின் 60 அங்கத்தவர்களுக்கு விவசாயக்கடன் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு சம்மேளன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக் கிளை இக்கடனை வழங்கவிருக்கிறது.

விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கியின் வட பிராந்திய பொது முகாமையாளர் கே.ஈ.டி சுமணசிறியும், கௌரவ விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி சதீசனும் கலந்து கொள்வர். (ஒ-1)

## தமிழ் மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வைக் கொடுக்கின்றமைக்கான மஹிந்தரின் கடந்தகால ஈடுபாட்டைப் புகழ்ந்து மேன்மைப்படுத்துகின்றமையை விட்டுவிட்டு அதிகாரப் பரவலாக்கல் மூலம் அப்பிரச்சினைக்கு உரிய தீர்வுகாண வேண்டும் என இந்தியா அவருக்கு அழுத்தம் தரவேண்டும் .

அத்துடன் போர்க்கால இலங்கையில் ஜனநாயக உரிமைகள், ஊடக சுதந்திரம் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்றும் அவருக்கு வலியுறுத்த வேண்டும்.

ஜனநாயகம் பிறப்புரிமையாகும். அதைத்தான் இலங்கைப் பிரஜைகள் ஜனாதிபதி மஹிந்தர் தலைமையிலான புதிய அரசிடம் எதிர்பார்க்கின்றனர். அதுவே அவர்களின் அபிலாஷை. அதை ஏற்படுத்திக் கொடுக்கின்றமை மஹிந்தரின் கடமையாகும்.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்து விட்டது.மனித வளங்களையும் வீணடித்து விட்டது.

எனவே இலங்கையில் தற்போது நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்;சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும்; சுற்றுலாத் துறை விருத்தி செய்யப்பட வேண்டும்.

இவைபோன்ற முன்னெடுப்புகளை இலங்கை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் உடனடியான-காத்திரமான தலையீடும், பங்களிப்பும் அவசியம். சாதகமான அரசியல் சூழ்நிலையை தக்கவைத்திருத்தல் மூலமே இலங்கையில் இப்பணிகளை எல்லாம் முன்னெடுக்க முடியும் என்பதை இந்தியா புரிந்து நடக்க வேண்டும். அத்துடன் இலங்கையில் ஜனநாயக கலாசாரத்தை நிலைநாட்டுவதன் மூலமாகவே இலங்கையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் இலங்கையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் மதித்து நடக்கப்பட வேண்டியது அவசியம். (ஒ-சி)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி மக்களின் சுகாதார விடயம் தொடர்பில் அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டும். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் - என்றார். (ஒ-சி)

## இந்திய - இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியும் உடன்படிக்கைகளில் உள்ளவற்றறை அறிந்திருக்க வில்லை என்றும் அவர் கூறினார்.

செய்துகொள்ளப் போகும் உடன்படிக்கையின் விவரங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால்தான் அவற்றில் காணப்படும் நன்மை - தீமைகள் குறித்து கலந்துரையாட முடி யும். ஜனாதிபதி தற்போது கையெழுத்திட்டுள்ள உடன்படிக்கை மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்குக் கிடைக்க போகும் நன்மை என்ன?. அவை எந்தளவுக்கு மக்களுக்கு நன்மை தரும் என்பதை தாம் அறியவில்லை எனவும் அத்தநாயக்க தெரிவித் தார்.

இதனால் ஜனாதிபதி கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். இதேவேளை, இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள ஜனாதிபதி ஆட்சிக்காலம் குறித்த அரசியல் சாசன மாற்றத்திற்கு தாம் கண்டனம் தெரிவிக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

உலக வல்ல ரசான அமெரிக்கா வில்கூட இரு தடவைகளே பதவி வகிக்கலாம் எனவும், அதுவும் 8 ஆண்டுகள் மாத் திரமே எனவும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையிலோ இரு தடவைகளில் 12 ஆண்டுகள் ஜனாதிபதிப் பதவி வகிக் கலாம் எனவும் கூறினார்.

இதனால் இந்த நாட்டிலே ஜனாதிபதியின் பதவிக் காலம் இரு தடவை கள் போதுமானது எனவும் அவர் கூறினார். (ஒ-சி)

## அமைச்சர் டக்ளஸை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநாவுக்கரசு என்பவரைச் சுட்டுக் கொன்றார் என்ற வழக்கில் டக்ளஸுக்கு எதிராக சென்னை நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது. அத் துடன் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 வயதுச் சிறுவனைக் கடத்தினார் என் றும் இன்னொரு வழக்கு இவருக்கு எதிராக இந்நீதிமன்றில் கிடப்பில் உள்ளது.

இந்நிலையில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கும் பிடியாணை உத்தரவின் பேரில் இவ்வழக்குகளுக்காக இவரைக் கைது செய்ய வேண்டும் என்று கோரி தமிழக மக்கள் உரிமைக் கழக செயலாளரான வழக்கறிஞர் புகழேந்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். புகழேந்தியின் வழக்கு விசாரிக்கப்பட உள்ளது.

இந்நிலையில், அரசின் விருந்தாளியான அமைச்சர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்று தமிழக பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்துள்ளன.

ஆனால் இக்கைது நடவடிக்கையை சட்டரீதியாக எதிர்கொள்ளத் தாம் தயார் என்று அமைச்சர் அறிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அக்காலப்பகுதியில் இடம்பெற்றன என்று கூறப்படும் சம்பவங்களுக்கு இரு நாடுகளாலும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்றும், எனவே தமக்கு எதிரான வழக்குகளும் பிடியாணை உத்தரவுகளும் செல்லுபடியற்றன என்றும் அவர் விளக்கம் அளித்துள்ளார். (ஒ-சி)

## அமைதி நிலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகில் உள்ள தீவு நாடுகளில் இலங்கையில்தான் அமைதி நிலை மிகவும் மோசமாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உச்சக் கட்டமாகக் கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த யுத்தம், அதனால் ஏற்பட்ட பேரழிவுகள், மனித உரிமை மீறல்கள் ஆகியனவே இலங்கையின் இந்தநிலைமையில் செல்வாக்குச் செலுத்தி இருக்கின்றன என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அமைதி நிலையும் இலங்கையைப் போலவே மிகவும் மோசமாக இருக்கின்றது என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டுத் தனியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிப் பிரதேசத்தில் 3000 அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கிவந்தன எனவும், இவை புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டன என புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, மீண்டும் ஒரு முறை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வன்னியில் கடமையாற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது என அரசு அறிவித்துள்ளது .

இதேவேளை, வன்னி மக்களுக்கு அதிகளவான உதவிகள் தேவைப்படுவதாகவும் இதனால் தொண்டு நிறுவனங்கள் உதவிகளை நிறுத்தக் கூடாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

## வீடியோக்.....

இருந்தன எனவும் சந்தேக நபரை அதிரடிப்படையின் விசேடக் குழுவொன்று கைது செய்திருக்கிறது எனவும் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார். சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.


"வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்"

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை

அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

வசந்தோற்சவ விஞ்ஞாபனம் (தொட்டி திருவிழா)

11.06.2010 வெள்ளிக்கிழமை

மாலை 4.00 மணி கும்ப பூஜை
மாலை 4.30 மணி மூலஸ்தான பூஜை
மாலை 5.00 மணி தம்ப பூஜை
மாலை 5.30 மணி வசந்த மண்டப பூஜை
மாலை 5.45 மணி யாக தரிசனம்
மாலை 6.00 மணி கோபுரவாசல் தரிசனம்
மாலை 6.30 மணி அம்பாள் தொட்டியில் எழுந்தருளல்
மாலை 6.45 மணி தொட்டியில் அம்பாளுக்கு விஷேட பூஜை
மாலை 7.00 மணி திருவூஞ்சல் பாமாலை ஓதல்
மாலை 7.30 மணி விஷேட மேளக் கச்சேரி
மாலை 8.30 மணி அம்பாள் தொட்டியிலிருந்து அவரோகணம்

குறிப்பு: அன்றைய தினம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அன்ன ஊஞ்சலில் அன்னை வீரமாகாளி விஷேட அனந்த சயனத்தில் காட்சி தருவார்.

மங்கள வாத்தியம்
1. ஈழ நல்லூர் உதய சங்கர் குழுவினர்
2. இணுவில் NR. சின்னராசாவின் புதல்வர்களான ரவி, சுதா மற்றும் தென் இந்தியக் கலைஞர்களும் இன்னும் பல கலைஞர்களும் பங்குபற்றும் விசேட தவில் நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும்.

(சி/568307)

தேவஸ்தானமும்
S.R.T சண்முகநாதன் குடும்பத்தினரும்.



Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஐப்பசி மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் 05.06.2010 ஆரம்பமாகின்றன.

GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 07799271[illegible]


## மரண அறிவித்தல்

### செல்வரட்ணம் சண்முகநாதன் (சண்)

ஈச்சமோட்டையைச் சேர்ந்த செல்வரட்ணம் சண்முகநாதன் (சண்) 08.06.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் 09.06.2010 அன்று உதயனில் வெளிவந்த மரண அறிவித்தலில் பின்வரும் பெயர்கள் தவறிவிட்டன.

லோகேஸ்வரியின் (பேபி) அன்புச் சகோதரனும் சு.முருகதாஸின் (தாஸ்) அன்பு மாமனாரும், பெரியதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், சோதிமணியின் (லக்குமி) அன்பு மைத்துனரும் என்பதை சேர்த்துக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தா.ஈசன்
(மைத்துனர், தபால் நிலையம், யாழ்ப்பாணம்)
ஈச்சமோட்டை.


கணக்கீடு
திரு. பாலகஜன் (H.N.Dip.-in-Acc.)
BEACON
யாழ்.நகர்
[வெலிங்டன் சந்தி அருகில்]
A/L 2011, A/L 2012
"A" தரச் சித்திக்கு உத்தரவாதம்
வங்கி இணக்கக் கூற்று
தனிப்பாட
அனுமதி உண்டு

கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய மே-ஜூன் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்துவிட்டன
உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்
கற்சுமி, 166, நாவலர்வீதி, யாழ்.

வணிகக்கல்வி Paper Class-2011
ஆரம்பம்: 12.06.2010 Sat. 2-3Pm திரு.யசோ
ஆரம்ப அலகிலிருந்து துரித மீட்டல்
விக்னா கல்வி நிறுவனம்
52.ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

யாழ்.பேராதனை G.A.Q
மாணவர்களுக்கான வரலாறு வகுப்புகள் நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு 2010 : 8 - 9 am
2011 : 12 - 1 am
ஆசிரியர் S.S.தாஸ்
Beacon
(C-868110)

தேவை
கொம்பியூட்டர் தமிழ், ஆங்கிலம் ரைப்செற்றிங் செய்வதற்கும், பான்சி ஹவுசுக்கும் பெண் பிள்ளைகள் தேவை. தொ.பே.இல: 0776176794, இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

மீண்டும் கணித வகுப்புக்கள் ஆரம்பம்
மோகன் ஆசிரியரினால் கோண்டாவில், திருநெல்வேலியில் நடத்தப்பட்ட கணித வகுப்புக்கள் யாவும் மீண்டும் அதே இடத்தில் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: ஆசிரியர் மோகன்
0212227013, 0214905081

SP அகவை எட்டில் ஷாம்பவி தடம் பதிக்கின்றாள்

புத்தம் புதிய திருமண அழைப்பிதழ்கள், மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள், விளம்பரப் பிரசுரங்கள் லேபல்கள் மற்றும் பாடசாலைகள் நிறுவன சஞ்சிகைகள், மற்றும் பொலித்தீன், துணி, பிளாஸ்ரிக் என்பவற்றில் புதிய நவீன டியிற்றல் முறையில் அச்சமைப்பு, பொலிமர் இறப்பர் முத்திரைகள் குறித்த நேரகாலத்தில் நீங்கள் விரும்பிய டிசைன்களில் பெற்றிடவும் இன்றே விஜயம் செய்யுங்கள்.
ஷாம்பவி பதிப்பகம்

276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212224143, 0776184425
Gmail: shampavi2009@gmail.com
கரந்தன் வீதி, நீர்வேலி.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்11.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org